திருக்கோயில்

ஏப்ரல் 1977 ரூ. 1



இராமேச்சுரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் அம்பாள் சன்னதி
பிர்லாமண்டபம் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்ற சமயம்
கலந்துகொண்ட பெருமக்கள்.

முகப்பு :

கோவை மாவட்டம், ஈரோடு வட்டம், சென்னிமலை என்னும் ஊரின் திருக்கோயிலில் எழுந்தருளி விளங்கும் அருள்மிகு சென்னிமலை வேலவர், வள்ளி-தெய்வயானை அம்மையருடன் ஒருங்கு திகழும் பெருஞ் சிறப்புக் காட்சி.

COMMISSIONER OF TAMIL NADU ARCHIVES AND HISTORICAL RESEARCH
9 மே 1977

திருக்கோயில்

மாலை : 19 பிங்கள ஆண்டு—சித்திரைத் திங்கள் ஏப்ரல்—1977 மணி : 7

158628

சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்!

"திருக்கோயில்" திங்கள் இதழின் சந்தாதாரர்களாகச் சேர விருப்பமுள்ளவர்கள் :

"ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை-600 034"

என்ற முகவரிக்கு மணியார்டர் மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலம், சந்தா ஆண்டு எனக் கணக்கிடப்படும். இடைப்பட்ட காலத்தில் சந்தாதாரராக விரும்புவோர், முழு ஆண்டிற்குரிய சந்தாத் தொகை ரூ. 12/- உடன், இடைப்பட்ட காலத்தில் உள்ள மாதங்களுக்கு, ஒரு இதழ் ரூ. 1-/ வீதம் சேர்த்துப் பணம் அனுப்பிச் சந்தாதாரர் ஆகலாம்.

தனிப்பட்ட சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் நேரடியாக, ஆணையர் அலுவலகத்திற்கே மணியார்டர் மூலம் பணம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பழைய சந்தாதாரர்கள், கடிதம் எழுதும் பொழுதும், பணம் அனுப்பும்பொழுதும், தங்கள் சந்தா எண்ணையும் தவறாமல் தெரிவித்து உதவினால்தான், உடனுக்குடன் ஆவன செய்ய வசதியாக இருக்கும். புதிய சந்தாதாரர்கள் பணம் அனுப்பும்பொழுது, மணியார்டர் கூப்பனில், புதிய சந்தா என்பதைக் குறிப்பிடுமாறும், சரியான முழு முகவரியைப் பின்கோட் எண்ணுடன் தெரிவிக்குமாறும், கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளிநாட்டுச் சந்தாதாரர்களின் முகவரிகள் அனைத்தும் செவ்வனே பதிவுசெய்து வரிசைப்படுத்தப் பெற்று அவர்கள் எல்லோருக்கும் முறையாக இதழ்கள் அனுப்பப்படுகின்றன. தற்பொழுது வெளிநாட்டுச் சந்தாதாரர் ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு அஞ்சல் செலவு மட்டுமே ரூ. 9.60 ஆகின்றது. ஆதலால் வெளிநாட்டுச் சந்தா, ரூ. 15/-ல் இருந்து ரூ. 20/ ஆக ஜனவரி 77 முதல் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுச் சந்தாதாரர்கள் அவ்வப்போது தங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொருளடக்கம்

ஸ்ரீ வைஷ்ணவத் திவ்விய தேசங்கள்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.,

திருவள்ளூர் அருள்திரு வீரராகவப்பெருமாள் திருக்கோயில் —ஆசிரியர்

தலவரலாற்றுக் குறிப்புகள்
—ஆசிரியர்

பேதையும் மேதையுமான சீதை
—திரு. புரிசை சு. முருகேச முதலியார்

கொடிக்கம்பம் நாட்டுவிழாச் சிறப்புரை
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.,

வாழ்த்துச் செய்தி
—திரு. ஜி. எஸ். சேஷாத்திரி, ஐ.ஏ.எஸ்.,

இராம காதையில் வண்டோதரி
—திரு. மு. முத்துக்கிருஷ்ணன், எம்.ஏ., பி.டி.,

ஆலயத் தத்துவ விளக்கம்
—திரு. குமாரசாமி குருக்கள்

பக்தி இலக்கியத்தில் அணிகள்
—திரு. செ. வைத்தியலிங்கன், எம்.ஏ., எம்.லிட்.,

சைவசித்தாந்த சாத்திரங்கள்
—திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.,எல்.டி.,

போரேறு நுண்பொருள்கள்
—ஸ்ரீமத். பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்

உயிர் என வியத்தல்
—திரு ந. ரா. முருகவேள், எம்.ஏ.,எம்.ஓ.எல்.,

ஆசியுரை
—ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்

காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் அருளுரைகள் —ஆசிரியர்

ஆசிரியர் : ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

ஸ்ரீவைஷ்ணவத் திவ்விய தேசங்கள்

(ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,)

முன்னுரை :

நமது இந்தியப் பாரததேசம் உலகிலேயே மிகவும் ஒப்புயர்வற்ற சிறப்புடையது. பிற தேசங்களை நோக்க, நமது இந்தியப் பாரத நாடு மிகவும் புண்ணிய பூமியாகும். தொன்று தொட்டுப் பெரியவர்கள் பலரும் இதனை உணர்ந்து வற்புறுத்தியிருக்கின்றார்கள். வினைப் பயன்களை நுகரவும், இறையருளைப் பெறவும், பெருந்தகைமை, கொடைவண்மை, தூய்மை, அமைதி ,உள்ளொளி, ஆன்மிகம் முதலிய உயரிய குணநலங்களைப் பெறவும், இப்புண்ணிய பூமியிற் பிறப்பது பெருந்துணை புரிகின்றது. எனவே, தேவர்களும்கூட இப்புண்ணிய பூமியில் வந்து பிறக்க விரும்புகின்றனர் என்கின்றார் மணிவாசகர். இங்ஙனம் விண்ணுலகத்துத் தேவர்களும் மண்ணுலகிற் போந்து வழிபட்டுள்ள தலங்கள் எண்ணில்லாத பல, நம் பாரத தேசத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ளன.

அத் தெய்வத் திருத்தலங்களின் பெருமையை அறிந்து கொள்ளவும், அங்கெல்லாம் சென்று கண்டு இறைவனைத் தரிசித்து வழிபட்டு உய்யவும், நாம் முயலுதல் வேண்டும். தெய்வத் திருத்தலங்களின் சிறப்பும், தல வழிபாட்டின் மேன்மையும் நாம் பெரிதும்உணர்ந்து போற்றுதற்குரியன. ஆழ்வார்களும், நாயன்மார்களும் தலயாத்திரை செய்து, தலங்கள் தோறும் சென்று, இறைவனைப் பாடிப்பரவி வழிபட்டு மகிழ்ந்திருக்கின்றனர். அத்தகைய அருளாளர்களும் ஞானிகளுமே, தலயாத்திரையையும், தல வழிபாட்டையும் இன்றியமையாப் பெருஞ் சிறப்பியற் கடமையாக கருதிக் கடைப்பிடித்திருக்கின்றனர் என்றால், நம்மனோர்க்கெல்லாம் தலவழிபாடு எவ்வளவு முதன்மை வாய்ந்தது என்பதனைச் சொல்லவேண்டுவதில்லை.

தலயாத்திரை :

தலயாத்திரையும் வழிபாடும் மேற்கொள்ளுவதனால், நாம் எய்தும் நலங்களுக்கு அளவேயில்லை. துன்பமும் துயரமும் நிறைந்த இவ்வுலகில், நம்முடைய குறுகிய வாழ்நாளில் நாம் அடையக் கூடிய ஏதோ ஒரு சில இன்பங்களில் உண்மையானதும், உயர்ந்ததும் ஒப்புயர்வற்றதும் தலயாத்திரைகளால் பெறும் இன்பமே எனலாம். தலயாத்திரையால் நாம் நம் கவலைகளை மறக்கின்றோம். நம் மாசுகள் அகன்று ஓரளவேனும் புனிதம் அடைகின்றோம். காணாத இடங்களையும் காட்சிகளையும் கண்டு களிக்கின்றோம். கேளாத செய்திகள் பலவும் கேட்டுணர்ந்து கிளர்ச்சியும் வளர்ச்சியும் பெறுகின்றோம்.

நாட்டின் பல பகுதிகளில் உள்ள பல மக்களைக்கண்டு பழகி, நாட்டு வளப்பங்களை அறிந்து கொள்கின்றோம். தலவழிபாட்டால் நம் உள்ளமும் உணர்வும், புத்துணர்ச்சியும் எழுச்சியும் பெறுகின்றன. நம் உள்ளம் விரிவடைகின்றது. உணர்வு பண்படுகின்றது. இறையருளும் பக்தியும் படிமுறையே நம்மிடம் வளர்ந்து ஓங்குகின்றன. நாம் நம் முன்னோர்களுடைய அருமை பெருமைகளையும், அழகிய வரலாறுகளையும், அரும்பெரும் செயல்களையும் கண்டும் உணர்ந்தும் களிப்புறுகின்றோம்.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் போன்ற சான்றோர்கள் பாடிய சிறந்த திருத்தலங்களுக்குச் சென்று தரிசிக்குங்கால், நமக்கும் அவர்களின் அருளாற்றல் ஓரளவு பதிகின்றது. காலமும் இடமும் வேறுபட்டுக் கடந்திருப்பினும், நாம் அவர்களோடு மானதத் தொடர்பு கொள்ளுகின்றோம். அவர்களை நாம் நேரே காண இயலாவிட்டாலும், அவர்களின் தொடர்பு பெற்ற தலங்களையும் கோயில்களையும் காணுகின்றபோது, ஒருவகையில் அவர்களை நேரே காண்பது போன்ற உணர்ச்சியும் மகிழ்ச்சியும் நமக்கு ஏற்படுகின்றன.

மனிதன் ஒருவன் எய்துதற்காம்
வாழ்வின் இன்பம் பலவற்றுள்
புனித நமது பாரதத்திற்
பொலியும் திவ்ய தேசங்கள்

எனும்நற் றலங்கள் கண்டுதொழும்
இன்பிற் சிறந்த தொன்றில்லை;
நனிநன் றுயர்ந்த அப்பேற்றை
நலமே அடைய முயன்றுய்வோம்! (1)

பொங்குநற் பக்தி வெள்ளப்
புணரியில் திளைத்து மூழ்கி
நன்குயர் ஆழ்வார் கள்தாம்
நலமிகப் பணிந்தி றைஞ்சி

மங்களா சாசனம் செய்
வைணவத் தலங்கள் யாவும்
இங்குநாம் கண்டு போற்றல்
இனிநற் கடமை யாகும் (2)

திவ்விய தேச யாத்திரை செய்தலின் சிறப்பைத் திருமங்கையாழ்வார் ''பதியே பரவித்தொழும் தொண்டர் தமக்குக் கதியே'' என்பதனுல் இனிது விளக்குகின்ருர். ''கண்டியூர் அரங்கம் மெய்யம் கச்சிபேர் மல்லை என்று மண்டினுர் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே?'' என்பதனுல் திவ்விய தேசங்களில் ஈடுபடாதவர்களுக்கு உய்யும் விரகு இல்லை என்றும் அவ்வாழ்வார் அருளிச் செய்கின்ருர்.

ஆதலின் பொய்கையாழ்வார் முதலாகத் திருமங்கையாழ்வார் முடிவாக உள்ள ஆழ்வார்கள் பதின்மரும், பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண் கொடியான ஆண்டாளும் பாடிய திவ்வியப் பிரபந்தங்களில் மங்களாசாசனம்செய்யப் பெற்றுள்ள நூற்றெட்டுத் திவ்விய தேசங்கள் பற்றிய சில குறிப்புகள், இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன.

தொண்டை நாடு: 22

(1) திருக்கச்சி அத்தியூர்:

இது செங்கற்பட்டு, அரக்கோணம் இருப்புப் பாதையில் உள்ள காஞ்சிபுரம் என்னும் நகரத்தின் ஒரு பகுதியாகிய, சிறிய காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜப்பெருமாள் கோயில். இங்கு உள்ள எம்பெருமானுக்குத் தேவராஜன், தேவப் பெருமாள், பேரருளாளன் முதலியபெயர்களும் வழங்கும். மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், பெருந்தேவித்தாயார், புண்ணியகோடி விமானம். அனந்த தீர்த்தம், வேகவதி நதி. பிருகு, நாரதர், பிரம்மா, அனந்தாழ்வான், கஜேந்திரன் முதலியவர்களுக்குப் பிரத்தியட்சம். பாசுரங்களில் பொதுவாகக் கச்சி என்று குறிக்கப்படும் இடங்களில் இத்தலமே கொள்ளப்படும். கோயில் (திருவரங்கம்), திருமலை (திருவேங்கடம்), பெருமாள் கோயில் (அத்தியூர்)என்னும் முக்கிய வைணவத் தலங்கள் மூன்றனுள், இஃது ஒன்று. ஐராவதம் என்னும் யானையே மலைவடிவம் கொண்டு இங்குப் பெருமாளைத் தாங்கியதனுல், இது அத்திகிரி என்றும், அத்தியூர் என்றும் பெயர் பெற்றது. இந்த அத்திகிரியை உத்திரவேதியாகக் கொண்டு பிரமதேவர் அசுவமேதயாகம் செய்ய, அதில் தோன்றிய புண்ணியகோடி விமானத்தில் பெருமாள் எழுந்தருளி வரம் கொடுத்தபடியால், வரதராசப் பெருமாள் என்ற சிறப்புக் காரணப் பெயர் ஏற்பட்டது. அத்திகிரியின் அடிவாரத்தில் அழகிய சிங்கப் பெருமாள் எழுந்தருளி இருக்கின்ருர். மிகவும் சிறந்த பெரிய புகழ்பெற்ற கோயில்.

''அத்தியூ ரான்புள்ளை யூர்வான், அணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேல்துயில்வான்,—முத்தீ
மறையாவான், மாகடல்நஞ் சுண்டான் தனக்கும்
இறையாவான் எங்கள் பிரான்''
—பூதத்தாழ்வார்.

சிறந்தஎன் சிந்தையும் செங்கண் அரவும்
நிறைந்தசீர் நீள்கச்சி யுள்ளும்,—உறைந்ததுவும்,
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே
தாங்கடவார் தண்துழா யார்.
—பேயாழ்வார்.

(2) திரு அட்டபுயகரம்:

இது செங்கற்பட்டு அரக்கோணம் கிளை இருப்புப்பாதையில், காஞ்சிபுரம் நிலையத்திலிருந்து ஒரு கல் தொலைவில், ஆடிசன்பேட்டைத் தேரடிக்கு அருகில் உள்ளது. ஆதிகேசவப் பெருமாள், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம், அலர்மேல் மங்கைத் தாயார், ககன ஆகிருதி விமானம், கஜேந்திர புஷ்கரிணி, சரபன் என்னும் அசுரனுடன் போர் செய்யப் பெருமாள் அட்ட புயங்களைத் தரித்தகோலம். கஜேந்திரனுக்குப் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம். அஷ்டபுஜம், அஷ்டபுயங்கம் எனவும் வழங்கும்.

தொட்ட படைஎட்டும் தோலாத வென்றியான்
அட்ட புயகரத்தான் அஞ்ஞான்று—குட்டத்துக்
கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்
தாள்முதலே நங்கட்குச் சார்வு.
—பேயாழ்வார்.

(3) திருத்தண்கா:

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில் உள்ளது, விளக்கொளிப் பெருமாள் கோயில் என வழங்கும். சிலர் 'விளக்கடி கோயில்' எனத் தவருக வழங்குவர். விளக்கொளிப் பெருமாள், தீபப் பிரகாசன், திவ்வியப் பிரகாசன். மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், மரகதவல்லித் தாயார், ஸ்ரீகர விமானம், சரசுவதி தீர்த்தம்சரசுவதிதேவிக்குப் பிரத்தியட்சம். வேதாந்த தேசிகர் என்னும் வைணவ சமயப் பெருஞ் சான்ருேர் திருவவதாரம் செய்த தலம்.

பொன்னை மாமணியை அணி ஆர்ந்ததோர்
மின்னை வேங்கடத் துச்சியிற் கண்டுபோய்,
என்னை ஆளுடை ஈசனை எம்பிரான்
தன்னை, யாம் சென்று காண்டும் தண்காவிலே

(4) திருவேளுக்கை:

இது காஞ்சிபுரம் நிலையத்தில் இருந்து 2 கல் தொலைவில், ஓர் ஏரியின் நடுவில் பூசையின்றி, உள்ளது. ''வேள் இருக்கை'' என்னும் இரு சொற்கள் வேளுக்கையென மருவியது. வேள்—விருப்பம். இறைவன் விரும்பி எழுந்தருளி இருக்கும் இடம் என்பது பொருள். முகுந்த நாயகர் கோயில் என வழங்கும். கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். கனக விமானம், கனக தீர்த்தம். முசுகுந்த அரசனுக்கும் பிருகுமுனிவருக்கும் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''மன்னும் மதிட்கச்சி வேளுக்கை ஆளரியை
மன்னிய பாடகத்தெம் மைந்தனை.''
—திருமங்கையாழ்வார்.

(5) திருப்பாடகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. பாண்டவ தூதர் கோயில் என வழங்கும். கண்ணபிரான் பாண்டவர்கள் பொருட்டுத் துரியோதனனிடம் அத்தினுபுரிக்குத் தூது சென்றபோது, அவன் வஞ்சகமாக அமைத்த ஆசனத்தில் இருந்து விசுவரூபம் எடுத்த நிலையில், மிகவும் பெருமை தோன்ற இருக்கும் தலம். பாடு—பெருமை, பாடு அகம்—பாடகம். பாண்டவ தூதர், கிழக்கே திருமுக மண்டலம், வீற்றிருக்கும் கோலம், உருக்குமிணி, சத்தியபாமை, பத்திர விமானம், மச்ச தீர்த்தம், ஜனமேஜய மகா ராஜனுக்கும், அரீத மாமுனிக்கும் பிரத்தியட்சம். பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

கல்லார் மதிள்சூழ் கச்சி
நகருள் நச்சிப் பாடகத்துள்
எல்லா உலகும் வணங்க
இருந்த அம்மான் இலங்கைக்கோன்
வல்லாள் ஆகம் வில்லால்
முனிந்த எந்தை விபீடணற்கு
நல்லா னுடைய நாமம்
சொல்லில் நமோநா ராயணமே

—திருமங்கையாழ்வார்.

(6) திருநீரகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. ஜகதீசப் பெருமாள் சந்நிதியென வழங்கும். ஜகதீசன், கிழக்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம், நிலமங்கைவல்லி நாச்சியார், ஜகதீச விமானம், அக்குரூரத் தீர்த்தம், அக்குரூரர்க்குப் பிரத்தியட்சம். இது உலகளந்த பெருமாள் கோயிலின் உள்ளே உள்ள திவ்விய தேசங்களுள் ஒன்று. என்றும் பதினாறாக நீண்ட ஆயுள்பெற்ற மார்க்கண்டேயர் பிரளயக் காட்சியைக் காண வேண்டித் தவம் புரிந்து அவ்வாறே அருள் பெற்றது.

நீரகத்தாய்! நெடுவரையின் உச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய்! ஒண்துறைநீர் வெஃகா உள்ளாய்!
உள்ளுவார் உள்ளத்தாய்! உலகம் ஏத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னும்
பேரகத்தாய்! பேராதென் நெஞ்சின் உள்ளாய்!
பெருமான்உன் திருவடியே பேணி னேனே!

—திருமங்கையாழ்வார்.

(7) நிலாத் திங்கள் துண்டம் :

இது காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் கோயிலில் உள்ளது. 'நிலாத் திங்கள் துண்டத் தான்' எனத் திருமங்கையாழ்வாரால் மங்களாசாசனம் செய்யப்பட்டுள்ளது. மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். நேரொருவர் இல்லாவல்லித் தாயார், புருஷ சூக்த விமானம், சந்திர புஷ்கரிணி, சிவனுக்குப் பிரத்தியட்சம்.

(8) திருவூரகம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. உலகளந்த பெருமாள் கோயில் என வழங்கும். மாவலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூவடி நிலம் கேட்டுத் திரிவிக்கிரம அவதாரம் எடுத்து மூவுலகங்களையும் அளந்த நிலை. உலகளந்த பெருமாள்—மேற்கே திருமுக மண்டலம். நின்ற திருக்கோலம். அமுதவல்லி நாச்சியார், சார ஸ்ரீகரவிமானம். சேட தீர்த்தம். உரகம் என்னும் ஆதிசேடனுக்குப் பிரத்தியட்சம். உரகம் என்னும் சொல் நீண்டு ஊரகம் என்று மருவியது. ஊரகம் என்னும் இந்த ஒரு திவ்விய தேசத்திலேயே திருநீரகம், திருக்காரகம், திருக்கார்வானம் என்னும், வேறு மூன்று திவ்விய தேசங்களும் கூட இருக்கின்றன. ''உரகம்'' என்னும் சொல், ஊரகம் என நீண்டது. உரகம் —பாம்பு. ஆதிசேடன் வழிபட்ட தலம். உரகம் வழிபட்டருள் பெற்றதனால், ஊரகம் என வழங்குகின்றது. இக்கோயிலிலேயே, திருக்குறளுக்கு உரை எழுதிய பரிமேலழகர், பட்டராக இருந்து பணிபுரிந்து வந்ததாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

(9) திருவெஃகா :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. யதோக்த காரி சந்நிதி என வழங்கும். இத்தலத்து எம் பெருமானுக்கு வேகாஸேது என்று வடமொழியில் பெயர். அதன் ஒரு பகுதியாகிய ''வேகா'' என்பது ''வெஃகா'' என்று ஆயிற்று. பெருமாள் சரசுவதி தேவிக்குத் தாம் சொல்லியபடி அருள் செய்தமையினாலும், திருமழிசையாழ்வாரின் சீடராகிய கணிகண்ணர் என்பவர் 'பைந்நாகப்பாய் சுருட்டிக் கொள்' என்றும் 'பைந்நாகப்பாய் படுத்துக்கொள்' என்றும் சொல்லிய வண்ணம் கேட்டு நடந்து அருள் புரிந்தமையினாலும், இவருக்குச் சொன்னவண்ணம் செய்த பெருமாள் எனப் பெயர் ஏற்பட்டது என்பர். பொய்கையாழ்வார் அவதரித்த தலம். பெய்கையாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கையாழ்வார், மங்களாசாசனம்.

நின்றது எந்தை ஊரகத்து,
இருந்தது எந்தை பாடகத்து,
அன்று வெஃகணைக் கிடந்தது,
என் இலாத முன்னெலாம்,
அன்றுநான் பிறந்திலேன்
நின்றதும் பிறந்தபின் மறந்திலேன்,
நின்றதும் இருந்ததும்
கிடந்ததும் என் நெஞ்சுளே

(10) திருக்காரகம் :

இது, காஞ்சிபுரம் உலகளந்தபெருமாள் கோயிலின் தெற்குப் பிராகாரத்தில் உள்ள திவ்வியதேசம். கருணாகரன், தெற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், பத்மாமணி நாச்சியார். வாமன விமானம், அக்ராயதீர்த்தம், காரக முனிவர்க்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

''காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!''
(2059)

(11) திருக்கார்வானம் :

இதுவும் காஞ்சிபுரம் உலகளந்த பெருமாள் கோயிலுக்குள்ளே உள்ளது. நவநீத சோரன். கமலவல்லி நாச்சியார். மேற்கே திருமுகமண்டலம். நின்ற திருக்கோலம், புஷ்பகவிமானம், கௌரி தடாகம், பார்வதிக்கும் மகாபலி அசுவத்தாமன் ஆகியோருக்கும் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

''காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!''
(2059)

(12) திருக்கள்வனூர் :

இது காஞ்சிபுரம் காமாட்சியம்மை கோயிலுக்குள் இருக்கின்றது. ஆதிவராகப் பெருமாள், மேற்கே திருமுகமண்டலம், நின்ற திருக்கோலம். அபயநாயகி நாச்சியார், வாமன விமானம், நித்திய புஷ்கரிணி. அசுவத்த நாராயணனுக்குப் பிரத்தியட்சம். பூமியைச் சுருட்டிப் பாதாளத்துக்கு எடுத்துச் சென்ற இரணியாக்கனை வதைத்துப் பூமியை மீட்டருளிய நிலை. திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

''காரகத்தாய்! கார்வானத்தாய்! கள்வா!''
(2059)

(13) திருப்பவளவண்ணம் :

காஞ்சிபுரத்தில் உள்ளது. பவளவண்ணப் பெருமாள்-பவளவல்லி நாச்சியார், பிரவாள விமானம்-சக்கரதீர்த்தம்-மேற்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம்-அசுவினி தேவர்களுக்குப் பிரத்தியட்சம். திருமங்கை யாழ்வார் மங்களா சாசனம். இக்கோயிலுக்கு அருகில் பச்சை வண்ணர் கோயில் இருக்கின்றது.

பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையின் உச்சியாய்! பவள வண்ணா!
எங்குற்றாய் எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதர் கேனே (2060)

(14) திருப்பரமேச்சுவர விண்ணகரம் :

இது காஞ்சிபுரத்தில் உள்ளது. வைகுண்டப்பெருமாள் கோயில் என வழங்கும். பரமேச்சுவரவர்மன் என்னும் பல்லவ மன்னன் அமைத்த விஷ்ணு கோயில் ஆதலின், இதற்குப் பரமேச்சுவர விண்ணகரம் என்று பெயராயிற்று. விண்ணகரம் என்பது, விஷ்ணு கிரகம் என்பதன் மரூஉ ஆகும். இக்கோயிலில் பல்லவ வரலாற்றுச் சிற்பங்கள் நிரம்பிக் காணப்படுகின்றன. பரமபதநாதன்-மேற்கே திருமுகமண்டலம்-வீற்றிருந்த கோலம். வைகுந்த வல்லித் தாயார் - அமுதவிமானம், கயிரவ தீர்த்தம். மேல்தளத்தில் சயனக்கோலமும், அதற்கு மேல் தளத்தில் நின்றதிருக்கோல உருவமும் உள்ளன. சனகாதிகளுடைய சாபம் அடைந்த வைகுந்த உலகத்தின் துவாரபாலகர்களாகிய சயர், விசயர் என்னும் இருவரும், பல்லவன் வில்லவன் என்னும் அரச குமாரர்களாய் உதித்து அரசாட்சி செய்து வருங்கால, இங்கு மகா விஷ்ணுவைப் பூசித்து அருள்பெற்றனர் என்பது வரலாறு. திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

பல்லவன் வில்லவன் என்றுலகில்
பலராய்ப்பல வேந்தர் வணங்குகழல்
பல்லவன் மல்லையர்கோன் பணிந்த
பரமேச்சுர விண்ணகரம் அதுவே (1128
(1128—1137)

(15) திருப்புட்குழி :

இது செங்கற்பட்டு அரக்கோணம் கிளை இருப்புப்பாதையில், காஞ்சிபுரத்திற்கு 7 கல் தொலைவில் உள்ளது. விசயராகவன்-கிழக்கே திருமுகமண்டலம், வீற்றிருந்த திருக்கோலம்-மரகதவல்லித்தாயார். விசயகோடி விமானம். சடாயு தீர்த்தம். சீதைப் பிராட்டியை எடுத்துச் சென்ற இராவணனை எதிர்த்து, கழுகரசனாகிய சடாயு சிறகு இழந்து வருந்த, அவ்வழியே சீதையைத் தேடி வந்த இராமபிரான் சடாயுவினால் சீதையை இராவணன் தூக்கிச் சென்ற செய்தியை அறிந்து, சடாயுவைத் தன் கரத்தால், குழிதோண்டித் தகனம் செய்து முத்தியளித்த தலம். திருமங்கையாழ்வார் மங்களா சாசனம். 'திருப்புள்' என்பது இங்கு சடாயு என்னும் பறவையைக் குறித்தது.

'அலங்கெழு தடக்கை ஆயன்வாய் ஆம்பற்கு
அழியுமால் என்உள்ளம்!' என்னும்,
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்
'போதுமோ நீர்மலைக்கு' என்னும் (1115)

(16) திருநின்றவூர் :

இது சென்னை அரக்கோணம் இருப்புப் பாதையில் உள்ளது. 'தின்னனூர்' என்று வழங்குகின்றது. பக்தவத்சலம், வருணவரதன், பக்தர் ஆவிப்பெருமாள், கமலவல்லித் தாயார் என்னைப் பெற்ற தாயார், ஸ்ரீநிவாச விமானம். பழைய பாலாறு நதி. கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம், தருமத்துவசன் என்னும் சூரியகுலத்தரசன் பூசித்துத், தான்இழந்த நாட்டை மீளவும் பெற்றான். வருணதேவனுக்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

நீண்டஅத்தக் கருமுகிலை, எம்மான் தன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார் சோலை..
(1089)

நின்றவூர் நின்ற நித்திலத் தொத்தினை.....
கண்ண மங்கையுட் கண்டுகொண்டேனே
(1642)

(17) திரு எவ்வுளூர் :

சென்னை அரக்கோணம் இருப்புப் பாதையில், 'திருவள்ளூர்' என வழங்கும் இடத்தில் உள்ள திவ்விய தேசம், வீரராகவப்பெருமாள், திருஎவ்வுள் கிடந்தான். கிழக்கே திருமுக

மண்டலம், சயனத் திருக்கோலம், கனகவல்லித் தாயார் (வசுமதி), விசயகோடி விமானம், இருத்தாபநாசந தீர்த்தம். வீக்ஷாரண்யம், மக்ஷிகாரண்யம் (ஈக்காடு). சாலிகோத்திர முனிவருக்குப் பிரத்தியட்சம். பிரத்தியும்நன் என்னும் அரசன் தவம்புரிந்து புத்திரப்பேறு அடைந்த தலம். சண்டாள சாங்கத்தியம் செய்த கவுசிகன் என்னும் அந்தணன், இந்தத் தலம் அடைந்து, இருத்தாபநநாசநதீர்த்தத்தில் மூழ்கி, திருஎவ்வுட் கிடந்தானைச் சேவித்து, நாராயண தியானபரனுய் மரணம் அடைந்து, பரமபதம் சேரப் பெற்ருன். அருகில் உள்ள ஈக்காடு என்னும் இடத்தில் இருந்த தரும சேனன் என்னும் அரசனிடம் அவதரித்துக் கனக வல்லித் தாயார் என்று பெயரிடப்பெற்று வளர்ந்த இலட்சுமிதேவியார், தக்க பருவம் அடைந்தபோது அவ்வரசனுல் வீரராகவப் பெருமாளுக்குச் சமர்ப்பிக்கப்பட்டாள். தை அமாவாசை இங்கு மிகவும் விசேடம். திரு மங்கையாழ்வார் மங்களாசாசனம். சாலி கோத்திர முனிவரை இறைவன் தாம் 'சயனிப்ப தற்கு எவ்வுள்?' என்று வினவியதனுல், திரு எவ்வுளூர் என்பது, திருவள்ளூர் என மருவியது.

நாகத் தணைக்குடந்தை, வெஃகா, திருஎவ்வுள்,
நாகத் தணையரங்கம் பேரன்பில்—நாகத்து
அணைப்பாற் கடல்கிடக்கும் ஆதி நெடுமால்
அணைப்பார் கருத்தன்ஆ வான் (3519)

என்னுடைய இன்னமுதை எவ்வுள் பெருமலையை...
(3815)

முன்ஓர் தூது வானரத்தின்
வாயில் மொழிந்து, அரக்கன்
மன்ஊர் தன்னை வாளியினுல்
மாள முனிந்து, அவனே
பின்ஓர் தூது, ஆதிமன்னர்க்கு
ஆகிப் பெருநிலத்தார்
இன்னுர் தூதன் எனநின்ருன்
எவ்வுள் கிடந்தானே (1058-1067)

(18) திருநீர்மலை :

சென்னை தாம்பரம் இருப்புப் .பாதையில் உள்ள, பல்லாவரம் என்னும் இடத்தில் இருந்து 3 கல் தொலைவில் உள்ளது. உந்தூர்தியுண்டு. மலையடிவாரத்தில் நீர்வண்ணர், நீலமுகில் வண்ணர். கிழக்கே திருமுக மண்டலம், நின்ற திருக்கோலம். அணிமாமலர்மங்கை நாச்சியார். மணிகர்ணிகைத் தீர்த்தம். தோயகிரி விமானம். மலையின் மேல் அரங்கநாதர், தெற்கே திருமுக மண்டலம், சயனத்திருக்கோலம், ஸ்ரீரங்க நாயகித்தாயார். தொண்டைமான் சக்கர வர்த்தி, பிருகு முனிவர், மார்க்கண்டேயர் ஆகி யோர்க்குப் பிரத்தியட்சம். நின்ருன் இருந் தான், கிடந்தான் சந்நிதிகளும் இங்கே உண்டு. பூதத்தாழ்வார் திருமங்கையாழ்வார் மங்களா சாசனம். இதற்குத் தென்மேற்கில் பிரகலா தாழ்வாருக்குப் பிரத்தியட்சமான சாந்த நர சிம்மசுவாமி வீற்றிருக்கும் மங்களகிரியும், அதற்குப் பக்கத்தில் வால்மீகி மகரிஷிக்குப் பிரத்தியட்சமான ஸ்ரீராமசுவாமி வீற்றிருக்கும் பச்சை மலையும் இருக்கின்றன.

அன்ருயர் குலக்கொடியோடு, அணிமா
மலர்மங்கையொடு அன்பளவி, அவுணர்க்கு
என்ருனும் இரக்கம் இலாதவனுக்கு
உறையும் இடமாவது, இரும்பொழில்சூழ்
நன்ருய புனல் நறையூர் திருவாலி
குடந்தை தடந்திகழ் கோவல்நகர்
நின்ருன் இருந்தான் கிடந்தான் நடந்தாற்கு
இடம்மாமலை யாவது நீர்மலையே (1078-87)

(19) திருஇடஎந்தை :

இது 'திருவடந்தை' என மருவி வழங்கு கின்றது. தாம்பரத்திற்கு அடுத்த வண்டலூர் என்னும் நிலையத்தில் இருந்து, 16 கல் தொலை வில் உள்ளது. உந்தூர்தி உண்டு. சென்னை யிலிருந்து மாமல்லபுரம் செல்லும் பேருந்து மூலமாகவும், இத்திவ்விய தேசத்தை அடைய லாம். நித்தியகலியாணப் பெருமாள், கோமள வல்லி நாச்சியார். கலியாணவிமானம். வராக தீர்த்தம், கலியாண தீர்த்தம். கிழக்கே திரு முகமண்டலம். நின்ற திருக்கோலம். மகா பலிச் சக்கரவர்த்தி தவம்செய்து பேறுபெற்ற தலம். மார்க்கண்டேயருக்குப் பிரத்தியட்சம். காலவ முனிவர் தன் பெண்கள் 360 பேரையும் தினம் ஒரு பெண்ணுக, யக்ஞவராகப் பெரு மாளுக்குத் தருக்கல் யாணம் செய்து கொடுத்த தலம். அதனுல் இப்பெருமாளுக்கு 'நித்திய கலியாணர்' எனப்பெயர் ஏற்பட்டது. காலவ முனிவரின் பெண்கள் 360 பேரையும் சேர்த்து ஒருத்தியாக்கி, அகிலவல்லிநாச்சியார் (பூமி தேவி) என்று தமது இடப்பக்கத்தில் வைத்தி ருப்பதனுல், இத்தலம் இடஎந்தை ஆயிற்று. மூலவர் வராகமூர்த்தியாக விளங்குகின்ருர். திருமழிசையாழ்வார் திருமங்கையாழ்வார் மங் களாசாசனம்.

திவளும் வெண்மதிபோல் திருமுகத்து அரிவை
செழுங்கடல் அமுதினிற் பிறந்த
அவளும் நின் ஆகத்து இருப்பதும் அறிந்தும்,
ஆகிலும் ஆசை விடாளால்;
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லும் நின்தாள் நயந்திருந்த
இவளை, உன் மனத்தால் என்நினைந்து இருந்தாய்?
இடஎந்தை எந்தை பிரானே (1108-1117)

(20) திருக்கடல்மல்லை :

செங்கற்பட்டு என்னும் நிலையத்தில் இருந்து, 18 கல். பட்சி தீர்த்தம் என்னும் திருக்கழுக்குன்றத்தில் இருந்து 9 கல். தல சயனப் பெருமாள். கிழக்கே திருமுகமண்டலம், சயனத் திருக்கோலம். நிலமங்கைநாச்சியார். ககன ஆகிருதி விமானம். கருடநதி. புண்டரீக முனிவருக்குப் பிரத்தியட்சம். பூதத்தாழ்வார் திரு அவதாரத் தலம். இங்குப் பல்லவர் காலத்துக் கருங்கற் சிற்ப வேலைகள் நிரம்ப உள்ளன. பஞ்சபாண்டவர் தேர்கள், கடற் கரைக்கோயில் முதலியன பார்க்கத்தக்கன. ஊர்க்கோயில் தலசயனம். கடற்கரைக்கோயில் சலசயனம். தலசயனப்பெருமாள் கோயி லுக்கு 1/2 கல் தொலைவில் ஞானப்பிரான் (வராகமூர்த்தி) கோயில் ஒன்று உள்ளது. பூதத் தாழ்வார், திருமங்கையாழ்வார் மங்களா சாசனம்.

புலன்கொள்நிதிக் குவையோடு
புழைக்கைம்மா களிற்றினமும்
நலங்கொள்நவ மணிக்குவையும்
சுமந்தெங்கும் நான்றொசிந்து
கலங்கள் இயங்கும் மல்லைக்
கடல்மல்லைத் தலசயனம்
வலங்கொள்மனத் தார்அவரை
வலங்கொள்என் மடநெஞ்சே
(1088—1107)

(21) திருவல்லிக்கேணி :

சென்னையின் ஒரு பகுதி. 'மயிலைத் திரு வல்லிக்கேணி' என்று புகழப் பெற்றுள்ளது. பார்த்தசாரதிப் பெருமாள். கிழக்கே திரு முகமண்டலம். நின்ற திருக்கோலம். வேத வல்லித்தாயார். ருக்மிணிப் பிராட்டியாரோ டும், அநிருத்தன் பிரத்தியும்நன் பலராமன் சாத்யகி ஆகிய தனது குடும்பத்தினரோடும், தொண்டைமான் சக்ரவர்த்தியின் பிரார்த் தனைக்கு இரங்கித், திருவேங்கடமுடையான் கண்ணபிரானுகச் சேவை சாதித்த தலம். பிருந் தாரண்யம், ஆனந்த விமானம். இந்திர-சோம மீன-அக்கினி-விஷ்ணு-தீர்த்தங்கள் ஐந்தும் சூழ்ந்த கைரவிணிசரஸ் (அல்லிக்கேணி). வியாசர் பிரதிஷ்டை செய்து ஆத்திரேயர் ஆராதித்த மூர்த்தி. சுமதி என்னும் அரசனுக்கு சித்திரை மாதத்தில் காட்சி கொடுத்துப் பெரு விழாக் கொண்ட தலம். பிருகு அத்திரி மரீசி மார்க்கண்டர் சுமதி ஜாபாலி சப்தரோமர் என்னும் ஏழு முனிவர்கள் தலம்புரிந்த தலம். இலட்சுமிதேவியார் இங்கே பிருந்தாரண்யத் தில் திருவவதாரம் செய்தருளி, பிருகு மகரிஷி யால் வேதவல்லித் தாயார் என்று திருநாமம் இடப்பெற்று அவரது ஆச்சிரமத்தில் வளர்ந்து, கிழக்கே திருமுக மண்டலமாய்ச் சயனத்திருக் கோலத்திலுள்ள மன்னாதப் பெருமானை மணம் புரிந்து கொண்ட தலம். அத்திரி முனிக்கும், பிரகலாதனுக்கும், நரசிங்க உருவத்துடன் (தெள்ளியசிங்கர்) மேற்கு முகமாய் வீற்றிருந்த கோலத்துடனும், மதுமந்தனுக்குச் சக்கர வர்த்தித் திருமகனுய்த் தெற்கு முகமாக நின்ற கோலத்துடனும், சர்ப்பரோமனுக்குத் தேவப் பெருமாள் உருவமாய்க் கிழக்கு முகமாக வீற்றிருக்கும் கோலத்துடனும் சேவை சாதித்த தலம். முற்கல முனிவரால் கைரவிணி (அல்லிக் கேணி) தீர்த்தத்தில், மீன் இல்லாதிருக்கச் செய்யப்பெற்ற தலம். தொண்டைமான் சக்கர வர்த்திக்கும் பார்த்தனுக்கும் பிரத்தியட்சம். பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங் கையாழ்வார் மங்களாசாசனம். திருமழிசை யாழ்வார், முதல் ஆழ்வார்களைச்சந்தித்த தலம்.

விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழச்
செற்றவன் தன்னைப், புரம்எரி செய்த
சிவன்உறு துயர்களை தேவைப்
பற்றலர் வீயக்கோல் கையில் கொண்டு,
பார்த்தன்றன் தேர்முன் நின்றானைச்
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே

பள்ளியில் ஓதி வந்த தன்சிறுவன்
வாயில்ஓர் ஆயிர நாமம்,
ஒள்ளிய ஆகிப் போத ஆங்கதனுக்கு
ஒன்றும்ஓர் பொறுப்பிலன் ஆகி,
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்பப்
பிறைஎயிற்று அனல்விழிப் பேழ்வாய்த்
தெள்ளிய சிங்கம் ஆகிய தேவைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே

மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையி னேடுசென் றிழிந்த,
கானமர் வேழம்கைஎடுத்து அலறக்
கராஅதன் காலினைக் கதுவ
ஆனையின் துயரம் தீரப்புள் ஊர்ந்து
சென்றுநின் றாழி தொட்டானைத்
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே.

பரதனும் தம்பி சத்துருக் கனனும்
இலக்கும னேடு மைதிலியும்
இரவும்நன் பகலும் துதிசெய்ய நின்ற
இராவணந் தகனை எம்மானை
குரவமே கமழும் குளிர்பொழில் ஊடு
குயிலொடு மயில்கள் நின்றால்
இரவியின் கதிர்கள் நுழைதல் செய்தறியாத்
திருவல்லிக் கேணிக் கண்டேனே.

(22) திருக்கடிகை :

இது சென்னை அரக்கோணம் பெங்களூர் இருப்புப் பாதையில், சோளங்கிபுரம் (சோள சிங்கபுரம்) நிலையத்தில் இருந்து 2 கல் தொலை வில் உள்ளது. கடிகாசலம் எனவும் வழங்கும். யோக நரசிம்மர், கிழக்கே திருமுக மண்டலம்: வீற்றிருக்கும் திருக்கோலம். தக்கான் (பக்த உசிதசுவாமி) அக்காரக்கனிப் பெருமாள்., அமிர்த வல்லித் தாயார். சிம்ம கோஷ்ட ஆகிருதி விமானம், அமிர்த தீர்த்தம், தக்கான் குளம், சிறிய திருவடிக்குப் பிரத்தியட்சம். கோயில் சுமார் 400 அடி உயரமுள்ள மலைமேல் இருக்கின்றது. சந்நிதிக்கு எதிரில் மற்றொரு குன்றில் சிறிய திருவடி (ஆஞ்சநேயர்) கோயில் உள்ளது. தேவேந்திரனின் வேண்டுகோளின் படி பலராமன் தன் கலப்பை ஆயுதத்தை எறிந்து செருக்கு அடக்கிய பருவதம். இரணி யனைக் கொன்று உக்கிர சொரூபமாக இருந்த நரசிம்ம சுவாமியைப் பிரகலாதாழ்வார் துதி செய்து சாந்தப்படுத்திய தலம். கடிகை-நாழிகை. இத்தலத்தில் ஒரு நாழிகை நேரம் மட்டும் தங்கியிருந்து தியானித்தாலும் முத்தி சித்திக்கும். ஆதலால் இதற்குக் கடிகாசலம் என்று பெயர் வழங்குவதாயிற்று. பேயாழ் வார், திருமங்கையாழ்வார் மங்களாசாசனம்.

மிக்கானை மறையாய் விரிந்த
விளக்கை, என்னுள்
புக்கானைப் புகழ்சேர்
பொலிகின்ற பொன்மலையைத்
தக்கானைக் கடிகைத்
தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக் கனியை
அடைந்துய்ந்து போனேனே! *(1731)*

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம்
கொண்டங் குறைவார்க்குக் கோயில்போல்,-வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை
இளங்குமரன் றன்விண் நகர். *(3444)*

திருவள்ளூர் அருள்திரு வீரராகவப்பெருமாள் திருக்கோயில்

[ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,]

திருவள்ளூர் என்னும் சிறந்த வைணவத் தலம், சென்னைக்கு வடமேற்கில், சுமார் 40 கி.மீ. தொலைவில் உள்ளது. திருவள்ளூர் இருப்புப் பாதை நிலையத்திற்குச் சுமார் 3 கி.மீ. தொலைவில் உள்ள திருக்கோயிலில், அருள்மிகு வீரராகவப் பெருமாள், கனகவல்லி (வசுமதி)த் தாயாருடன் எழுந்தருளியுள்ளார்.

இத்தலத்திற்குப் புண்ணியாவர்த்த க்ஷேத்திரம் என்றும், வீட்சாரணியம் என்றும், பெயர் வழங்கும். இங்குள்ள திருக்குளம் இருத்தாப நாசன புஷ்கரிணி என்னும் பெயர் உடையது. முன்னொரு காலத்தில் இத்திருக் குளத்தின் கரையில் தவம் புரிந்து கொண்டிருந்த சாலி கோத்திர முனிவரிடம், பெருமாள் ஒரு கிழ அந்தணர் வடிவில் வந்து, தாம் படுத்து ஓய்வு கொள்ள எங்கு இடம் (உள்) உள்ளது? என வினவினர். ஆதலின் இதற்குத் திரு எவ்வுள் ஊர் என்று பெயர் ஏற்பட்டது. அதுவே நாளடைவில் மருவித் திருவள்ளூர் என வழங்கி வருகின்றது.

இத்திருக்கோயிலின் உள்ளே நுழைந்ததும், முதற்கண் நமக்குத் தெரிவது, கொடிக் கம்பம் (துவஜஸ்தம்பம்). அதனை யடுத்துள்ள அரங்க மண்டபம் என்னும் மகாமண்டபத்தில் பெரிய திருவடி (கருடாழ்வார்) சந்நிதி உள்ளது. அதனைக் கடந்து சென்ருல் திருவுண்ணழிச் சுற்றுப் பிராகாரம் இருக்கிறது. அதன் சுவர்களில் தலபுராண வரலாறுகள் அழகிய ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இங்குதான் சிறப்பு நாட்களில் பெருமாள் திருமஞ்சன நீராட்டுக் கொள்வது வழக்கம். அதனையடுத்து அர்த்த மண்டபம் உள்ளது. இதனை மஞ்சக் கட்டு என்பர். இதன்கண் அழகிய, மிக மிக அற்புதமான தெய்வத் திருவுருவங்கள் எழுந்தருளச் செய்யப் பெற்றிருக்கின்றன. இச் சந்நிதிகள், எழில் மிக்க இனிய வெள்ளிக் கதவுகள் அமைக்கப் பெற்றுத் திகழ்கின்றன. நாள் தோறும் இரவில் பெருமாளுக்கு இங்கேயே திருமஞ்சம் அமைக்கப்படுகிறது.

இதனையடுத்து அந்தராள மண்டபமும், திருவுண்ணழிகை என்னும் கருவறையும் உள்ளன. கருவறையில் விஜயகோடி விமான நடுவில், ஆதிசேடன் ஆகிய அரவணைப் பள்ளியில் அருள் திரு வீரராகவப் பெருமாள் (மூலவர்) சமயனத் திருக்கோலத்தில் காட்சி தருகின்ருர். சாலி கோத்திர முனிவரின் தலையில் அவர் தம் வலக்கையை வைத்தருள்கின்ருர். அவர் தம் இடத் திருக்கையில் ஞானமுத்திரையுடன் பிரம தேவனுக்கு நான்மறைகளை உபதேசிக்கின்ருர். மற்ற இரண்டு திருக்கைகளும் ஒன்று அபய முத்திரையும் (அஞ்சேல் என்னும் குறிப்பும்), மற்ருென்று 'அருகே வருக' என்று நம்மை அழைப்பது போன்ற ஆக்வான முத்திரையும் கொண்டு விளங்குகின்றன.

மூலவருக்கு எதிரில், பூபாலராயர் என்னும் பொன் பீடத்தில், திரு எவ்வுள் கிடந்தான் என்னும் உற்சவர், சிறிய திருமேனியுடன் பொற்கலன்களும் கவசமும் பூண்டு, உபயநாச்சியாருடன் கண்கொள்ளாப் பேரழகில் திகழ்கின்ருர். இவருக்கே நாள்தோறும் திருமஞ்சனம் முதலிய சிறப்புகள் நிகழ்த்தப் பெறுகின்றன. மற்றும், இவருடன் அருள்திரு பலிச் செல்வர், மணவாளன், கண்ணபிரான், சாளக்கிராம மூர்த்திகள் ஆகியோரும் எழுந்தருளியுள்ளனர். கருவறைப் பிராகாரத்தின் தென் மேற்கில் அருள்திரு இலட்சுமி நரசிம்மர் சந்நிதியும், வடமேற்கில் சக்கரத்தாழ்வார் சந்நிதியும் அமைந்து விளங்குகின்றன.

அருள்மிகு வீரராகவப் பெருமாள் சந்நிதிக்குத் தென்பக்கம் பெரிய திருச்சுற்றில் கனகவல்லி (வசுமதி)த் தாயார் கோயில் உள்ளது. அங்குத் தாயார், உற்சவத் திருவுருவில், இரண்டு யானைகள் துதிக்கையில் பூவேந்தி அர்ச்சிப்பது போல் நிற்க, வெள்ளிப் பீடத்தில், அனைத்து அணிகலன்களும் அணிந்துகொண்டு (சர்வாபரண பூஷிதையாய்) காட்சி தருகின்ருள். இந்தச் சந்நிதியின் சுவர்களில் திருப்பாவை ஓவியங்கள் பல மிகவும் அழகுற வரையப்பட்டுள்ளன. இதன் பின்புறம் வெள்ளிக் கிழமை மண்டபம், அழகிய சிற்ப வேலைப்பாடுகள் மிக்க நான்கு தூண்களுடன் விளங்குகின்றது. பின் புறத் திருச்சுற்றில் இராமர் வேணுகோபாலர், தேசிகர், நம்மாழ்வார், ஆண்டாள் சந்நிதிகளும், வடப்பக்கத்தில் ஸ்ரீபாத மண்டபமும், திருக்கச்சி நம்பிகள் இராமாநுசர் விஷ்வக்சேனர் சந்நிதிகளும், அலுவலகம், வாகன மண்டபம், கண்ணடியறை முதலியவையும் உள்ளன.

திருமழிசை ஆழ்வார் அருளிய நான்முகன் திருவந்தாதியிலும் (36), திருமங்கை யாழ்வார் பாடிய பெரிய திருமொழிப் பத்துப் பாசுரங்களிலும், இத்தலமும் திருக்கோயிலும் மங்களா சாசனம் செய்து போற்றிப் புகழ்ந்து துதிக்கப் பட்டுள்ளன.

இத்தலத்திற்கு அமாவாசை தினங்களில் பல்லாயிரக் கணக்கில் பக்தர்கள் வந்து அருள் மிகு வீரராகவப் பெருமாளை அன்புடன் வழி பட்டுச் செல்கின்றனர். இத்திருக்கோயில் அகோபில மடத்தின் ஆதீன பரம்பரை அருள் ஆட்சியின்கீழ் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. தொண்டை நாட்டில் ஆழ்வார்களால் மங்களா சாசனம் பெற்று மிகவும் புகழோங்கித் திகழும் திவ்விய தேசங்களுள் ஒன்ருகிய இத்தலத்திற்குச் சென்று கண்டு வழிபட்டு, அன்பர்கள் அனைவரும் இம்மை மறுமை நலங்களைப் பெற்று மகிழ்வார்களாக.

***

தலவரலாற்றுக் குறிப்புகள்

(காவிரித் தென்கரைத் தலங்கள்)

(...முற்றொடர்ச்சி)

21) திருஆவூர்ப்பசுபதீச்சரம் :

இத்தலம் பாபநாசம் இரயில் நிலையத்திலிருந்து தெற்கே சாலியமங்கலம் கற்சாலையில் நான்கு மைல் சென்று திருக்கருகாவூரை அடைந்து, அங்கிருந்து வடகிழக்கே நான்கு மைல் சென்று காணத் தக்கது. கும்பகோணத்துக்குத் தென்மேற்கே எட்டரை மைலில் உள்ளது. பட்டீசுவரத்திற்குத் தென்மேற்கே நாலரை மைலில் இருப்பது. ஆவூர் என்பது ஊரின் பெயர். பசுபதீச்சரம் என்பது கோயிலின் பெயர். பசுக்கள் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது. கோயில் ஒரு சிறுமலை மீது உள்ளது. நல்லூரிற் போலவே இங்கேயும் இரண்டு அம்பாள் கோயில்கள் உள்ளன. (1) மங்களவல்லி, (2) பங்கயவல்லி. தட்சிணாமூர்த்தியின் திருவுருவம் மிக அழகாக இருக்கிறது. சம்பந்தர் ஒரு பதிகம் பாடிப் பரவியுள்ளார். காவிரித் தென்கரைத் தலங்கள் 127-ல் 21வது தலம்.

''புண்ணியர் பூதியர் பூதநாதர்
  புடைபடு வார்தம் மனத்தார் திங்கட்
கண்ணிய ரென்றென்று காதலாளர்
  கைதொழுதேத்த இருந்தவூராம்
விண்ணுயர் மாளிகை மாடவீதி
  விரைகமழ் சோலை சுலாவியெங்கும்
பண்ணியல் பாடல றாதஆவூர்ப்
  பசுபதி யீச்சரம் பாடுநாவே''

''எண்டிசை யாரும் வணங்கியேத்தும்
  எம்பெரு மானையெழில் கொளாவூர்ப்
பண்டுரி யார்சிலர் தொண்டர் போற்றும்
  பசுபதி யீச்சரத் தாதிதன்மேல்
கண்டல்கண் மிண்டிய கானற்காழிக்
  கவுணியன் ஞானசம் பந்தன்சொன்ன
கொண்டினி தாஇசை பாடியாடிக்
  கூடுமவர்உடை யார்கள் வானே''

22) திருச்சத்திமுற்றம் :

இத்தலம் கும்பகோணத்திற்குத் தென்மேற்கே 4 கல் தொலைவில் உள்ளது. தாராசுரம் இரயில் நிலையத்திலிருந்து தென்மேற்கே 2 கல் தொலைவில் உள்ளது. பராசக்தி சுவாமியைத் தழுவி முத்தம் கொடுத்த தலம்என்பர். அந்த உருவமும் கோயிலில் உள்ளது. கல்வெட்டுக்களிலும், இலக்கியங்களிலும், தேவாரத்திலும் சத்திமுற்றம் என்றே வழங்குகிறது. ''பூவாரடிச் சுவடு என் மேற்பொறித்துவை'', ''இம்மை உன்தாள் என் நெஞ்சத்தெழுதிவை'' என அப்பர் சுவாமிகள் வேண்டித் துதித்த தலம். இந்த வேண்டுகோள் நல்லூரில் சித்தித்தது. சுவாமி—சிவக்கொழுந்தீசர், தேவி—பெரியநாயகி. தீர்த்தம்—சூல தீர்த்தம். காவிரித் தென்கரைத் தலங்கள் 127-ல் 22-வது தலம். கல்வெட்டுக்கள் பல உள்ளன.

''கோவாய் முடுகி யடுதிறற்
  கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற்
  பொறித்துவை போகவிடில்
மூவா முழுப்பழி மூடுங்கண் டாய்
  முழங் குந்தழற்கைத்
தேவா திருச்சத்தி முற்றத்
  துறையுஞ் சிவக்கொழுந்தே''

''வெம்மை நமன்தமர் மிக்கு
  விரவி விழுப்பதன்முன்
இம்மையுன் தாளென்றன் நெஞ்சத்
  தெழுதிவை ஈங்கிகழில்
அம்மை யடியேற் கருளுதி
  யென்பதிங் காரறிவார்
செம்மை தருசத்தி முற்றத்
  துறையுஞ் சிவக்கொழுந்தே''

23) திருப்பட்டீச்சுரம் :

இத்தலம் கும்பகோணத்துக்குத் தென்மேற்கே 4 மைலில் உள்ளது. திருச்சத்தி முற்றத்துக்குத் தெற்கே கால் மைலில் அடுத்த தெருவில் உள்ளது. திருமலைராயன் ஆற்றுக்கு வடகரையில் உள்ளது. இதற்குக் கிழக்கே ஒரு கல் தொலைவில் முழையூர் என்ற வைப்புத் தலம் இருக்கின்றது. காமதேனுவின் புத்திரிகள் நால்வரில் பட்டி என்பவள் பூசித்துப் பேறு பெற்ற காரணத்தால் பட்டீச்சரம் எனப் பெயர் பெற்றது. இராமபிரான் பூசித்து சாபஹத்தியைப் போக்கிக் கொண்ட தலம். இந்த ஐதிகம் மார்கழி மாத அமாவாசையன்று நடத்தப்படுகிறது. மிகப் பழைமையான இராமர் படம் ஒன்று கோயிலில் உள்ளது. சம்பந்தர் தரிசிக்கும் பொருட்டு நந்தியை விலகச் செய்து

தரிசனம் கொடுத்த தலம். சம்பந்தர் திருச்சத்தி முற்றத்திலிருந்து இத்தலத்துக்கு எழுந்தருளிய காலம் முதுவேனில் பருவமாகிய ஆனி மாதமாய் இருந்தமையால் சிவபிரான் சிவ பூதங்களைக் கொண்டு முத்துப்பந்தர் கொடுத்தருளிய தலம். இத்தலத்தில் திருப்பணிகள் பல செய்த மந்திரி கோவிந்த தீட்சிதர், அவர் தம் மனைவியுடன் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளார். சுவாமி பட்டீச்சரநாதர். தேவி—பல்வளை நாயகி. தீர்த்தம்—ஞான தீர்த்தம். தல விருட்சம்—வன்னி மரம். சம்பந்தர் ''பாடல் மறை'' என்ற திருப்பதிகம் பாடிப் பரவிய தலம். காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல் 23வது தலம். காமதேனுவின் புத்திரி பூசித்த காரணத்தால் தேனுபுரீசர் என்றே இன்று வழங்கப்படுகிறது.

''பாடல்மறை சூடல்மதி பல்வளையொர்
பாசமதில் மூன்றெரர் கணையால்,
கூடளரி யூட்டியெழில் காட்டிநிழல்
கூட்டு பொழில்சூழ் பழைசையுள்,
மாடமழ பாடி யுறைபட்டிசரம்
மேயகடி கட்டரவினர்,
வேடநிலை கொண்டவரை வீடுநெறிகாட்டி
வினை வீடுமவரே''

''மந்தமலி சோலைமழ பாடிநகர்
நீடுபழை யாறையதனுள்,
பந்தமுயர் வீடுநல பட்டிசரம்
மேயபடர் புன்சடையனை,
அந்தண்மறை யோர்இனிது வாழ்புகலி
ஞானசம் பந்தன் அணியார்,
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல
தொண்டர்வினை நிற்ப திலவே''

24) திருப்பழையாறை வடதளி :

இத்தலம் பட்டீச்சரத்திலிருந்து தென் கிழக்கே ஒன்றே கால் மைலில் உள்ளது. இது பழையாறை என்றும், வடதளி என்றும் இரு தலங்களாக உள்ளது. பழையனூர் ஆலங்காடு என்ற தலத்தை ஞானசம்பந்தர் ஒரே பதிகத்தில் குறிப்பிடுவதுபோல, நாவுக்கரசர் இவ்விரு தலங்களையும் ''தலையெலாம்'' என்ற பதிகத்தில் சேர்த்துப் பாடியுள்ளார். வடதளிஎன்னும் ஆலயம் சமணர்களால் மறைக்கப்பட்டிருந்ததைப் பழையாறைக்கு எழுந்தருளிய நாவுக்கரசர் அறிந்து வடதளிச் சிவபெருமானைத் தரிசித்தாலன்றி உணவு கொள்ளேன் என்று விரதம் மேற்கொள்ள, அங்கிருந்த சோழ அரசன் கனவில் தோன்றி அரசன் வாயிலாக அமணர் தீச்செயலகற்றி அப்பருக்குத் தரிசனம் அருளினர் வடதளி இறைவன். இதனை அப்பர், தேவாரத்தில் முதற் பாடலிலும், ஒன்பதாம் பாடலிலும் குறிப்பிட்டுள்ளார். அமர்நீதி நாயனர் அவதாரத் தலம். சுவாமி—சோமேசர், தேவி—சோமகலாநாயகி. தீர்த்தம்—சோம தீர்த்தம்.

வடதளி காமதேனுவின் மற்றொரு புத்திரியாகிய விமலி பூசித்துப் பேறு பெற்ற தலம். சுவாமி—தர்மபுரீஸ்வரர். தேவி—விமலநாயகி. இதற்குச் சமீபத்தில் மேற்றளி உள்ளது. இதுவும் காமதேனுவின் புத்திரிகளில் ஒருவரான சபளி பூசித்துப் பேறு பெற்ற தலம். சுவாமி—கைலாசநாதர். தேவி—சபளநாயகி. முழையூர் என்ற வைப்புத் தலம் இதன் சமீபம் உள்ளது. இதுவும் காமதேனுவின் புத்திரிகளில் ஒருவரான நந்தினி பூசித்துப் பேறுபெற்ற தலம். சுவாமி—பரசுநாதேசுவரர். தேவி—ஞானம்பிகை. இது மாடக் கோயில். திருமலைராயன் ஆற்றின் தென்கரையில் பழையாறையும், வடகரையில் வடதளியும் உள்ளன. காவிரித் தென்கரைத் தலங்கள் 128ல் 24வது கோயில்.

''தலையெ லாம்பறிக் குஞ்சமண் கையருள்
நிலையி னன்மறைத் தால்மறைக் கொண்ணுமே
அலையி னர்பொழி லாறை வடதளி
நிலையி னனடி யேநினைந் துய்ம்மினே''

''மூக்கி னல்முரன் றோதிஅக் குண்டிகை
தூக்கி னர்குலந் தூரறுத் தேதனக்கு
ஆக்கி னன்அணி யாறை வடதளி
நோக்கி னர்க்கில்லை யால்அரு நோய்களே''

''வாயி ருந்தமி ழேபடித் தாளுறு
ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினன்
பாயி ரும்புனல் ஆறை வடதளி
மேய வன்னென வல்வினை வீடுமே''

25) திருவலஞ்சுழி :

இத்தலம் கும்பகோணத்துக்கு மேற்கே 3 கல் தொலைவில் உள்ளது. பாதாளத்திலிருந்து ஆதிசேடன் வெளிவந்த துவாரத்தில் காவிரி இறங்கிவிட்டபோது சோழன் வருந்தினன். இறைவன் அசரீரியாக முடித்தலையேனும், சடைத்தலையேனும் பலியிட்டால் காவிரி வெளிப்படும் எனக் கூற, அது கேட்டுக் கொட்டையூரில் தவம் செய்து கொண்டிருந்த ஏரண்ட முனிவர் பிலத்துவாரத்தில் இறங்கிக் காவிரியை மேலே வரச் செய்தார். காவிரி வலஞ்சுழித்து மேலே எழுந்த காரணத்தால் வலஞ்சுழி எனப் பெயர் பெற்றது. இவ்விடத்தில் காவிரி மேலக் காவிரி எனப் பேற்றது. ஆதிசேடன் ஒரு சிவராத்திரி தினத்தில் பாதாளத்திலிருந்து வந்து நான்கு

சாமத்திலும் பூசித்த தலங்களாவன ; திரு வலஞ்சுழி, திருநாகேச்சுரம், திருப்பாம்புரம், திருநாகைக்காரோணம் என்பனவாம். தேவா சுரர்கள் அமுதம் கடைந்த காலத்து அமுதம் திரளுமாறு தேவர்களால் பூசிக்கப் பெற்ற வெள்ளைவாரணப் பிள்ளையார் இந்திரனல் பிர திட்டை செய்யப் பெற்றது என்பர். கோயிலில் ஆதிசேடன் வந்த துவாரத்தில்தான் மூலஸ் தானச் சிவலிங்கம் உள்ளது. சமீபத்தில் ஏரண்ட முனிவர் திருவுருவம் உள்ளது. இந்திரன் பூசித்துப் பேறு பெற்ற தலம். சுவாமி—கபர்த்தீசுவரர். தேவி—பெரியநாயகி. தீர்த்தம்—காவிரி. அப்பரும் சம்பந்தரும் ஐந்து பதிகங்களால் துதித்துள்ளனர். காவிரித் தென் கரைத் தலங்கள், 127-ல் 25வது தலம். விநாயகர் மண்டபம் வேலைப்பாடுடையது. திரு விழாக்கள் எல்லாம் விநாயகருக்குத்தான் நடை பெறுகின்றன.

''என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே யிருங் கடல் வையத்து
முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னியாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் அதனுலே''

''மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
ஆதரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந்த வர்தம்மை
வாதி யாவினை மறுமைக்கும் இம்மைக்கும் வருத்தம் வந் தடையாவே''

''ஓத மார்கட லின்விடம் உண்டவர்
பூத நாயகன் பொற்கயி லைக்கிறை
மாதொர் பாகன் வலஞ்சுழி யீசனைப்
பாத மேத்தப் பறையும்நம் பாவமே''

''இளைய காலமெம் மானை அடைகிலாத்
துளையி லாச்செவித் தொண்டர்காள் நும்முடல்
வளையுங் காலம் வலஞ்சுழி யீசனைக்
களைக ணகக் கருதிநீர் உய்ம்மினே''

26) திருக்குடமூக்கு—கும்பகோணம் :

குடமூக்கு என்பதுதான் கும்பகோணம். கும்பகோணம் இரயில் நிலையத்திலிருந்து கும் பேசுரர் கோயில் மேற்கே ஒரு கல் தொலைவில் உள்ளது. ஒரு பிரளய கால வெள்ளத்தில் சகல உயிர்களையும் சேமித்து இட்ட குடத்தில் மூக்கு இருந்த இடமாதலின் குடமூக்கு எனப் பெயர் பெற்றது. (கும்பம்—குடம், கோணம் —மூக்கு). சகல பாபங்களையும் போக்குகிற கங்கை முதலிய தீர்த்த மாதாக்கள் மாசிமகத் தன்று இங்கு வந்து மூழ்கித் தங்கள் பாபங் களைப் போக்கிக் கொண்ட மகா மகத் தீர்த் தத்தைத் தன்னிடத்தே கொண்ட சிறப்புடை யது. இந்த ஐதிகம் 12 ஆண்டுகட்கு ஒரு முறை மகா மகத்தன்று பெருஞ் சிறப்புடன் கொண்டாடப்படுகின்றது. ஏம ரிஷி முதலி யோர் பூசித்துப் பேறு பெற்ற தலம். விஷ்ணு பூசித்துச் சக்கரமும், சாரங்கமும் பெற்ற தலம். மூலஸ்தானம் பிருதிவியாலானது. சுயம்பு மூர்த்தி. சுவாமி—கும்பேசர். தேவி—மங்க ளாம்பிகை. தீர்த்தம்—மகாமகக் குளம். சம்பந்தர் ஒரு பதிகமும், அப்பர் ஒரு பதிகமும் பாடித் துதித்துள்ளனர். காவிரித் தென்கரைத் தலங்கள் 127-ல் 26வது தலம்.

''கங்கை, மாமகந்தோறும் வந்து வந்து தற் படிந்தோர் விட்டுப், போமகம் போக மூழ்கும் புனித நீர்ப் பதியைக் காண்மின்'' என்பது திருவிளையாடற் புராண அர்ச்சனைப் படலப் பாடல் (25).

இங்குக் காலையில் முதலில் சூரியனுக்கும், மாலையில் முதலில் சந்திரனுக்கும் பூசை நடை பெறுகிறது. கும்பகோணத்தை முதன்மையாகக் கொண்ட சப்தஸ்தானத் தலங்களாவன : 1. குடமூக்கு, 2. கலயநல்லூர், 3. வலஞ்சுழி, 4. தாராசுரம், 5. சுவாமிமலை, 6. கொட்டை யூர், 7. மேலைக் காவிரி என்பன. கோயில் பெரியது. கல்வெட்டுக்கள் பல உள்ளன.

''மயில்பெடை புல்கியால மணல்மேல்
மடஅன்னம் மல்கும்
பயில்பெடை வண்டு பண்செய்
பழங்கா விரிப்பைம் பொழில்வாய்க்
குயில்பெடை யோடு பாட
லுடையான் குடமூக்கிடமா
இயலொடு வானமேத்த
இருந் தானவன் எம்மிறையே''

''காமி யஞ்செய்து காலங் கழியாதே
ஓமியஞ் செய்தங் குள்ளத் துணர்மினே
சாமி யோடு சரச்சு வதியவள்
கோமி யும்உறையுங் குட மூக்கிலே''

''சிரமஞ் செய்து சிவனுக்குப் பத்தராய்ப்
பரமனைப்பல நாளும் பயிற்றுமின்
பிரமன் மாலொடு மற்றொழிந் தார்க்கெலாம்
குரவ னார்உறை யுங்குட மூக்கிலே''

27) திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் :

இத்தலம் கும்பகோணம் நகரில் இரயில் நிலையத்துக்கு மேற்கே 3 கல் தொலைவிலும், கும்பேசுவரர் கோயிலுக்குக் கிழக்கே அரை கல் தொலைவிலும் உள்ளது. இது நாகேசுவர சுவாமி கோயில் என வழங்குகிறது. வலஞ் சுழிப் பிலத் துவாரத்தின் வழியாக வந்த ஆதி சேடன் தரிசித்ததால், இப்பெயர் பெற்றது. சூரியன் பூசித்துப் பேறு பெற்ற தலம். ஆண்டு தோறும் சித்திரை மாதம் 11, 12, 13ம் தேதி களில் சூரிய கிரணம் சுவாமி மீது படிந்து பூசிப்பதைக் காணலாம். பிரளயகால மூர்த்தி இங்கு எழுந்தருளியுள்ளார். நடராஜர் இங்கு விசேடம். கங்கைக் கணபதி நன்றாக இருக்கிறார். அர்த்தநாரீசர் உருவமும் அழகுடையது. அப்பர், திருத்தாண்டகப் பதிகம் ஒன்றால் துதித்துள்ளார். காவிரித் தென்கரைத் தலங் கள் 127ல் 27வது தலம்.

''நீறலைத்த திருவுருவும் நெற்றிக் கண்ணும்
நிலா அலைத்த பாம்பினொடு நிறைநீர்க் கங்கை
ஆறலைத்த சடைமுடியும் அம்பொன் தோளும்
அடியவர்க்குக் காட்டியருள் புரிவார் போலும்
ஏறலைத்த நிமிர்கொடியொன் றுடையார்போலும்
ஏழுலகுந் தொழுகழலெம் மீசர் போலுங்
கூறலைத்த மலைமடந்தை கொழுநர் போலுங்
குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்தனாரே.

''ஏவியிடர்க் கடலிடைப்பட் டிளைக்கின் றேனை
இப்பிறவி யறுத்தேற வாங்கி யாங்கே,
கூவிஅம ருலகனைத்து முருவிப் போகக்
குறியில்அறு குணத்தாண்டு கொண்டார் போலுந்
தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை
சரசுவதிபொற் றாமரை புட்கரணி தெண்ணீர்
கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக் கீழ்ச் கோட்டத்தெங் கூத்தனாரே''

28) திருக்குடந்தைக் காரோணம் :

இத்தலம் கும்பகோணம் நகரின் இரயில் நிலையத்திலிருந்து மேற்கே அரை மைலில் மகா மகக் குளத்தின் வடகரைக் கீழ்த்திசையில் உள்ளது. காசி விசுவநாதர் கோயில் என வழங்கப்படுகிறது. உமா தேவியார், மாந் தாதா, பூசித்துப் பேறு பெற்ற தலம். இங் குள்ள பெருமான் கங்கை முதலிய தீர்த்த மாதாக்கள் ஒன்பதின்மரையும் காசியிலிருந்து அழைத்து வந்து, தாம் மேற்கு முகமாயிருந்து தமக்கு நேரே அவர்களைத் தீர்த்தத்தில் மூழ்கச் செய்து அவர்களது பாபத்தைப் போக்கினார். அவ்வொன்பதின்மரும் இக்கோயிலில் நவ கன் னிகைகளாக இடம் பெற்றுள்ளனர். இவர்கள் மூழ்கிய தீர்த்தமே மகாமகக் குளமாக உள்ளது, சுவாமி—சோமநாதர். தேவி—தேனார்மொழி யாள். ஞானசம்பந்தர் ஒரு பதிகம் பாடிப் பரவியுள்ளார். காவிரித் தென்கரைத் தலங்கள் 127ல், 28வது தலம்.

''முடியார்மன்னர் மடமான் விழியார் மூவுலகும் ஏத்தும்
படியார்பவள வாயார்பலரும் பரவிப் பணிந்தேத் தக்
கொடியார் விடையார் மாடவீதிக் குடந்தைக்குழ காரும்
கடியார்சோலைக் கலவமயிலார் காரோணத்தாரே''

''பூவார்பொய்கை அலர்தாமரை
செங்கழுநீர் புறவெல்லாம்
தேவார்சிந்தை அந்தணாளர்
சீராலடி போற்றக்
கூவார்குயில்கள் ஆலும்மயில்கள்
இன்சொற் கிளிப்பிள்ளை
காவார்பொழில் சூழ்ந் தழகார்
குடந்தைக் காரோணத்தாரே''

தொடரும்

பேதையும் மேதையுமான சீதை

"முதுபெரும் புலவர்"

திரு. புரிசை சு. முருகேச முதலியார்,

திருவண்ணாமலை

இத்தலைப்பு வியப்பிற்கு இடமானதாகும் எனக் கருதுகின்றேன். யாருக்குமே "பிறந்து மொழி பயின்ற" பின்னர்தானே, அளவளவாக அறிவு வளரும்? முதலில் யாவரும் பேதையாக இருந்துதானே மேதையாகின்றனர்? இதில் சீதையாருக்கு மாத்திரம் என்ன சிறப்பு என எண்ண வேண்டித்தான் வரும். எல்லோருக்கும் ஒக்க நிற்கும் இந்தப் பேதைமையல்ல, சீதையின் பால் இங்குக் குறிப்பது. வளர்ச்சியுற்று மிக மேதையென மதிக்க வந்த பிறகு ஒரு பேதை மைத்தனம் சீதையை அணுகிற்று. அதினின்றும் தப்பித் தலையெடுத்து, உலகம் மெச்சும் மேதை யாகத் திகழும் வாய்ப்பைச் சீதாதேவி பெற்றுத் திகழ்ந்தனள். இக்கருத்தினை விரித்துரைப்பதே இவ்வுரையின் கருத்தாகும்.

சீதையின் இளமையறிவு :

இராமன் கன்னிமாடப் பூங்காவில் முதல் முதல் சானகியைக் கண்டனன். அப்பொழுதே சீதையும் இளவலொடும் முனிவரொடும் வீதி வாய்ச் சென்ற இராமனைக் கண்டனள். இருவரில் முன்னதாகக் கண்டவர் யார் எனக் கேட்டால், கம்பர் அதற்கெல்லாம் என்னை விளக்கங் கேட்காதீர்கள் "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினள்" என்கின்றார். இக்காட்சி நலத்தின் பின்னர், வள்ளல் பிரியாது பிரிந்து முனிவரொடும் இளங்கோவொடும் அரச விடுதியில் சேர்ந்து, உண்டு உறங்கச் செல்லுகின்றனன். உறக்கம் வரவில்லை. இரவெல்லாம் எண்ணமிட்டு ஏங்குகின்றனன். "அவள் யாராக இருப்பள்" என யூகிக்கின்றனன். "எனதுள்ளங் கவர்ந்த அவள், யாராக இருப்பினும் இன்னும் மணமாகாதவள்; அவளை யான் விரும்புவது குற்றமாகாது ; எனக்குரியார் அவளை எனக்கு மணம் முடிக்க முயன்றால், அவளைப் பொறுத்த வரையில், தடையொன்றும் சொல்லகில்லாள், இனிய மறுமொழியே இயம்புவாள்" என இத்தனையும் உணர்ந்து கொண்டனன், அந்த ஒள்ளியன். மேற்கண்ட கருத்துக்களை யெல்லாம் ஒரு சின்னஞ் சிறிய பாடலில் அமைத்தளிக்கின்றனர் கம்பர் :

"ஏகும் நல்வழி; அல்வழி என்மனம்
ஆகுமோ? இதற்கு ஆகிய காரணம்
பாகு போல்மொழிப் பைந்தொடி, கன்னியே
ஆகும்; வேறு இதற்கு ஐயுறவு இல்லையே".

இராமனுக்கு அச்செய்திகள் எல்லாம் யார் சொல்லினர்? இராமனுடைய மனமே சொல்லிற்று. அதை அவ்வளவு உறுதியாக எப்படி இராமன் நம்ப முடியும்? அது வரையில் தனது மனம் ஒரு தப்பு வழியிலும் நடந்ததில்லையாம்; ஆதலால் அம்மனம் ஒரு இளம் பெண்ணை முறைகேடாக விரும்பாதாம்; அந்த நன்னடத்தையுடைய மனம் விரும்பியதால், அப்பெண் இன்னும் மணமாகாதவள் என்பதை உறுதியாக நம்பலாமாம்; வழக்குகளில் சான்றுரைக்க வருகின்றவர்களை, வந்த அவரது தரம் என்னவென்பதனை முதலாக ஆராய்ந்து கொண்டு, அதன் அடிப்படையிலேயே, அச்சான்றை நம்புவதா? விட்டு விடுவதா? என்ற முடிவுக்கு நீதிபதி வருவதைப் போல, இங்குத் தனது மனதைப் பற்றி எண்ணித் திண்ணிதென அறிந்தனன், இராமன் என்றனர் கம்பர்.

இப்பெருநூல் பரவியுள்ள தமிழகத்தில் முழு நாளும் பிழை வழி ஒழுகும் ஒருவர்கூடத் தன் மனம் என்னமோ மிகு செந்நெறிச் செலவுள்ளது போல நினைத்துக்கொண்டு, 'தெய்வ சாட்சி", "இயற்கைச் சாட்சி" எல்லாம் விடுத்து, எனது மனம் சாட்சி எனக் கூறத் துணிதலையும் காணுகின்றோம். இது ஒரு வியப்பிற்குரிய செயலல்லவா?

அங்கே இராமன் அவள் கன்னிகைதான் என அறிந்ததற்குக் காரணம் தெரிந்தது. அவள் எனது மனத்தை விரும்புபவள் என்பதை எப்படி அறிவது, எனலாம். "ஏதிலார் போலப் பொது நோக்கு நோக்குதல் காதலார் கண்ணேயுள" என்றபடி, அக் கன்னியின் பார்வையால் உணர்ந்தனன் இராமன். இராமன் உணர்ந்தது சரி, அவள் நமது திருமணத்திற்கு ஒப்புமொழி உரைப்பள் என இராமன் உரைத்தது எங்கே? "பாகுபோல் மொழி" என்பதனால், அவள் வாய்ச்சொல் ஒலியாலும், உணர்வாலும் நலம் தருவதாகும் என நம்பினன் என்பதனைக் கம்பர் காட்டினர்.

இங்கே இராமன் படும்பாடும், எண்ணங்களும் இவை. அங்கே என்ன நிலை எனில், சீதையைக் கன்னிமாடப் படுக்கையறையில் சேர்த்தார்கள் பாவை நல்லார்கள். உபசரிப்பார் பலர் இருப்பினும், சீதையும்உறங்கவில்லை. "வீதிவாய் நான் கண்ட அந்நம்பி மனிதனா தேவனா? யாவனாக இருக்கலாம்? என உன்னி

''விரைசெறி தாமரை இமைக்கும் மெய்ம்மையால்—உரைசெயில் தேவர்தம் உலகுளான் அலன்''. தாழ்ந்த இடங்களில் இருள் சூழும், கொசுகு மொய்க்கும். தீய நாற்றமும் வீசும். உயர்வுள்ள இடங்களில் ஒளி படரும், வண்டுகள் சுற்றும், நன்மணம் கமழும். சீதைக்கு இராமன் கண்களின் ஒளி தெரிந்தது. அதைக் கொண்டே அவை எடுப்பான கண்கள், மணமல்கும் கண்கள் என அறிந்து கொண்டனள். தாமரை யொத்த கண்களைத் தாமரை என்றனள். அத்தாமரை இமைத்துத் தனது மெய்ம்மையைச் சீதைக்குத் தெரிவித்து விட்டனவாம். அவற்றின் அறிவிப்பால் இவன் தேவனல்லன் என அறிந்து கொண்டாளாம். கையிலுள்ள வில்லைக் கண்டனள், அவ் வில் மட்டிலிருந்தால் இவனொருவன் வேட்டையனே என எண்ணத் தான் வரும். அச் செம்மல் மார்பினில் ஒளிரும் நூலையும் உடனுகக் கண்டனளாம். அதனுல் இவன் உலகத்துள்ள ஒரு அரசகுமரன்தான் எனவும் அறிந்தனளாம்.

அரசரிலும் மணமுற்றிக் குடும்ப பாரங் கொண்டவனல்லன், மணங் கொள்ளற்கு உரியவனே, ''இளங்குமரனே'' என்றனளெனவும், குமரனேயாகும் என முடித்துவிடாமல், ''குமரனே ஆதல் வேண்டும்'' என்று தனது மணத்தையும் முடிப்பவன் இவனே என நுணுகிக் கூறினள் எனவும், தமது கதாநாயகி இளைய வயதிலேயே இவ்வளவு அறிவு நலம் பெற்றவள் என அடுக்கி உரைக்கும் கம்பரின் கவி அழகைப் பாருங்கள்.

''உரைசெயில் தேவர்தம் உலகு ளானலன்
விரைசெறி தாமரை யிமைக்கும் மெய்ம்மையால்
வரிசிலைத் தடக்கையன் மார்பில் நூலினன்
அரசிளங் குமரனே ஆதல் வேண்டுமால்''

(மிதிலைக் காட்சி 58)

சீதைக்கு மனநோய் துவக்கம் :

கைகேயி இராமனை வனம் புகக் கட்டளையிட்டு விட்டனள். அண்ணலும் அப்பணியில் ஈடுபட்டு மரவுரி தரித்துப் புறப்படலாயினன். அவன் இளவல் பின்தொடரச் சீதை வைகும் அந்தப்புரத்தை அடைகின்றனன். மணுளனின் உடை மாற்றத்தையும், உடன்வந்த மாமியர் முகமாற்றத்தையும் கண்டனள் மங்கைநல்லாள். நடந்தது இன்னது என்று அறியாது நடுங்கினள். மாமியர் வந்து தழுவினர். தேவிக்குச் சிந்தையழிந்தது, கண்கள் கலங்கின. பேரரசர் பெருமானுக்கு ஏதேனும் வந்ததா? என்ன நடந்தது என வினவினள்.

தலைமகனை இராமன் ''எனது ஒப்பற்ற தம்பி அரசாளுவன், தாய் தந்தையர் இருவர் கட்டளையும் பெற்றுக் கொண்டேன். நான் மழை வளமுள்ள காட்டைக் கண்டுவிட்டுத் திரும்பி வந்து விடுவேன், நீ இங்குவருந்தாதே'' என்றனன். தனது தம்பிகளில் பெரியவன் பரதன் ஆதலால் அவனை ஒப்பற்ற தம்பி என்றும், உலகத்துள்ள எந்தத் தம்பிகளுக்கும் தமையனைப் போற்றுந் தகைமையில் தலையாய எம்பி என்றும் காட்டுவான் ''பொருவில்எம்பி'' என்றனன். தலைமகனின் அச்சொற்களில் தலைமகளுள்ளத்தைச் செவி வழியாகச் சென்று சுட வல்ல பெருந் தீ இருந்ததாம். அத் தீய பகுதி எது? ''நான் போகின்றேன், நீ வருந்தாது இங்கிரு'' என்ற கொடுஞ் சொல்தானும். அத் தீயால் சூடுண்ட சானகி தேம்பித் தேம்பித் தெருமருகின்றனள்.

மக்களுக்கு மனம் ஒரு கொள்கலம். (கொள்கலம்—பாத்திரம்). ஒரு படி பிடிக்கும் ஒரு குவளையில், இரண்டு படி தண்ணீரை ஊற்றினுல் என்னவாகும்? அது கொண்ட அளவு போக, மிகுதி அப்பாத்திரத்தின் வாயினுலேயே வழிந்து விழத்தானே செய்யும்? அதுபோலவே மக்களுக்குத் திடீரென்று வரும் இன்பமோ துன்பமோ, அவர்களது உள்ளத்தால் தாங்க வல்ல அளவு வரையிலும் தாங்க முடியும், அந்த அளவை மிஞ்சியது அவர்கள் வாயினுலேயே வெளி வந்தே தீரும். இந்நிலையில் அன்பர்கள் ஆண்டவனருளால் பெறுகின்ற இன்ப வெள்ளம் அவ்வன்பரது உள்ளங் கொண்டது போக, மிகுந்தது அவரது திருவாயின் வழியாகத் தோத்திரங்களாக வெளிப்படும் வெள்ளங்கள். மற்றவருள்ளத்தைத் தாக்குந் துன்ப வெள்ளங்களும் பட்டவர் வாயால் அழுகையாக வழியத்தான் செய்கின்றன. இவ் வழுகை, உற்றவர் உடம்பை மெலியச் செய்யும். இது மெலிவோடு நிற்பதில்லை. உள்ளுள்ள உயிரையும் நிலைகலங்கி வெளிப்படவுஞ் செய்து விடும். இச் சானகியின் மாமனுருக்கே இந்த அனுபவம் வந்தது ''உள் நிலாவிய துன்பம் பிடித்து உந்த உயிர்ப்பு எழுந்து ஊசலாடச்'' செய்துவிட்டது, அன்று அம் மாமன்னன் அடைந்த துன்பம். இங்கே சானகிக்கு உற்ற துன்பத்தை நினைக்க நினைக்க உள்ளம் நெக்கு விடுகின்றதாம். ''இந்தப் பெருநலமுற்ற நாயகன் காட்டிலுற நான் வீட்டில் நின்று துன்புற விதியுள்ள உடலுக்கு ஒரு உயிரா? இந்த உயிர் ஒழிந்தால்தான் என்ன? இதைத் துப்பித் தொலைத்து விட்டால் என்ன?'' என எண்ணுகின்றனளாம் அம்மெல்லியல்.

''அன்ன தன்மையள் அன்னையும் அத்தனும்
சொன்ன செய்யத் துணிந்தது தூயதே;
என்னை? என்னை இருத்தி யென்றுன் எனு,
உன்ன உன்ன உயிர்உமிழா நின்றுள்''

(நகர்புகு. 224)

அப்படிப் பிரிவாற்றுமையால் துன்புறும் பேதைக்கு, இராமன் என்ன சொல்லுவது? ''சானகி, நீ உடன் வரக்கருதுகின்றனைபோலும். காடு கரடு முறடானது. உனது மென்மையான அடிகளுக்கு அதில் நடக்க முடியாது'' என்பான், ''கல் அரக்கும் கடுமைய அல்ல, நின் சில் அரக்கு உண்ட சேவடிப் போது '' என்றுன். அதுகேட்ட ஆயிழை, காடு சுடுமா? எவ்வளவு சுடும்? அது, ''உனது பிரிவினும் சுடுமோ?'' என்றுள். இராமன் சானகி உடலில் மெலிவினளாயினும், உள்ளத்தால் உறுதியினளாக இருத்தலை உன்னினன். இவள் உள்ளத்து உறுதிக்கு உடல்நிலை எப்படி ஈடுசெய்யும்? கல்லினும் முள்ளினும், காட்டினும் மேட்டினும், பனியி

லும் மழையிலும், குளிரினுங் கோடையிலும், எப்படித்தான் இவளைக் காத்தளிப்பது? அன்றியும், இவளைக் காணும் அன்பர்கள்இவளுக்காகத் தாங்கள் துன்புறுவர், வன்பர்கள் கண்பட்டாலோ வாராத இன்னலெல்லாம் வருமே, என்ன செய்வது? என்பன போன்ற எண்ணங்கள் எல்லாம் அண்ணலை அலைத்தன. முன்னுணர்வுள்ள இந்த முதல்வனுக்குப் பின்வருவனவெல்லாம் எடுப்பாக வந்து எதிர் நிற்கின்றன. இராகவன் குடும்பத் தலைவன். தலைவனே அழுதால் தாங்குவாராருளர்? அதனால் அண்ணல் உள்ளம் அழிகின்றான், ஆனால் அழவில்லை. அண்ணலுக்குக் கடலத்தனை நீர் கண்களில். ஆனால் அதை வெளியே விடவில்லையாம். அந்நீரை அவன் கையால் தடுத்துக் கொண்டனனும். கைகளாலல்ல. கையால். இங்குக் கைகள் என்றால் மனிதருக்குள்ள உடலுறுப்புகளாகும். கையென ஒருமையாக உரைப்பதால் அது உள்ளுள்ள உறுப்பு. (கை—ஒழுக்கம்).

''மெய் வாய் கண் மூக்குச் செவியெனப் பேர் பெற்ற
ஐவாய வேட்கை அவாவினைக்—கைவாய்க்
கலங்காமல் காத்து உய்க்கும்ஆற்றல் உடையான்
விலங்காமல் வீடு பெறும்'' (நாலடியார்)

இப்படி ஐம்புலனையும் அடக்கும் ஆற்றல் ஒழுக்கத்திற்கு உண்டென்றால், அவ் ஒழுக்கம் நிறைந்த ஒரு தலைமகனுக்கு இச்செயல் அரிதா? அவ்வெள்ளத்திற்கு அணையிட்டுக் கொண்ட அண்ணல், மேல் அவனது எண்ணத் திறனெல்லாம் இடங் கொளச் சிற்சில கூறினன்.

''அண்ணல் அன்னசொல் கேட்டனன் அன்றியும்
உள் நிவந்த கருத்தும் உணர்ந்தனன்
கண்ணின் நீர்க் கடல் கைவிட நேர்கிலன்
எண்ணுகின்றனன் என்செயற் பாற்று எனா''

(நகர் நீ. 227)

இதற்குள் உள் நுழைந்து தனது உடை நலங்களை எல்லாம் கணவனுக்கியைய மாற்றிக் கொண்டு, உடன்செல்ல ஒருப்பட்டு வெளி வந்தனள் சானகி. அம் மாமகளின் மரவுரியுடை கண்டவர் யாவரையும் கண்கலங்கச் செய்துவிட்டது. முல்லையரும்பும் முத்துக் கோவையும் நாணத் தக்க சிரித்த முகச் செல்வி நீ, அரண்மனையில் அளவற்ற உபசரிப்பாளரிடையில் அமைப்போடு வளர்ந்து வாழ்பவள். சொன்னால் கேட்கவில்லை. புறப்பட்டு நிற்கின்றனை, என்னென்ன செய்யப் போகின்றனையோ, என்றனன் ஏந்தல்.

''முல்லையும் கடல் முத்தும் எதிர்ப்பினும்
வெல்லும் வெண்ணகையாய் விளைவு உன்னுவாய்
அல்லை போக அமைந்தனை ஆதலின்
எல்லை அற்ற இடர்தருவாய் என்றான்''

கணவனுடைய இச்சொற்கள், சனகன் பாவைக்குத் தாங்கரும் வெகுளியைத் தந்து விட்டன. அக் கோபத்திற்கு ஆளாகிய நங்கை ஒரு கழுகு போல, காக்கை போலவா மாறுவாள்? அவள் சீற்றம் ஒரு குயில் சீறுவதைப் போல் இருந்தது. சானகிக்குக் கோபத்தால் சொல் தடுமாறுகின்றது. சீற்றமுற்ற அவள், உங்களுக்கு வருத்தந் தருபவள் யான் ஒருத்தி தான் போலும், என்னை விட்டு விட்டாலே உங்களுக்கு இன்பம் நிறைந்து நிலவும் போலும் என்றனள்.

''கொற்ற வன்அது கூறலும் கோகிலம்
செற்றது அன்ன குதலையள் சீறுவாள்
உற்று நின்ற வருத்தம் இவ் வொன்றுமே
எற்று றந்தபின் இன்பங் கொலா மென்றாள்''

(நகர் நீ. 232)

இம்மொழிக்கு எதிர்மொழி இராமனிடத்தில் இல்லை. இராமனுக்குத் தாயர் இருவர், பக்கமே உளர். அவர்களாலும் இதற்கு மாற்றச் சொல் சொல்ல முடியாது. அப்படியா? இதற்குப் பொருள் தான் என்ன என்கின்றீர்களா. இதற்குப் பொருள் சீதை தன் கணவனைப் பார்த்து உனக்கு இத்தனை இன்பந் தருவாருளரோ? அவர்களில் நான் ஒருத்தி துன்ப வடிவினளாகி வந்துவிட்டேன். அப்படித் தானே? என வினவுவதாகத்தான் பொருள். இராமபிரானை இதுவரை ஒரு குற்றம் செய்தவன் செய்பவன் என, அவனது தாயரோ தந்தையோ ஆசிரியரோ அயலவரோ அடியவரோ சொல்லியதுமில்லை, சொல்லக் கருதியதுமில்லை. ஆனால், சனகன் பாவை, குற்றமற்ற ஒரு பெருமகன் பேரிலொரு குற்றத்தைச் சுமத்துகின்றனள். இது எங்கும் முறையிட்டு மாற்றிக் கொள்ள முடியாத குற்றம். என்ன செய்தான் இராமன்?

இப்படியொரு படிப்பினை இராமனுக்கு வரும் என அப்பொழுதே சொல்லி வைத்தனர் ஒருவர். அது இப்பொழுது பலித்துவிட்டது. அவர் யார். நமது கவிச் சக்கரவர்த்திதான். புவிச் சக்கரவர்த்தி புதல்வனுக்கு, அயலார் தெருவில் பராக்கு பார்த்த அப்பொழுதே சொல்லி வைத்தார். இளமை முடுக்கில் அது அப்பொழுது தெரியவில்லை. இப்பொழுது புதுப் படிப்பினை வருகின்றது, என்ன செய்வது. அனுபவிக்க வேண்டியது தானல்லவா?

இராமன் இளவலோடும் முனிவரோடும் மிதிலைப் பட்டினத்தின் வீதிவாய் நடந்து செல்கின்றனன். அம்மருங்கு ஒரு தோட்டத்தில் உள்ள கன்னிமாடத்தில் ஒரு காரிகையைக் கண்டனன். அப் பாவை நல்லாளும் இவ் வண்ணலைப் பார்த்தனள். கண்ட பொழுதே இருவரும் இதயம் கலந்து விட்டனர். அப் பெண்ணுக்கும் இவ் வாணுக்கும் ஒவ்வொரு குறைபாடுண்டாம். அக்குறைகள் நீங்க இவ ரிருவரும் ஒன்றுபட்டது உதவிதானும். இப்படிச் சொல்லுகின்றனர் கவி வலவர். சானகிக்கு என்ன குறை? அடியோடு இடையில்லையாம். இடை முதலில் கொஞ்சம் இருந்ததாம். அது வர வரத் தெரியாமல் மறைந்தே விட்டதாம். அக்குறை நீங்க அம்மடந்தையைக் கடைபோகக் கட்டியணைத்துக் காக்க அருளாளனொருவன் தேவையிருந்ததாம். அதற்கு இவ்வழகன்

அமையுமென அம்மடந்தை முடிவு கண்டன ளாம். மங்கைக்கு அது சரி. வள்ளலுக்கு என்ன குறை? இராமனைப் புகழ்வார்களே முழுதும் ஊராம், இகழ்வார் ஒருவர் வேண்டுமென்றால் மருந்துக்குக் கூடக் கிடையாதாம். இகழுவ தெப்படி? குறை ஏதேனும் கண்டவர்தான் இகழுவர். குறையற்றவனிடத்தில் குறை காணுவது எப்படி? அது யாராலும் முடியாது நுண்ணறிவுடைய மனைவி ஒருத்தியால்தான் முடியும். அதற்கேற்ற பெண்தானும் இந்தச் சீதை. அதனால்தான் ஒருவருக்கொருவர் குறை தீர்த்துக் கொள்ள ஒன்றுபட்டுப் பார்த்த பொழுதே ஈருடலும் ஒருயிருமாகிவிட்டன ராம். சொல்லுகின்றார் கம்பர்.

''மருங்கு இலாநங்கை யும்வசையில் ஐயனும்
ஒருங்கிய இரண்டு உடற்குஉயிர் ஒன்றுஆயினர்
கருங்கடற் பள்ளியுள் கலவி நீங்கிப்போய்
பிரிந்தவர் கூடினால் பேச வேண்டுமோ?''

(மிதிலைக்காண் காட்சி 32)

''இல்லை தவறு அவர்க்கு ஆயினும் ஊடு தல் வல்லது அவரளிக்குமாறு'' என்பது திருக் குறள். தானும் வனத்திற்குப் புறப்படும் சானகி, ஒருவரும் ஒத்தாசைக்கு வரமுடியாத ஊடல் மொழியால் வென்றனள். ஒரு வம்பனா னால் மனைவி மொழிக்கும் எதிர்மொழி ஏதேனும் இசைப்பன். இராமனோ பெருந்தகை பெருந் தலைவன். அவன் என்னதான் சொல்லுவன். வாளாவிருந்தனன். மங்கையும் உடன் புறப் பட்டனள். ''பிறிது ஓர் மாற்றம் பெருந்தகை பேசலன்''.

மனநோய் மறைவு :

ஊரெலாம் அழுது உடன்தொடர்ந்தாலும் தோகைக்குத் துயரம் ஒன்றும் தோன்றவில்லை. உற்றவன் உடனிருந்தால் ஊரும் நாடும் ஆடை யும் அணியும் போனது ஒரு பொருளாகவே தெரியவில்லை. தலைமகளே அல்ல. தலைவன் நிலையும் அப்படியே தான். பெருங் காட்டிற் புகுகின்றனன் இராமன். வழிவிட வந்த சுமந் திரனுதியரும் திரும்பி விட்டனர். பொழுது புலருகின்றது. வெயிலவன் பளபளத்துத் தோன்றுகின்றனன். அவ்வெயிலவன் செவ் வொளி இவ் இராமனது நீலவொளியின் முன் நிலைபெறவில்லை. அவ்வளவு ஒளி இராமனுக்கு எங்கிருந்து வந்தது, அவனது உள்ளத்திலிருந்தே வெளிவந்தது. ''உள்ளத்தில் ஒளியுண்டானால் முகத்தினில் ஒளியுண்டாகும்''. உள்ளத்தில் அப்படி இராமனுக்கு வந்த மகிழ்ச்சி யென்ன? வேண்டிய தெல்லாம் உடனிருப்பதால்தான். இராமனுக்கு அன்பும் ஆற்றலுமுள்ள தம்பி யிருப்பதால் பகைக்குப் பயப்பட வேண்டாம். ''தம்பியுள்ளான் படைக்கஞ்சான். ''இராமன் துறவு வேடத்தோடு இருந்தாலும் இல்லறத் தான். அவன் காட்டிற் புகுந்தாலும் இல்லறத் திற்குரிய எல்லாம் இருக்கின்றன. அது எப்படி? இராமன் ஏதேனும் கொண்டு வந்தனனா? இல்லை. அவன் கொண்டு வரவில்லை. ஆனால் அவனுக்கு வேண்டிய எல்லாம் தாமே புறப் பட்டு அவனோடு வந்துவிட்டன. ''இல்லாள் அகத்திருக்க இல்லாத தொன்றில்லை.'' தலை மகளான சானகி உடனிருப்பதால், அவளும் இல்லாளாகவே இருப்பதால், எல்லாம் உள்ளவ னாகின்றான் இராமன். இவற்றினாலும் அரச பாரத்திற்கு ஆளாகாமல் தப்பித்தலையெடுத்த மகிழ்ச்சியாலும் பெருமையுற்று நடக்கின்றனன் இராமன். ''யாதனில் யாதனில் நீங்கினான் நோதல் அதனில் அதனில் இலன்''. போது மென்ற மனமே பொன்செய் மருந்தாகஆயிற்று. விளக்கம் உற்று உயர்ந்து விட்டனர். இந்தத் தலைமகன் தலைமகள் சிறப்பை உலகிற்குக் காட்டிப் பாடிப் பரவுகின்றார் கம்பர்.

''வெய்யோனொளி தன்மேனியின்
விரிசோதியில் மறையப்
பொய்யோவெனும் இடையாளொடும்
இளையானொடும் போனான்
மையோ மரகதமோ
மறிகடலோ மழைமுகிலோ
ஐயோ இவன்வடிவென்பதோர்
அழியா அழகுடையான் (கங்கைப். 1)

பின்னர் அவர்கள் மூவரும் கங்கைக் கரை யடைந்தனர். அருந்தவரால் வரவேற்று ஆசி கூறப் பெற்றனர். கங்கையில் நீராடுகின்றனர். சானகி ஓரத்தில் நின்று நீராட, இராமன் ஆழத் தில் நின்று நீராட, கங்கை வெள்ளத்தின் அளப் பரும் காட்சியையும், வெளுத்த கங்கை நீரில் நீல நிறம் படைத்த தனது கணவன் திளைத் தாடும் திருவையும், திருவனாள் மேலுந் திரு வானாள் நோக்கி மகிழ்ந்து நிற்கின்றனள். அக் காணருங் காட்சியை நமக்குக் கம்பர் காட்டு கின்றார். எப்படிக் காட்டுகின்றார்? அவருங் கண்டு (உள்ளத்தால்) நமக்குக் காட்டுகின்றார். *

கொடிக்கம்பம் நாட்டுவிழாச் சிறப்புரை

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

திருக்கோயில்களின் அமைப்பு :

இறைவன் எழுந்தருளி விளங்கும் திருக்கோயில்களின் அமைப்பு, சரீரப் பிரஸ்தாரம் என்றும், இருதயப் பிரஸ்தாரம் என்றும் இரு வகைப்படும். சரீரப் பிரஸ்தாரமாவது, மனித உடலின் உறுப்புக்களைப் போன்ற பகுப்புக்களுடன் கூடியது. சிவாலயங்களில் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்நபன மண்டபம், தம்ப மண்டபம், நிருத்த மண்டபம் என ஆறு மண்டபங்கள் பெரும்பாலும் அமைந்திருக்கும். அவைகள் மனித உடலின் அமைப்பைப் பெரிதும் ஒத்திருக்கின்றன. இவைகள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்களைக் குறிக்கும்.

சரீரப் பிரஸ்தாரம் :

மற்றொரு வகையில் நோக்கினால், கர்ப்பக்கிரகம் தலையும், அர்த்தமண்டபம் கழுத்தும், மகாமண்டபம் மார்பும் போல் விளங்குகின்றன. யாகசாலை நாபியாகவும், கோபுரம் பாதமாகவும் திகழ்கின்றது. உடம்பிலுள்ள வாய், நாக்கு, அண்ணுக்கு, ஐம்பொறிகள், இருதயம், உயிர் என்பனவற்றைப் போல், சிவாலய அமைப்பிலும் பல பகுதிகள் உள்ளன. அம்முறையில் சிவாலயம்—உடல், கோபுரம்—வாய், நந்தி—நாக்கு, துவஜஸ்தம்பம்—அண்ணுக்கு, விளக்குகள்—ஐம்பொறிகள், கர்ப்பக் கிரகம்—இருதயம், சிவலிங்கம்—உயிர் எனத் திகழ்கின்றன.

மனித உடல், தோல், இரத்தம், இறைச்சி, எலும்பு, மச்சை, மேதை, சுவேத நீர் என்னும் ஏழு வகைத் தாதுக்களால் இயன்றுள்ளது. அது போலவே சிவாலயங்களும், செங்கல், வெண்கல், கருங்கல், சுண்ணம், மணல், நீர், காரம் என்னும் ஏழு வகைப் பொருள்களால் அமைக்கப்பெறுகின்றன. திருக்கோயில்கள் பெரும்பாலும் ஐந்து பிராகாரங்களைக் கொண்டிருக்கும். அவைகள் முறையே அன்ன மய கோசம், பிராணமய கோசம், மனோமய கோசம், விஞ்ஞான மயகோசம், ஆனந்த மய கோசம் என்னும் நமது ஐவகை உடல்களைக் குறிக்கும். இனி, சில திருக்கோயில்களில் மூன்று பிராகாரங்கள் மட்டுமே இருக்கும். அப்போது அவைகள் ஸ்தூல சரீரம், சூக்கும சரீரம், குண (காரண) சரீரம் என்னும் நமது மூவகை உடல்களைச் சுட்டும்.

''காயமே கோயி லாகக்
கடிமனம் அடிமை யாக
வாய்மையே தூய்மை யாக
மனமணி இலிங்க மாக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீர் அமைய ஆட்டிப்
பூசனை ஈச னார்க்குப்
போற்றவிக் காட்டி னோமே''

—திருநாவுக்கரசர்.

இருதயப் பிரஸ்தாரம் :

இனி இருதயப் பிரஸ்தாரம் என்பது, சிவபிரானைப் புறத்தே பூசிப்பதுபோல, அகத்தே பூசிப்பதற்கு முப்பத்தாறு தத்துவசொரூபமான, இருதய தாமரை மலரின் அமைப்பைக் கற்பிப்பது. ஆத்ம தத்துவம் இருபத்துநான்கும் தாமரையின் நாளம். வித்தியா தத்துவம் ஏழும், சுத்த வித்தையும் ஆகிய எட்டும், தாமரை மலரின் எட்டு இதழ்கள். ஈசுவரம் சதாசிவம் என்பவை, கேசரங்கள், சத்தி தத்துவம், தாமரையின் பொகுட்டு. சிவதத்துவம், அப்பொகுட்டினுள் காணப்படும் பீஜ வடிவங்கள் என்று, இங்ஙனம் இருதயம் ஆகிய தாமரை மலரில் இருத்தி, இறைவனைத் தியானம் செய்து, வழிபடும் முறை, இருதயப் பிரஸ்தாரம் என வழங்கப்படும்.

''மண்முதல் நாளம்; மலர் வித்தை கலாரூபம்;
எண்ணிய ஈசர் சதாசிவமாம்;—நண்ணில்
கலைஉருவாம்; நாதமாம் சத்தி அதன்கண்ணும்;
நிலை அதிலாம் அச்சிவன்தாள் நேர்''

—சிவஞானபோதம்.

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே''

—திருமந்திரம்.

என்று திருமூலர் பெருமானும் உருவக முறையில் அருளிச் செய்திருத்தல், மேலைக்கருத்தினைச் சாலவும் விளக்கும்.

குறிகளும் அடையாளமும் :

இங்ஙனம் திருக்கோயில்களின் அமைப்பில் பல வகையான குறிகளும் அடையாளங்களும், தத்துவ நுட்பங்களைத் தகவுற உணர்த்தும் முறையில் செறிந்து கிடக்கின்றன. இவ்வுண்மையினை,

---

* சென்னை திருக்காரணி அருள்மிகு திருக்காரணீசுவரர் திருக்கோயிலில், நமது அறநிலைய ஆணையர் திரு. எம். கே. பாலசுப்பிரமணியம், ஐ. ஏ. எஸ்., அவர்களால் ''புதிய கொடிக் கம்பம் நாட்டுவிழா'' நிகழ்ந்த போது ஆற்றிய சிறப்புரையின் தொகுப்பு (27-3-77)

—ஆசிரியர்.

''குறிக ளும்அடை யாளமும் கோயிலும்
நெறிக ளும்அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய, ஆயிரம் ஆரணம் ஓதினும்,
பொறியி லீர்மனம் என்கொல் புகாததே''

எனத் திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிச் செய்திருத்தல் கொண்டும் தெளியலாம்.

கொடிக் கம்பம் :

அவைகளுள் கொடிக் கம்பம் என்பது, ஆறு ஆதாரங்களேயும் ஊடுருவிக் கொண்டு புருவ மத்தியில் சென்று முடியும் சுழு முனே நாடியையும், முதுகுத் தண்டையும் குறிப்ப தாகும். மூலக்கனலே, முதுகத் தண்டின் நடுவே அமைந்து அதனே ஊடுருவிச் செல்லும் சுழுமுனே நாடியின் வழியாக, புருவ நடுவிற்கு ஏறச் செய்து நிலேபெறுவிக்கும் திறமே, கொடி ஏற்றுதல் ஆகிய நிகழ்ச்சியாகும். கொடியேற்று தலாகிய நிகழ்ச்சி நடைபெற்றதும், திருக் கோயில்களில் இருந்து சுவாமி புறப்பட்டு, திரு வீதிவுலா வந்து மக்களுக்குக் காட்சி வழங்கி அருளுவார். அதுபோல, மூலாதாரக் கனலேச் சுழுமுனே நாடி வழியாக மேலேறச் செய்து, புருவ நடுவின்கண் நிலேபெறச் செய்து தியா னித்தால், அங்ஙனம் தியானிப்பவர்களுக்கு இறைவன் வெளிப்பட்டுக் காட்சியருளுவன்.

''நெற்றிக்கு நேரே புருவத்து இடைவெளி
உற்றுற்றுப் பார்க்க ஒளிவிடும் மந்திரம்
பற்றுக்குப் பற்ருய் பரமன் இருந்திடும்
சிற்றம்பலம் என்று தேர்ந்து கொண்டேனே''

எனவரும் திருமந்திரப் பாடல், இவ்வனுபவ உண்மையினேச் செவ்விதின் உணர்த்தும்.

கொடியின் சிறப்பு :

பண்டைக் காலத்தில், திருக்கோயில்களில் மட்டுமேயன்றி, நகரங்களின் அரண்மனேகளி லும், செல்வர்களின் மாளிகைகளிலும், அறிஞர் கள் இருக்கும் இடங்களிலும், வாணிப நிலேயங் களிலும், கொடிகள் ஏற்றப் பெற்றிருக்கும். ஆசிரியர் உருத்திரங் கண்ணனர் தமது பட்டினப் பாலேயின்கண்,

''பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணே நல்லாசிரியர்
உறழ்குறித் தெடுத்த உருகெழு கொடியும்''

எனப் புகார் நகரில் எடுக்கப் பெற்றிருந்த, பல்வேறு கொடிகளேப் பற்றிக்குறிப்பிடுகின்ருர். கடவுளர் பலருக்கும், அவரவர்களுக்குரிய தனித் தனியான வெவ்வேறு கொடிகள் அமைந்து விளங்குகின்றன. 'கருடக்கொடி யோன்' எனத் திருமாலும், ''சேவுயரும் திண் கொடியோன்'' என்று சிவபிரானும், 'கோழிக் கொடியோன்' என்று முருகப் பெருமானும், பிறரும் வழங்கப்படுதல் காணலாம். 'சேவற் கொடியை உடைய முருகப்பெருமான் காப்ப தனல், இவ்வுலகமானது இன்பமாக இயங்கி வருகின்றது' என்னும் கருத்தமைய,

''சேவலங் கொடியோன் காப்ப
ஏமவைகல் என்றின்ருல் உலகே''

எனக் குறுந்தொகை என்னும் சங்கத்தொகை நூல் பாடுகின்றது. கோழிக் கொடியை உடைய முருகன் திருவடிகளேப் பணிந்தால்தான், நாம் இன்பமுற இனிது வாழமுடியும் என்னும் கருத் தினே, அருணகிரிநாதர்,

''கோழிக் கொடியோன் அடிபணியாமல்
குவலயத்தே
வாழக் கருதும் மதியிலிகாள்''

எனவரும் கந்தரலங்காரப் பாடலில் வலி யுறுத்தி யருள்கின்ருர். இங்ஙனமே ஒவ்வொரு கடவுளரின் கொடியையும் வியந்து புகழ்ந்து பாடியிருத்தல், சமய நூல்களில் காணப்படுத லால், கொடியின் சிறப்பையும், கொடிக் கம்பத் தின் சிறப்பையும் நாம் ஒரு சிறிது உன்னி யுணர்தல் கூடும்.

சம்பந்தர் :

கோயில்களிலும், அரண்மனே மாளிகைகளி லும், ஏற்றப்பெற்றும் பறக்கும் கொடிகளேக் குறித்து, அழகிய இனிய கவிதைகள் பல வற்றை இலக்கியங்களில் காணலாம். திருவீழி மிழலேக்கோயிலில் கொடிகள் ஏற்றப் பெற்றுப் பறந்து வீசும் திறனே, விதந்து வியந்து, அவை கள் ''வானுலகிலுள்ள தேவர்களேத் திருவீழிமி ழலேயிலுள்ள சிவபிரானே வந்து வணங்கி வழி பட்டு உய்யுங்கள் என்று விளிப்பது போல விளங்குகின்றன'' என்று, பாடுகின்ருர் திரு ஞானசம்பந்தர்!

''காணுமாறு அரிய பெருமானுகிக்
காலமாய்க் குணங்கள் மூன்ருய்ப்
பேணும்மூன்று உருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான் கோயில்,
தாணுவாய் நின்றபர தத்துவனே,
உத்தமனே இறைஞ்சீர் என்று
வேணுவார் கொடிவிண்ணேர் தமைவிளிப்ப
போல் ஓங்கும் மிழலேயாமே''

கம்பர் :

இவ்வாறே, மிதிலேமா நகரத்தின் அரண் மனேயின்கண் உள்ள கொடிகள், காற்றில் பரந்து வீசுந் திறனேக் கம்பர் கவின் மிகப் பாடுகின்ருர். ''தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளானவள், யான் செய்த புண்ணியத்தின் காரணமாகச் சீதையாக வடிவெடுத்து வந்து, இங்கே தங்கியிருக்கின்ருள்! அவளேத் திரு மணம் செய்து கொள்வதற்காக, விரைந்து வருக வருக என்று, மிதிலேமா நகரமானது, தன்கண் உள்ள அழகிய கொடிகளாகிய கைகளே நீட்டி, இராமபிரானே அன்புடனும் ஆர்வத்துட னும் அழைப்பதுபோல விளங்கியது.''

''மையறு மலரின் நீங்கி
யான் செய்மா தவத்தின்வந்து
செய்யவள் இருந்தாள் என்று
செழுமணிக் கொடிகள் என்னும்

கைகளை நீட்டி, அந்தக்
கடிநகர், கமலச் செங்கண்
ஐயனை ஒல்லை வாஎன்று
அழைப்பது போன்ற தம்மா'

இளங்கோவடிகள் :

கொடிகள் நல்லனவற்றை மகிழ்ந்து வர வேற்றலை, இத்தகைய பாடல்கள் இனிதுணர்த்தும். இனி, தீயனவற்றை வரவொட்டாமல் தடுத்துக் கொடிகள் விலக்குதலைப் பற்றிய பாடல்களையும், இலக்கியங்களில் காணலாம். சிலப்பதிகாரத்தில், கோவலன் கண்ணகியுடன் புகார் நகரைவிட்டு மதுரை மாநகரம் நோக்கிச் செல்கின்ருன். அவன் அதனை அணுகி நெருங்கும்போது, அக்கோவலனுக்குப் பின்னர் நிகழ இருக்கும் தீங்கினை உணர்ந்து, 'நீ இங்கே வர வேண்டாம்' என்று அறிவுரை கூறித் தடுப்பது போல, மதுரை மாநகரத்துக் கொடிகள் பறந்தன என்று,

''போர் உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்டின''

என்று, சிலப்பதிகாரப் பெருங்காவியத்தில், இளங்கோவடிகள் பாடுகின்ருர்.

வில்லிபுத்தூரார் :

இவ்வண்ணமே, கண்ணபிரானைப் பாரதப் போரில், தனக்கு உற்ற துணையாக இருந்து படைத் துணை அளிக்குமாறு கேட்பதற்கு விரும்பி, துரியோதனன் கண்ணபிரான் அரசு ஓச்சும் துவாரகை மாநகரம் செல்கின்ருன். அதுபோது, துவாரகை மாநகரத்துக் கொடிகள், ''எங்கள் கண்ணபிரான் நல்லவர்களாகிய பாண்டவர்களுக்கே துணை புரிவான். கொடியோனுகிய உனக்குக் கண்ணபிரான் ஒருபோதும் படைத் துணையாக மாட்டான். நீ திரும்பிச் சென்று விடுக'' என்று துரியோதனனை வரவொட்டாமல் தடுப்பதுபோல, துவாரகை மாநகரத்துக் கொடிகள் பறந்தன.''

''ஈண்டுநீ வரினும் எங்கள்
எழிலுடை எழிலி வண்ணன்
பாண்டவர் தங்கட்கு அல்லால்
படைத்துணை ஆக மாட்டான்;
மீண்டுபோ கென்றென்று அந்த
வியன்மதிற் குடுமி தோறும்
காண்தகு பதாகை ஆடை
கைகளால் தடுப்ப போன்ற''

என்று, வித்தகப் பெருங் கவிஞர் ஆகிய வில்லிபுத்தூரார் பாடியிருத்தல், பெரிதும் சுவைத்து இன்புறுதற்குரியது.

தசாங்கம் :

இறைவன் அரசர்களுக்கெல்லாம் பேரரசன். ஆதலின் அரசர்களுக்கு உரிய ''தசாங்கம்'' எனப்படும் (நாடு, நகரம், மலை, ஆறு, படை, கொடி, ஊர்தி, முரசு, மாலை, பெயர் ஆகிய) பத்து வகை உறுப்புகள், இறைவனுக்கும் உளவாக வைத்துச் சான்ருேர்கள் போற்றித் துதிப்பர். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் ''திருத்தசாங்கம்'' பாடியிருத்தல், இவ்வுண்மையை வலியுறுத்தும். இறைவனுக்குரிய தசாங்கங்களுள் கொடியும் ஒன்ருதலின், கோயில்களில் கொடிக் கம்பம் நாட்டுதல் ஒரு பெரும் சிறப்பு நிகழ்ச்சியாகும்.

கொடிக் கவி :

சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினன்கனுள், கொடிக் கவி என்பதும் ஒன்று. சிதம்பரத்தில் ஒரு சமயம் சைவ சித்தாந்த சந்தான ஆசிரியர்களில் ஒருவராகிய உமாபதி சிவம் என்னும் சைவப் பெருஞ்சான்ருேரை, தில்லை வாழ் அந்தணர்கள் ஒரு சிறிது இகழ்ந்து புறக்கணித்ததின் பயனுக, கொடியேற்று விழாவில், எவ்வளவு முயன்றும் கொடி ஏருமல், இறைவனின் திருவருட் குறிப்பால் தடைபட்டு நின்றது. அப்போது உமாபதி சிவாசாரியார் ''கொடிக் கவி'' என்னும் பெயரில் நான்கு பாடல்களைப் பாடியதும், திருவருள் துணையால் அக்கொடி ஏறிற்று என்பது வரலாறு.

''ஒளிக்கும் இருளுக்கும் ஒன்றே
இடம்; ஒன்று மேலிடில் ஒன்று
ஒளிக்கும்; எனினும் இருள்
அடராது; உள்உயிர்க்கு உயிராய்த்
தெளிக்கும் அறிவு திகழ்ந்துள
தேனும், திரிமலத்தே
குளிக்கும் உயிர், அருள் கூடும்படி
கொடி கட்டினனே''

என்பது, கொடிக்கவி என்னும் சைவசித்தாந்த நூலின்கண் வரும் ஓர் அழகிய இனிய பாடல் ஆகும். ''ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களில் அழுந்தி வருந்திக் கிடக்கும் உயிர்கள், இறைவனின் திருவருளை எய்திக் கூடும்படி செய்வதன் பொருட்டு, யான் இக்கொடியை ஏற்றிக் கட்டினேன்'' என்பது, இப்பாடலின் கருத்து.

முடிவுரை :

திருக்காரணீசுவரப் பெருமான் திருக்கோயிலில், இன்று வணக்கத்திற்கும்பெருமதிப்பிற்குமுரிய, நமது அறநிலைய ஆணையர் திரு எம்.கே. பாலசுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில், நிகழ்த்தப்பெற்ற புதிய கொடிக் கம்பம் நாட்டுவிக்கப் பெற்ற இவ்விழாவின் பயனுக, உலக உயிர்களெல்லாம் பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரந்து இன்பமாக வாழவேண்டுமென்றும்; காஞ்சி ஸ்ரீ ஆசாரிய சுவாமிகள் அவர்களால் சில மாதங்களுக்கு முன்னர்த் தொடங்கி வைத்தருளப் பெற்ற இராசகோபுரத் திருப்பணி விரைவில் இனிது நிறைவேற வேண்டுமென்றும்; மிக விரைவிலேயே எல்லாத் திருப்பணிகளும் நிறைவேறப்பெற்று, இக்கோயிலின் கும்பாபிஷேக விழா நன்கினிது நடைபெற வேண்டுமென்றும் விரும்பி, அருள்மிகு பொற்கொடியம்மை(சொர்ணும்பிகை) உடனுறை திருக்காரணீசுவரப் பெருமானின் திருவடிகளை, நாம் அனைவரும் நம் மன மொழி மெய்களால் சிந்தித்து வந்தித்து வணங்குவோமாக! *

வாழ்த்துச் செய்தி

திரு. ஜி. எஸ். சேஷாத்திரி, ஐ.ஏ.எஸ்.,

அரசுச்செயலர்,

வணிகவரி மற்றும் அறநிலையத் துறை, சென்னை-9.

உலகிலுள்ள மக்கள் பலரும் பலவேறு மொழிகளை வழங்கி வருவதுபோல, பலவேறு சமயக் கொள்கைகளையும், வழிபாட்டு முறைகளையும் பின்பற்றி வருகின்றனர். இன்றைய உலக மக்களிடையில், இந்து சமயம், யூத சமயம், ஷிண்டோ சமயம், சௌராஷ்டிர சமயம், தாவோ சமயம், சமண சமயம், பௌத்த சமயம், கன்பூசிய சமயம், கிறித்தவ சமயம், இசுலாமிய சமயம், சீக்கிய சமயம் ஆகியவைகள் பரவி விளங்கி வருகின்றன.

மேலோட்டமாக நோக்கும்போது இச்சமயங்கள் வெவ்வேருகக் காணப்பட்டபோதிலும், இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய், இவைகளுக்கிடையில் பல பொதுத் தன்மைகள் அமைந்து திகழ்கின்றன. யூதம், கிறித்தவம், இசுலாமியம் ஆகிய மூன்றும் ஒன்றற்கொன்று மிகவும் நெருங்கிய தொடர்புடையது.

அவ்வாறே இந்து சமயம், சமண சமயம், பௌத்த சமயம், சீக்கிய சமயம் ஆகியவைகளும் ஒன்ருேடொன்று தொடர்புடையனவாகும். ஒரு வகையில் இவைகளை இந்து சமயத்தின் கிளைச்சமயங்கள் என்று சொல்வது கூட, மிகவும் பொருந்தும்.

பொதுவாக எல்லாச் சமயங்களிலும் வழிபாட்டிற்குரிய ஒரு கடவுள், அக்கடவுள் அருளிச் செய்ததாகக் கருதப்பெறும் ஒரு சமய நூல், அக்கடவுளை வழிபடுதற்குரிய கோயில் அல்லது யாத்திரைத் தலங்கள், அச்சமயத்திற்குரிய தத்துவக் கருத்துக்கள், விழாக்கள், விரதங்கள், சடங்கு முறைகள், மந்திரங்கள், அச்சமயத்தைச் சார்ந்த ஞானிகள் அல்லது அருளாளர்கள், தனித்தனியே உண்டு. சமயங்கள் பலவாக இருப்பினும், இவைகள் எல்லாச் சமயங்களுக்கும் அடிப்படையான பொதுத் தன்மைகளாகும்.

சமயங்கள் தனித்தனியே வெவ்வேருனவைகள் என்ற கருத்தினுலேயே, அச் சமயங்களைச் சார்ந்த மக்களிடையில் சில சமயங்களில் போரும் பூசலும் குழப்பமும் கலகமும் ஏற்படுவதுண்டு. அவ்வாறு இல்லாமல் பல சமயங்களுக்கும் இடையில் அமைந்து விளங்கும் அடிப்படைப் பொதுத் தன்மைகளை மக்கள் ஆராய்ந்து அறிந்து கொள்ள முற்படுவார்களாயின், சமயப் போருக்கும் பூசலுக்கும் இடமின்றி, அவர்களுக்கிடையில் அன்பும் ஒற்றுமையும் நட்புறவும் ஏற்பட்டு, மக்கள் அனைவரும் இன்பமாக மகிழ்ந்து வாழ்வார்கள்.

உலக மக்கள் எல்லோரும் ''சமாதான ஆனந்த சகவாழ்வு'' (Peaceful - Happy-Co-existence) நடத்தி வளமுற்று மகிழ்ந்து வாழ்வதற்கு, சர்வ சமய சமரச நோக்கமும் பண்பாடும் ஏற்படுதல் இன்றியமையாதது. அவரவர் தத்தம் சமயமே பெரியது சிறந்தது: ஏனையன சிறியன இழிந்தன என்று கருத முற்படுதல், ''கிணற்றுத் தவளை கடற்றவளையை நோக்கி, உங்கள் கடல் எங்கள் கிணற்றுக்குச் சமமாகுமோ?'' என்று வினவி ஏளனம் செய்தாற் போன்ற அறியாமையின் விளைவேயாகும். இவ்வுண்மையினையே திருநாவுக்கரசுசுவாமிகள்,

''கூவல் ஆமை குரைகடல் ஆமையைக்
கூவலோ டொக்குமோ குரைகடல் என்றல்போல்,
பாவ காரிகள் பார்ப்பரிது என்பரால்
தேவ தேவன் சிவன்பெருந் தன்மையே''

என்று அறிவுறுத்தி அருளினர். ''கூப மண்டூக நியாயம்'' என்னும் இக்கருத்தினையே, சுவாமி விவேகானந்தர் அவர்களும், சிகாகோவில் நிகழ்ந்த உலகச் சமய மாநாட்டில் எடுத்துரைத்து விளக்கிப் பேசி, இன்றைய உலக மக்களின் நல்வாழ்விற்குச் சர்வ சமய சமரசப் பெரு நோக்கம் வேண்டும் என வற்புறுத்தி மொழிந்தார்.

இந்தச் சர்வ சமய சமரச நோக்கத்தினை வற்புறுத்தியே, சிறந்த சித்தரும் ஞானியும் ஆகிய திருமூலர், தமது திருமந்திர நூலில் ''ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்'' என்று 1,500 ஆண்டுகளுக்கு முன்பே வற்புறுத்திக் கற்பித்துச் சென்ருர். ஸ்ரீ வைஷ்ணவப் பெருஞ் சான்ருேராகிய நம்மாழ்வாரும், உலக மக்களின் பல திறத் தகுதிக்கேற்பப் பலவேறு வகையான சமயங்களையும் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே ஏற்படுத்தி வைத்து, அவரவருடைய பக்குவத்துக்கும் தகுதிக்கும் பக்திக்கும் ஏற்ப அருள்புரிந்து வருகின்ருன், அதனுல் சமயங்களுக்கிடையில் பேத உணர்வு தேவையில்லை; சமரச உணர்வே பரவி வளர்தல் வேண்டும் என்னும் கருத்தமைய,

''வணங்கும் துறைகள் பலபல ஆக்கி, மதிவிகற்பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி, அவையவைதோறு
அணங்கும் பல ஆக்கிநின் மூர்த்தி பரப்பிவைத்தாய்
இணங்குநின் னோரையில் லாய் நின்கண் வேட்கை
எழுவிப்பனே''

என்று திருவாய் மலர்ந்தருளினார்.

ஆறுகள் வெவ்வேறு இடங்களில் தோன்றி வெவ்வேறு பிரதேசங்களில் பாய்ந்தாலும், இறுதியாக அவைகள் கடலிலேயே சென்று சேர்ந்து கலந்து விடுகின்றன. அதுபோலப் பல வேறு மதங்களும் வெவ்வேறு இடங்களில் தோன்றி, வெவ்வேறு மக்களினத்தால் கடைப் பிடிக்கப் பெற்று வந்தபோதிலும், அவைகள் அனைத்தும் கடவுள் வழிபாடு செய்வதையும், அக்கடவுளின் அருளைப் பெறுதலையுமே குறிக் கோளாகக் கொண்டுள்ளன. இவ்வுண்மையை உலக மக்கள் அனைவரும் செவ்விதின் உணர்ந்து கொண்டால், இம்மண்ணுலகமே விண்ணுலக மாய் மாறி, வையகத்திலேயே வானகத்து இன்பங்களை யெல்லாம் மனிதகுலம் எய்தி இன்புற்று வாழ்தல் இயலும்.

இத்தகைய உயரிய சிறந்த உண்மையை யும், குறிக்கோளையும், மக்கள் அனைவரும் உணர்ந்து கடைப்பிடிக்குமாறு செய்வதற் காகவே, ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் அவர்கள், மதுரையில் அகில உலக சமய கலாசார தத்துவ மாநாடு நிகழ்வதற்குத் திரு அருள் பாலித்திருக்கின்றார்கள்.

உலக சமய கலாசாரத் தத்துவ மாநாடு, மதுரையில், காந்தி மியூசியத்தில், 30-3-77 முதல் 5-4-77 வரை நிகழ்வதும்; அதன்கண் அயல் நாடுகளில் இருந்தும் அறிஞர்கள் பற்பலர் வந்து கலந்துகொண்டு, தத்தம் சமய கலாசரா தத்துவங்களைப் பற்றி அரிய பெரிய ஆராய்ச்சி யுரைகள் ஆற்ற இருப்பதும்; பெரிதும் போற்றி மகிழ்தற்குரியன.

உலக சமய கலாசாரத் தத்துவ மாநாடு சிறப்புற நிகழவும், அதன் பயனாக மக்களிடை யில் சர்வ சமய சமரச ஞானநோக்கம் அரும்பி மலரவும் வேண்டும் என விரும்பி, மதுரை மீனாட்சியம்மையின் திருவருளைச் சிந்தித்து வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றேன்.

இறைவனும், உருவத் திருமேனியும்

மக்கள் உயிரின்நிலை அறிவும் உணர்வும் என இரு திறப்படும். அறிவைப் பார்க்கிலும் உணர்வே சிறந்ததாகும். அறிவு உருவத்தைப் பற்றி நிகழும், உணர்வு அஃதின்றியும் நிகழும். உயிரின் அறிவாற் பற்றப்படாத அருவவியலுடைய முழு முதற் கடவுள், அன்பு என்னும் உணர்வு நிலையாற் பற்றுதற்கு எளியனாய், ஓர் உருவத் திருமேனி கொண்டு எழுந்தருளி வந்து அருள் புரிவன். ஆகலின் இறைவனுக்கு அருவத் திருமேனி மட்டுமே உண்டென்றல் இழுக்காம். இது,

''விறகிற் றீயினன் பாலிற் படும்நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல்நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடையமுன் நிற்குமே''

என்று திருநாவுக்கரசர் பெருமான் அருளிச் செய்த செந்தமிழ்த் திருமறையானும்,

''ஆத்மாநம் அரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்,
த்யாந நிர்மத நாப்யாஸாத் தேவம் பச்யேந் நிகூடவத்,
திலேஷு தைலம் ததிநீவ ஸர்பி ராபஸ்ரோதஸ் ஸ்வரணீஷு சாக்நி''

என்னும் வடமொழி உபநிடத மறையானும், இனிது பெறப்படும்.

—மறைமலையடிகள்.

இராம காதையில் வண்டோதரி

திரு. மு. முத்துக்கிருஷ்ணன், M.A., B.T., செய்யாறு

கம்பர் சமைத்த காகுத்தன் காவியத்திலே, கற்பின் கண்மணிகளாக மிளிர்பவர்கள்—முதல் இடம் பெற்றுச் சிறப்புற்று ஒளிர்பவர்கள் சீதை, தாரை, மண்டோதரி ஆகிய மூன்று மங்கையர்க்கரசியர் ஆவர். 'மந்தோதரி' (மந்த உதரி) என்னும் பெயரே, தமிழில் மண்டோதரி என வழங்குகின்றது. மணிவாசகர் இவளை வண்டோதரி (வண்டுகள் மொய்க்கும் கூந்தலையுடையவள்) எனக் குறிப்பிடுவார். ''ஆர்கலிசூழ் தென் இலங்கை அழகமர் வண்டோதரிக்குப் பேரருள் இன்பம் அளித்த பெருந்துறை மேய பிரான்'' எனவரும் திருவாசகப் பாடல் (347), இங்கு நாம் கருதுதற்குரியது. வண்டோதரி அரக்கர் குலத்தைச் சேர்ந்தவள் என்று சிலர் நினைப்பது தவறு. கற்பிற் சிறந்த அவள், தேவர் குலத்தைச் சேர்ந்தவள் ஆவாள்.

தேவதச்சன் மயன் என்பானின் அருமருந்தன்ன, அற்புதப் புதல்வி—அழகுச் சிலை இந்த வண்டோதரி. 'சீதையே இவள்' என்னும் திகைப்பை அனுமனுக்கு ஊட்டிய எழிலரசி இந்த இலங்கையரசி. மாசு மறுவேயில்லாத பத்தரை மாற்றுத் தங்கம். அடக்கத்தின் நிலைக்களன். அன்பின் உலைக்களன், அறிவின் கலைக்களன், கற்பின் நிறைவிடம்; கணவன் இலங்கேசுவரனின் நியாயமற்ற—அறம் வழுவிய செயல்களை எண்ணியெண்ணிக் கண்ணீர் வெள்ளத்திலே மிதந்து, இறுதியிலே இராமபிரானின் அடுகணை ஒன்றால் மாழ்கித் துஞ்சிய இராவணன் மீது விழுந்து கதறிக் கதறி ஆருயிரை விடுத்த மங்கையர் திலகம் அந்த மாதரசி.

உயர்ந்த பண்பாடு படைத்த தேவதச்சனும் மயனின் தவச் செல்வியாய் இருந்தும் — பாவம்! அவள் விதிப் பயன் அவளை அரக்கர் கோனின் துணைவியாக ஆக்கிவிட்டது. கண்டார் இகழ்வனவே காதலன் தான்செய்திடினும் கொண்டானை யல்லால் அறியாக் குலமகளாக, இல்லற வாழ்க்கை நடத்தினாள் அந்தப் பெண்ணின் திலகம். கணவனின் தீய செயல்களைக் கண்டித்துத் திருத்த அவளுக்குத் துணிவில்லை. அவ்வாறு பேசுவதே பிழை எனக் கருதினாள். ஆற்றல் மிக்கவனாய்—அருந்தவ வலிமையினனாய்—விண்ணவரையும், மண்ணவரையும், எண் திசைகாக்கும் இறையவர்களையும், ஒன்பான் கிரகங்களையும் எண்ணில்லா முனிவர்களையும், தன் ஆணைக்குட்படுத்தித் தன்னிகரற்று ஏற்றத்துடன் வாழ்ந்த தன் கணவனின் உயர்நிலையினை இதயத்தில் எண்ணி எண்ணி இறும்பூதெய்தினாள். பெருமிதம் அடைந்தாள். பட்டத்து மகாராணியான அவள் வாழ்க்கையிலே, அவளுக்கு ஒரு குறையும் இல்லை. களிப்பிலே மிதந்து கிடந்த அவளுக்குக் கவலை யளித்தது, பிறர் மனை விழைந்த இராவணன் செயல் ஒன்றுதான். அதனைக் கண்டிக்கும் நெஞ்சுறுதி அவள் பால் ஏற்படவில்லை. அவளுக்கு மட்டுமா? உடன் இருந்த அமைச்சர்கட்கும், உடன்பிறப்புகட்கும், சுற்றத்தார்க்கும், தோழர்கட்கும்கூட, அஞ்சா நெஞ்சத்துடன் அவன் பிழையை இடித்துக் காட்டித் திருத்தும் துணிவு இறுதி வரை ஏற்படவே யில்லை. இதனால்தான் போலும் சீதை, தன்னை விரும்பித் தன்னிடம் அசோக வனத்திலே முறையிட்ட இராவணனை நோக்கிக்

> கடிக்கும் வல்லரவு கேட்கும்
> மந்திரம், களிக்கின்றோயை
> அடுக்கும், ஈது அடாது, என்ற
> ஏதுவோடு அறிவுகாட்டி
> இடிக்குநர் இல்லை, உள்ளார்
> எண்ணியது எண்ணியுன்னை
> முடிக்குநர் என்றபோது
> முடிவன்றி முடிவதுண்டோ?

என்று அறிவுரை கூறுகின்றாள். ''இராவணனே! கருநாகம் போன்ற நெஞ்சத்தார் உன்னைச் சூழ்ந்துள்ளனர். நீ புரியும் இந்தச் செயல் நியாயமானது அல்லது நியாயமற்றது, என எடுத்துக் காட்டி நினக்குத் தெளிவான அறிவு ஏற்படும் வண்ணம் கண்டிப்புடன் இடித்துக் கூறி அறிவுரை புகலும் ஆன்றோர்களாக, உன் அருகே யாருமே இலர். இருப்பவர் எல்லாம், நீ சொல்லுகின்றவற்றுக் கெல்லாம் ஆமாம் போட்டு, ஆடும் பொம்மைகளாக இருந்து, உன்னுடைய முடிவு காலத்தை விரைவிலே கொண்டுவர முனைகிறபோது உன் அழிவை யாரால் தடுக்க இயலும்?'' இதுதான் சீதையின் அறிவுரை.

இராவணனுக்குச் சிலர் அறிவுரை கூறினர். ஆனால் இடித்துரை இயம்பினார் எவருமே இலர். வீடணன் அன்புரையும், கும்பகருணன் பாசமொழியும், இந்திரசித்தன் உருக்க போதனையும், இராவணனின் மனத்தை மாற்ற முடியாமல் முனை மழுங்கிப்போன வேல்களாய் விட்டன என்றபோது, வண்டோதரியின் போதனையா எடுபடப் போகிறது? ஆகவே ஆமையாய்,

ஊமையாய், அலங்காரப்பதுமையாய்—உரிமை யற்ற பாவையாய்க் கிடக்க வேண்டிய பரிதாப நிலையிலே, பாவம்! வண்டோதரி வாடினுள், வதங்கினுள்.

சீதையைத் தன் கணவன் கவர்ந்து வந்தது, அவள் சிந்தையைக் கலங்க வைத்தது. அனலிற் புழுவெனத் துடித்தாள். ஆயினும் எதிர்த்துப் பேசுவது எப்படி? காவியம் தீட்டிய கம்பர், அந்தக் கற்புக்கரசியின் மீது ஒரு சிறிது கூடக் குறை சொல்ல இயலாமல், தம் நூலைத் தீட்டியவாறே செல்கிருர்.

சீதையைத் தேடி இலங்கையில் நுழைகிருன் மாருதி. வியப்பூட்டும் விண்ணளாவிய மாளிகைகள்—கவர்ச்சியும் வண்ணமும் வனப்பும் மிக்க தோரணங்கள், மணம் கமழும் பூங்காக்கள் அவன் இதயத்திலே ஒருவிதப் புத்துணர்வை விளைவிக்கின்றன. கம்பீரமாக இலங்கையர்கோன் அரண்மனையிலே காலடி எடுத்து வைக்கிருன், அந்தக் காற்றின் மைந்தன். அவன் அங்கே காண்பது என்ன? 'பஞ்சணையிலே இராவணன் அருகே படுத்து உறங்குவது யார்?' ஒரு கணம் அவன் சிந்தனை, புயலில் சிக்கிய புல்லே போலச் சுழன்று தத்தளிக்கின்றது. ''என் அன்னை சீதை போலும் இவ்வம்மை யார்?''—எனத் திகைக்கிருன். 'சே' —என்னே என் பேதைமை! சீதை இங்கே இருந்தால் இந்நேரம் இந்தப் பிரபஞ்சமே அழிந்து போயிருக்காதா? இது சீதையன்று. ஆம்! இராவணன் மனைவி வண்டோதரியாகத் தானிருக்க வேண்டும்'' என்னும் முடிவுக்கு வருகிருன். இத்தகு உயர்தகைச் செல்வி அந்த உத்தமி வண்டார்குழலி.

போர்க்களத்திலே இலங்கை மாநகரின் எண்ணற்ற வீரர்களும், மாந்தரும், நண்பரும், சுற்றத்தாரும், தன் கணவன் ஒருவனின் தகாத ஆசை காரணமாகப் பலியாகும் கொடி காட்சி, அவள் இதயத்தைத் துளைக்கிறது. அவளுடைய குடும்பச் செல்வங்கள் எல்லாம் கூட அமரில் அந்தகனுக்குக் காணிக்கைகளாக மாறும் பயங்கர நிலையை நினைந்து துடிக்கிருள். தன் இளைய மைந்தன் அட்சய குமாரன் எதிர்பாராதவிதமாக அனுமனல் கொலையுண்ட கொடுமையை அப்பப்பா! எப்படித் தாங்கிக் கொள்வாள் அந்த மங்கை! அதிர்ச்சியால் துடிக்கிருள். மூர்ச்சையுற்று வீழ்கிருள். அவளுக்கு யாரே ஆறுதல் கூற இயலும்?

அது மட்டுமா? அமரர் உலகையே அதிர்ச்சிக் குள்ளாக்கிக் கலக்கிய அசகாய சூரன் மேகநாதன்—ஆம்! இந்திரசித்தன் இலக்குவனல் தலையறுப்புண்டு, அந்தத் தலை கூட இல்லாத வெற்றுடலைக் கண்ட அந்த மங்கையர் திலகத்தின் உள்ளம் எவ்வாறு கொதித்து இருக்கும்? எண்ணிப் பாருங்கள். 'புத்திர சோகம்' எனும் நஞ்சினல் பொன்றினற் போலத் தரை மீது விழுந்து புரண்டு கதறலானுள். கம்பரின் பாடல்களிலேதான் எத்துணை உருக்கம்?

தலையிற் சுமந்த கையள்,
தழலின்மேல் மிதிக்கின்ருள் போல்
நிலையின்மேல் மிதிக்கும் தாளள்,
நேசத்தால் நிறைந்த நெஞ்சள்
கொலையின்மேல் குறித்த வேடன்
கூர்ங்கணை உயிரைக் கொல்ல
மலையின்மேல் மயில் வீழ்ந்தென்ன
மைந்தன்மேல் மறுகி வீழ்ந்தாள்.

பாவம்! ஒரு பிழையுமறியாத அப்பாவிப்பெண் மணியின் ஆருத் துயரம் நம் நெஞ்சையெல்லாம் நெகிழ வைப்பதாகும்.

'அன்புச் செல்வனே! பிறைமதியே போன்று வளர்ந்து வரும் கலைகளிலே வல்லவனுய் விளங்கிய நீ, அன்றொரு நாள் நின் ஆற்றல் மிக்க வில்லினல் சிங்கம் ஒன்றை வீழ்த்தி வெற்றி கண்ட நிகழ்ச்சி கண்டு விம்மிதம் எய்தினேன். அந்தோ! இன்று தலையில்லாத நின் உடலைக் காண யான் என்ன பாவம் புரிந்தேன்? என்னே இந்த வாழ்க்கை நிலை!

கலையினல் திங்கள் என்ன
வளர்கின்ற காலத்தே உன்
சிலையினல் அரியை வெல்லக்
காண்பதோர் தவமும் செய்தேன்;
தலையிலா ஆக்கை காண
எத்தவம் செய்தேன்! அந்தோ!
நிலையிலா வாழ்வை இன்னும்
நினைவெனே? நினைவிலாதேன்.

தாளிச் சதங்கை ஆர்ப்பத்
தவழ்கின்ற பருவம் தன்னில்
கோளரி இரண்டு பற்றிக்
கொணர்ந்தனை, கொணர்ந்து கோபம்
மூளுறப் பொருத்தி மாட
முன்றிலில் முறையினேடி
மீளரு விளையாட்டுஇன்னும்
காண்பெனே விதியிலாதேன்?

'இன்ப மகனே! தரையிலே தவழ்ந்து விளையாடுகின்ற நின் குழந்தைப் பருவத்திலே விளையாட்டாகவே நீ சிங்கக் குட்டிகள் இரண்டினைப் பற்றிக் கொண்டு வந்து மாடியிலே விளையாடிய அந்த மகத்தான காட்சியை இனி எப்போது காண்பேன்?

'பஞ்செரி யுற்ற தென்ன
அரக்கர்தம் பரவையெல்லாம்
வெஞ்சின மனிதர் கொல்ல
விளிந்ததே, மீண்டதில்லை;
அஞ்சினேன், அஞ்சினேன் இச்
சீதை என்று அமிழ்தால் செய்த
நஞ்சினல் இலங்கை வேந்தன்
நாளை இத்தகையன் அன்றே?

''மூண்டெழுந்த தீயினல் பஞ்சுப் பொதிகளெல்லாம் எரிந்து சாம்பலாதல்போல அரக்கர் கூட்டமெல்லாம் மனிதர் இருவரால் மாண்டு ஒழிகின்றனவே; ஐயகோ! என் செய்வேன்! சீதை எனப்படும் அமுதத்தால் செய்த நஞ்சினல் என் அருமை ஆருயிர்க் கணவர் இலங்கை வேந்தர்க்கும் நாளைக்கு இந்தக் கதி ஏற்படத்தான் போகிறதோ?''

என்றெல்லாம் புலம்பி அலமரும் அவள் தன் நிலை பரிதாபத்துக்குரியதாகும்.

மீண்டும் இறுதியாக இராவணன் மடிந்து கிடக்கும் போர்க் களத்திலேதான், வண்டார் குழலியை நமக்குக் காட்டுகிறார் கம்பர்.

தன் வாழ்க்கைத் துணைவன், முக்கோடி வாணாளும், முயன்று பெற்ற பெருந்தவ வலிமையும், எக்கோடி யாராலும் வெலப்படாய் என்றுரைத்த அரிய வரங்களும் இழந்து, களத்திலே வீழ்ந்து கிடக்கும் காட்சியைக் காணுகின்றாள், அந்தக் கற்புக்கரசி. அவள் உள்ளம் பதைக்கிறது. கதறுகிறாள். கலங்குகிறாள். கண்ணீர் விடுகிறாள்.

''வெள்ளெருக்கம் சடைமுடியான் வெற்படுத்த
திருமேனி மேலும் கீழும்,
எள்ளிருக்கும் இடமின்றி உயிர் இருக்கும்
இடம்நாடி இழைத்தவாறோ?
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் சானகியை
மனச்சிறையில் கரந்த காதல்.
உள்ளிருக்கும் எனக்கருதி உடல்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?''

'சிவபெருமானின் கயிலை வெற்பையே எடுத்து அசைத்த ஆற்றல் மிக்க உடம்பெல்லாம் அம்புகள், எள்ளிருக்கும் இடம்கூட விடாமல் வைத்துள்ளனவே. என்னே கொடுமை! இராகவனின் வாளி நின் உடலினுள்ளே புகுந்து சீதைமேல் நீ கொண்ட காதல் எங்கே இருக்கிறது? எனத் தேடித் தடவியதோ? ''அந்தோ! மாதர்க்கரசி சீதையின் அழகும், கற்பும், என் கணவர் அவள்மேல் வைத்த காதலும், சூர்ப்பநகை இழந்த மூக்கும், தந்தையின் ஆணையால் மைந்தர்கள் கானகம் போந்த நிலையும், தேவர்கட்கு வாய்ப்பாக அமைந்து விட்டனவே.''

''தேவர்க்கும், மூவர்க்கும் வலிமையுடையனை என் ஆருயிர்த் துணைவருக்கு அழிவு செய்வாரும் உளரோ? என இறுமாந்து கிடந்தேன். அவருடைய ஆவியையும் பறிக்கவல்ல மானிடன் ஒருவன் தோன்றுவான் என்று யான் எண்ணிக் கூடப் பார்க்கவில்லையே.''

''காந்தையருக்கு அணியனைய சானகியார்
பேரழகும், அவர்தம், கற்பும்
ஏந்துபுயத்து இராவணனார் காதலும், அச்
சூர்ப்பநகை இழந்த மூக்கும்,
வேந்தர்பிரான் தயரதனார் பணியினால்
வெங்கானில் விரதம்பூண்டு
போந்ததுவும் கடைமுறையே புரந்தரனார்
பெருந்தவமாய்ப் போயிற்றம்மா''

''தேவர்க்கும், திசைக்கரிக்கும், சிவனார்க்கும்,
அயனார்க்கும், செங்கண்மாற்கும்,
ஏவர்க்கும் வலியானுக்கு என்றுண்டாம்
இறுதியென ஏமாப்புற்றேன்;
ஆவற்கண் நீயுழன்ற அருந்தவத்தின்
பெருங்கடற்கும் வரம் என்று ஆன்ற
காவற்கும் வலியான் ஓர் மானுடனார்
உளர் என்னக் கருதினேனோ?

இவ்வாறெல்லாம் கதறி ஓய்ந்த அந்தக் காரிகை, தலையாய கற்பினள் ஆதலின், தன் அன்புக் கணவன் மீது விழுந்து உயிர் துறக்கின்றாள், என்று முடிக்கிறார் கம்பர்.

என்றழைத்தனள் ஏங்கி எழுந்தவன்
பொன்தழைத்த பொருவரும் மார்பினைத்
தன்தழைக்கைகளால் தழுவித் தனி
நின்றழைத்து உயிர்த்தாள்; உயிர் நீங்கினாள்.

ஆகவே வண்டார் குழலி போன்று—வாழ்க்கையிலே உயரிய பேறு பெற்றிருந்தும் கூட—செல்வத்திலே புரளும் சிறப்பு இருந்தும் கூட அமைதியில்லாத அவல வாழ்விலே—ஆயிரமாயிரம் அல்லல்கள் சூழ்ந்த தொல்லை வாழ்விலே வாழ்ந்து மறைந்த கற்புக் கண்மணிகள் பலரைக் காவியங்கள் பல பாருலகிற்கு எடுத்துக் காட்டியிருக்கின்றன. ஆயினும் கம்பன் காவியப் பூங்காவிலே சோகச் சிலையாகக் காட்சி தரும் வண்டார் குழலி போன்று வேறொரு காப்பியப் பெண்மணியை நாம் காண்டல் அரிது. பகைவரையும் பழிக்காத பண்புடையவளாக வண்டார்குழலி மிளிர்ந்தாள். அவள் தன் தூய கற்பு நெறி உலகெலாம் பரவுவதாகுக.

பட்டாபிஷேக விழா

நெரிஞ்சிப்பேட்டை அருள்மிகு திரு ஆலங்காடு இம்முடி அகோர தர்ம சிவாசாரிய ஆயிர வைசியர் மடத்தில் 65 ஆண்டுகளுக்கு முன் அருள்மிகு சப்தரிஷி தர்ம சிவாசாரியாரின் பட்டாபிஷேகம் நடைபெற்றது. திருமடத்தின் மரபுப்படி மடாதிபதியாக நியமனம் செய்யப்படுபவர், சுமார் 10 வயது முதல் 12 வயதிற்குள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 25 வருடங்களாக மடாதிபதி ஸ்தானம் காலியாக இருந்தது. தவத்திரு சங்கர சுப்பிரமணிய தர்ம சிவாச்சாரிய சுவாமிகள், எட்டாவது மடாதிபதியாக அறங்காவலர் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டு, சுவாமிகளின் பட்டாபிஷேகம், முறைப்படி வேத விற்பன்னர்களால் ஆசாரிய ஸ்தான பட்டாபிஷேகத்திற்கு வேண்டிய ஓமங்கள், பூஜைகள், கடந்த 31-1-1977 தேதி முதல் தொடங்கி, ஸ்ரீராஜராஜேஸ்வரியின் அருளால் 7-2-1977-ந்தேதி வரை நடத்தப்பட்டு, அன்றே பட்டாபிஷேகமும், முடிசூட்டு விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. இத்திருமடத்தின் மடாதிபதி ஆயிரவைசிய சமூகத்திற்கு என்றே ஏற்பட்ட குருவாகும். மடாதிபதி தவத்திரு சங்கரசுப்பிரமணிய தர்ம சிவாசாரிய சுவாமிகள், இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், சத்குரு சம்ஹாரகோட்டைக் கிராமத்தில் பிறந்து, கும்பகோணம் வேத பாடசாலையில் ஐந்து ஆண்டுகள் யஜுர் வேதம் பயின்றவர் என்பதும், குறிப்பிடத்தக்கது.

மேற்படி விழாவில் ஆயிர வைசியப் பெருங்குடி மக்கள், தமிழ்நாடு மற்றும் மைசூர் மாநிலத்திலிருந்தும், சுமார் 9,000 ஆண், பெண் இருபாலாரும் பக்தி சிரத்தையுடன் விழாவில் கலந்து கொண்டார்கள்.

ஆலயத் தத்துவ விளக்கம்

திரு. குமாரசாமி குருக்கள், அச்சுவேலி

(முற்றொடர்ச்சி)

ஆவாகனம் இருவகைத்து :

பிரதிட்டா காலத்திலே சர்வசங்கார காலமளவாகச் சிவலிங்கத்திலே சாந்நித்தியமா தற்காகச் செய்யப்படும் ஆவாகனம் ''சிற்பிர காசாவாகனம்'' எனவும், தினந்தோறும் பூசா காலத்தில் சிவலிங்கத்தில் எழுந்தருளியிருக் கும் சதாசிவமூர்த்தியினுடைய நான்கு முகங்களி லும் வியாபித்திருக்கும் ஈசான முகம் தன்னைப் பார்க்கும்படி செய்வது, 'அபிமுகீகரண ஆவா கனம்' எனவும், ஆவாகனம் இரு வகைப்படும். மூலமந்திரத்தினுல் தரிசிக்கப்பட்ட பரிபூரணத் தை ஆன்மாவானது சிவப்பிரகாசமாகிய அருளி னுல் அறிந்து, அதில் அழுந்துதலே இதன் உண்மையாகும்.

தாபனம் :

தாபனமாவது, தயாநிதியே அடியேனுக்கு அனுக்கிரகம் செய்யும் நிமித்தம் இச்சிவலிங்கத் தில் எழுந்தருளியிருக்க வேண்டுமென்று அன் புடன் செய்யும் பாவனையேயாம். இதனுண் மையைக் கூறுமிடத்து, ஆன்மாசிவபெருமானைத் திருவருளினுல் அதிலழுந்துதலே நிலைபெறச் செய்தலாம்.

''அலையாதழுந்த நிலைபெறல் தாபனம்''

சந்நிதானம் :

சந்நிதானம், ஆன்மாவினறிவு சிவபெரு மானுடைய பரிபூரண குணத்திலும், சிவபெரு மானது பரிபூரணத் தன்மையானது ஆன்மா வினறிவிலும், ஒன்றையொன்று பிரியாதபடி, ஆண்டானும் அடிமையுமாக நிற்றலே இதன் உண்மையாகும்.

சந்நிரோதனம் :

சந்நிரோதனமானது, பகவானே எப்பொ ழுதும் என்னிடத்தில் அனுக்கிரகம் வைத்திருக்க வேண்டும் என்னும் மனோபாவனையேயாம்.

ஆன்மாவினிடத்துப் பொருந்திய அறிவு எக்காலத்தும் நீங்காதபடி சிவத்திலொடுங்கு தல் என்னும் உண்மையேயாகும்.

அவகுண்டனம் :

அவகுண்டனமாவது, எண்ணிறந்த கர ணங்களையுடையவராகவும், சின்மயராகவும், எங்கும் நிறைந்திருப்பவராகவும் இருக்கும் பர மேசுவரரைப் பத்தர் அல்லாதவர்களுக்கு அறிவிக்காமல் மறைத்தல் என்று சோமசம்பு பத்ததி கூறுகிறது.

பாத்தியாதி :

சிவனைப் பூசித்தலினுலே சிவசத்தி பதியப் பெற்ற சிவார்க்கியத்தால், பாத்தியம், ஆச மனீயம், அருக்கியம் என்பவைகளைக் கொடுத் தல் ஆன்ம சுத்தியின் பொருட்டாகும்.

அபிஷேக பலன் :

வடிகட்டிய திருமஞ்சனம் கங்காதீர்த்தத் துக்குச் சமானமாதலால் திருமஞ்சனத்தை வடி கட்டி வாசனைத் திரவியங்களையும் புஷ்பங்களை யும் இட்டு, ''அருளெனும் புனலினையாட்டி'' எனக் காசிகாண்டம் பகர்ந்தாங்கு, திருவரு ளாகிய ஞானமே திருமஞ்சனமெனப் பாவித்து அபிஷேகஞ் செய்யின் மல நிவாரணமாகும். ''திகழ்மலசுத்தி நிமித்தமாக, மகிழ்வுடனே திருமஞ்சனம் பண்ணி'' என்பதனுல் உணர்க. சந்தனுதித் தைலம் சுகத்தையும், மாக்காப்பு மலநிவாரணத்தையும், ஆமலகம் ரோக சாந்தி யையும், மஞ்சள்மா இராச வசியத்தையும், பஞ்ச கவ்வியம் ஆன்ம சுத்தியையும், இரச பஞ்சாமிருதம் வெற்றியையும், பஞ்சாமிருதம் செல்வத்தையும், பஞ்சபலோதகம் மந்திர சித்தியையும், பால் ஆயுள் விருத்தியையும், தயிர் பிரஜா விருத்தியையும், நெய் மோட்சத் தையும், தேன் சங்கீத வன்மையையும், கருப் பஞ்சாறு நித்திய சுகத்தையும், சர்க்கரை சத்துரு நாசத்தையும், வாழைப்பழம் பயிர் விருத்தியையும், பலாப்பழம் லோகவசியத்தை யும், மாம்பழம் சகல வெற்றியையும், தமரத் தம்பழம் பூமி லாபத்தையும், மாதுளம் பழம் பகை நீக்கத்தையும், நாரத்தம்பழம் சற்புத்தி யையும், எலுமிச்சம்பழம் மிருத்து நிவாரணத் தையும், இளநீர் சற்புத்திரப் பேற்றையும், அபமிருத்யு நிவாரணத்தையும், கோரோசனை தீர்க்காயுளையும், பச்சைக் கற்பூரம் பய நிவா ரணத்தையும், கஸ்தூரி வெற்றியையும், பன் னீர் சாலோக்கியத்தையும், சந்தனக் குழம்பு,

சாயுச்சியத்தையும், சகஸ்ரதாரை ஞானத்தையும், ஸ்நபனம் சன்ம சாபல்யத்தையும், கொடுக்குமென்று சிவாகமங்கள்செப்புகின்றன.

திருவொற்றுடை :

சிவபெருமானுக்குத் திருவொற்றுடை சாத்தியவர்கள் தங்கள் மரபிலுள்ள சுற்றத்தார்களை நரகத்திலிருந்தெடுத்து முத்தியிற் சேர்ப்பார்கள்.

சந்தனம் :

சுகந்த திரவியங்கள் சேர்க்கப்பட்டதும் திருவருட் சத்திமயமானதுமான சந்தனத்தைச் சாத்துபவர்கள் பிரபஞ்ச வைராக்கிய முடையவர்களாய்ச் சிவலோகத்தை அடைவார்கள். மெய்யன்போடு சந்தனம் சாத்துபவருடைய பேற்றை மூர்த்தி நாயனருடைய சரித்திரத்தால் அறிக. இது திருவருட் சத்தி பதிதலென்னும் பாவனையாம்.

புஷ்பதானம் :

வாசனையுள்ள புஷ்பங்களைச் சிவபெருமானது திருமுடியிற் சாத்துதல் சுத்த சைதன்ய மான ஆனந்தத்தின் பொருட்டாம்.

''நறுமலர் தன்னை நல்வீட் டின்பங்
குறுகுத லேது வாகவுங் கொடுத்து''

என்பதனுல் அறிக. சாத்துவிக குணமுள்ள வெண்ணிறப் புஷ்பங்களால் சாத்துவிக காலமாகிய உஷத் காலம், சாயரட்சை, அர்த்தயாமம் என்னும் காலங்களில் அருச்சித்தவர்கள் மோட்சத்தை அடைவார்கள்.

இராசத குணமுடைய செந்நிறப் புஷ்பங்களால் இராசத காலமாகிய மத்தியானத்திற் பூசித்தவர்கள் போகத்தை அடைவார்கள். இராசத சாத்துவிக குணமுடைய கொன்றை முதலிய புஷ்பங்களால், இராசத சாத்துவிக காலமாகிய பிராதக் காலத்தில் அருச்சித்தவர்கள், போக மோட்சங்களைப் பெறுவார்கள்.

இராசத தாமத பத்திரங்களாகிய வில்வம் முதலியவைகளால் அருச்சித்தவர்கள் போக மோட்சங்களைப் பெறுவார்கள்.

வாசநலஞ் செய்திமையோர் நாடோறும் மலர்தூவ
ஈசனெம் பெருமானு ரினிதாக வுறையுமிடம்
யோசனைபோய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு
மொழியாமே
பூசனைசெய் தினிதிருந்தான் புள்ளிருக்கு வேளூரே.

—திருஞானசம்பந்தர்.

விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்டர் நாயகன் றன்னடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூ ரீசனே.

—திருநாவுக்கரசர்.

வஸ்திரம் :

வெண்மை நிறமுடைய பட்டு வஸ்திரத்தை அன்புடன் சிவபெருமானுக்குச் சாத்தியவர்கள் சிவலோகத்திலிருப்பார்கள். இது திரோதான சத்தி நீக்கமென்னும் பாவனையாம்.

தூப தீபம் :

கிரியா சத்தி ரூபமாகிய தூபத்தால் ஆராதனை செய்தவர்கள், ஆணவ மல சத்தியாகிய அறியாமையினின்று நீங்குவார்கள். சிற்சித்தியின் வாசமாய் ஞான விளக்கமாயிருப்பது தீபம். இதனுல் ஆராதனை செய்பவர்களுக்குச் சிவபெருமான் அபமிருத்து நிவாரணத்தையும், பாப நீக்கத்தையும், ஞானத்தையும் கொடுத்து அருளுவார்.

நைவேத்தியம் :

யானையானது விளாம் பழத்தினுடைய சாரத்தை எப்படிப் பட்சிக்கின்றதோ, அப்படியே கடவுள், மந்திரத்துடன் நிவேதிக்கப்பட்ட பொருள்களை ஏற்றருளுகின்றுர். மன அமைதி பிறத்தற்காகத் தற்போதத்தை நைவேத்தியமாக ஒப்பித்தலே இதன் பாவனையாகும்.

பாட்டிற் கின்புறு குருபரன் பாதமேற் கண்ணீர்
ஆட்டிச் சொன்மல ரணிந்துதற் போத வின்ன
முதை
ஊட்டித் தற்பர ஞானமா மோமவெங் கனலே
மூட்டிச் சம்புவின் பூசைமேன் முயற்சிய ராஞர்.

—திருவிளையாடற் புராணம்.

சிவயாக மண்டப சொரூபம் :

யாக மண்டபமானது அத்துவாக்களின் வடிவமாயுள்ளது. மண்டபம் அமைக்கப்பட்ட இடம் இரு நூற்றிருபத்துநான்கு புவனுத்துவா வடிவாயுள்ளது. மண்டபத்திலே அமைக்கப்பட்ட பதங்கள் எண்பத்தொரு பதாத்துவா வடிவாக உள்ளன. மண்டபத்தின் நடுப்பாகம் ஐம்பத்தொரு வர்ணுத்துவா வடிவாயுள்ளது, கும்பங்கள் பதினெரு மந்திராத்துவா வடிவமாக உள்ளன. ஓமத்திர வியங்கள் முப்பத்தாறு தத்துவாத்துவா வடிவமாயுள்ளன. யாக சாலையானது சாந்தியதீதகலா சொருபமாகும். நான்கு துவாரங்களும் சாந்தி கலை முதலிய நான்கு கலை வடிவமாகும் என்று சைவ பூஷணம் பகரும்.

ஆசனம் :

யாக கும்பத்திலே ஆவாகிக்கப்படும் மூர்த்திக்கு உபவேதிகை அநந்தாசனமும், மகா வேதிகை சிம்மாசனமும், நெல் யோகாசனமும், அரிசி பதுமாசனமும், எள் விமலாசனமும், நல்ல மலர் பிரணவாசனமுமாகும். பிருதுவி முதல் குடிலை ஈருகிய முப்பத்தாறு தத்துவங்களும் பஞ்சாசனமாக அமைந்துள்ளன.

நெல் தாமரை நாளத்தின் முட்களாகவும், அரிசி தாமரைப் பூ இதழ்களாகவும், பயறு தாமரைப் பொகுட்டாகவும், உழுந்து பீசமாகவும், எள் கேசரங்களாகவும் பாவனை செய்யப்படுகின்றன.

யாக தேவர்கள் :

பிரம விட்டுணுக்கள், இந்திராதி தேவர்கள் யாவரும் அசுத்த மாயா புவனங்களிலிருப்பவர்களும், சுத்த வித்தியா தத்துவ வாசிகளுமென இரு திறப்படுவர்.

சுத்த வித்தியா தத்துவத்தில், நந்தி முதலிய கண நாதர்கள் எண்மர்களும், பிரம விட்டுணுக்களும், இந்திராதிலோகபாலகர்களும் இருப்பார்கள். சுத்த வித்தை முதலிய தத்துவங்களிலிருப்பவர்களுடைய சரீரம் வைந்தவமாகையாலும், மலபரிபாக முற்றுப் பரமசிவனருளாற் பதம் பெற்றவர் ஆதலானும், பிறப்பிறப்புக்கள் நீங்கி ஆண்டு நின்றபடியே சிவ தரிசனத்தால் ஆனந்த விளக்கத்தை அடைபவர் ஆகலானும், இவர்களே சிவ பூசையாகாதி கிரியைகளில் பூசிக்கப்படும் பெருமை பெற்றவர்கள் ஆவார்கள் என்பது சிவாகம நூற்றுணிபாகும். அசுத்த மாயா தத்துவ வாசிகளாகிய பிரம விட்டுணு இந்திரன் முதலிய தேவர்களது சரீரம் பிரகிருதி சம்பந்தமாகலானும், முன் பரமசிவன் அனுக்கிரகமில்லாமையாலும், அவர்களுடைய தானம் பசுத் தானமாகையாலும், அசுத்த தத்துவம் முப்பத்தொன்றையும் மனசாற் கடந்து சுத்த வித்தியா தத்துவ மயமான யாகசாலையை அடைந்து பூசித்து வணங்குவதினாலும், அசுத்த புவனவாசிகளான பிரம விட்டுணு முதலியோர் சுத்த வித்தியா தத்துவ மயமான யாகசாலையில் பூசிக்கப்படத் தக்கவர்களல்லர்.

ஆகுதி:

யாக சாலையிலுள்ள சிவாக்கினியில் ஆகுதி செய்தல் ஆன்மாக்கள் செய்த கன்மங்களை அனுபவத்துக்கு வரவொட்டாது சுத்தமாக்கும் பாவனையாகும்.

கர்ப்பூர ஆராதனை :

கற்பூரம் வெண்மை நிறமுடையதாய், அக்கினி பற்றியவிடத்தே அதன் வடிவமாக விளங்கி, ஒரு பற்றுமில்லாமல் முற்றுங்கரையப் பெற்று, ஆகாயத்துடன் கலந்து அத்துவிதமாய் விளங்கல்போல, ஆன்மா வெண்மை நிறமான சாத்துவிக குணத்தைப் பொருந்தி ஞானக்கினி பற்றியவிடத்தே பசுத்தன்மை நீங்கி, சிவத்தன்மை விளங்கப்பெற்று தூல சூக்கும சரீரங்கள் நீங்கப்பெற்று, எல்லாப் பற்றுங்கழன்று சிவத்தோடு கலந்து அத்துவிதமாய்ப் பேரானந்தப் பெரு வாழ்வடைதல் வேண்டும் என்னும் பாவனையாகவே கற்பூராராதனை செய்யப்படுகின்றது.

''அக்கினி கர்ப்பூரத்தை அறவிழுங்கிக் கொண்டாற் போல
மக்கினம்பட்டுள்ளே மருவியிருந்தானடி''

—பட்டினத்து அடிகள்

''தீதணையாக் கற்பூர தீபமென நான்கண்ட
சோதியுட னென்றித் துரிசறுப்ப தெந்நாளோ''

—தாயுமான சுவாமிகள்

நமஸ்காரம் :

பிரம விட்டுணுக்களது தொழிலையும், அவர்களை அதிட்டிக்கும் ஞானக்கிரியைகளையும், தற்போதமென்னும் அதிகாரத்தையும் நீங்கி, நதியானது சமுத்திரத்தோடு கலந்து ஒன்றாய் இருத்தல் போல, ஆன்மா சிவத்தோடு சேர்ந்து, அத்துவித முற்றிருப்பதே நமஸ்காரத்தின் உண்மையாகும்.

''ஞானத்தாற் றொழுவார் சிவ ஞானிகள்
ஞானத்தாற் றொழுவே னுனை நானலேன்
ஞானத்தாற் றொழுவார்கள் தொழக் கண்டு
ஞானத்தா யுனை நானுந் தொழுவனே''

என்பதனாலும்,

''பெருகலாந் தவம் பேதைமை தீரலாந்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாய தோரா னந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே''

என்பதனாலும் அறிக.

பக்தி இலக்கியத்தில் அணிகள்

திரு. செ. வைத்தியலிங்கன், M.A., M.Litt.,

அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

(முற்றெடர்ச்சி)

''பலபல பைம்பொன் பதக்க மாரமும்
அடிமை சொலுஞ் சொல் தமிழ்ப் பனீரொடு
பரிமள மிஞ்சக் கடம்பமாலையு மணிவோனே''

என்பது திருப்புகழ். வெற்றி குறித்தும் வளம் குறித்தும் அணிகின்ற திருஞெமர் ஆரத்தை 'மதாணி' எனக் கொண்டனர். சந்திரன் போல வட்ட வடிவமான—முத்துக்கள்பதித்துச் செய்யப்பட்ட திருமாலின் மார்பணியாகிய மதாணியைப் பரிபாடலில்,

''ஓங்குயர் வானின் வாங்குவில் புரையும்
பூண்அணி கவைஇய வாரணி நித்திலம்
நித்தில மதாணி அத்தகு மதிமறுச்
செய்யோள் சேர்ந்தநின் மாசில் அகலம்''

எனக் குறிப்பிடுகிருர் கீரந்தையார். பிரபு லிங்க லீலையில் சிவப்பிரகாசர் விளவல தேயத் தின் சிறப்பினைச் சுட்டும்போது,

''வளங்கொள் மணமகள் மார்பின் மதாணிபோல்
விளங்கு மென்ப விளவல தேயமே''

எனக் குறிப்பிடுகிருர். வெற்றிக் களிப்பாலும் வளத்தாலும் செருக்கு (மதம்) கொண்டு மார் பிலே அழகாக அணிவதால் மதாணி எனப் பெயர் வந்திருக்கலாம்.

குழந்தைகளைத் தீய சக்திகளாகிய தேவ தைகளினின்றும், நோயினின்றும் காத்தற் பொருட்டுக் காத்தற் கடவுளாகிய திருமாலின் படைகளை நாடும் நுட்பம், 'ஐம்படைத்தாலி' குறிக்கும். சங்கு, திகிரி, தண்டு, வாள், வில் எனும் ஐம்படைகளின் வடிவமாகத் தாலியில் பொறித்துக் குழந்தைகளின் மார்பில் அணிந் தனர்.

''நம்பியா ரூர ரென்றே நாமமுஞ் சாற்றிமிக்க
ஐம்படைச் சதங்கை யணிமணிச் சுட்டி சாத்திச்
செம்பொனு ணரையின் மின்னத் தெருவில்தேர்
உருட்டும் நாளில்'

என்பது பெரிய புராணம்.

'தாலிஐம் படை தழுவும் மார்பிடை' என்பர் கம்பர். ஐம்படையேயன்றிப் பண்டைத் தமிழ் மக்கள் தம் குழந்தைகளுக்குப் பாது காப்பு அணியாகச் சிவச் சின்னமமைந்த ஓர் அணிகலன் அணிந்தனர் என்று நாவலர் திரு ந. மு. வேங்கடசாமி நாட்டார் குறிப்பிடுகின் ருர். மருதக்கலியில்,

''பூண்டவை எறியா வாளும் எற்று மழுவும்
செறியக் கட்டி யீரிடைத் தாழ்ந்த
பெய்புல மூதாய்ப் புகர்நிறத் துகிரின்
மையற விளங்கிய ஆனேற் றவிர்பூண்''

எனக் குறிப்பிடப்படும் பகுதியைக் காட்டி, 'இடையே ஆனேற்றின் உருவமும் அதன் இரண்டு புறத்தும் வாள் மழு என்பவற்றின், உருவமும் அமைக்கப்பெற்ற அணிகலன் இதில் கூறப்பட்டுள்ளது' என்று எழுதுகின்றனர். வாள் என்பதனை முத்தலை வேல் (சூலம்) என அவர் பொருள் கொள்ளுதலும் காண்க.

மகளிர் அணியும் அணிகளில் மிகவும் சிறப்புடைய தாலியுடனமைந்த கயிறு, மங்கல நாண் எனப்பட்டது. மாண்கலம், மன்கலம் என்பவற்றின் மருஉச் சொல்லாக 'மங்கலம்' கருதப்படுகிறது. மங்கல நாண்தான் அணி கலன்களுக்கு அரசு எனலாம்.

''வாங்கு ருவெழின் மங்கல நாணெளி
தேங்கு பூணர சென்னச் சிறந்திட''

எனக் கூறுவார் சிவப்பிரகாசர்.

ஆய்ச்சியர் அச்சுத்தாலி (காசு), ஆமைத் தாலி (பிறப்பு) முதலியவை அணிந்து தயிர் கடைதலை,

''காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்துப்
பாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினுல்
ஓசை படுத்த தயிரரவம் கேட்டிலையோ?''

என்று ஆண்டாள் குறிப்பிடுகிருர்.

உலக அன்னை அங்கயற்கண்ணி வேடர் மகளாய்த் திருவுருவங் கொண்டதைப் பரஞ் சோதி முனிவர் குறிப்பிடுகையில்,

''அழிதகன் குறுகுவான் முன்னங்கயற்
கண்ணி தந்தக்
குழையிரு காதுங்கோத்து கொலைகெழு
புலிப்பற் ருலி
நுழைமயிர் நெடுநாண் பின்னனேன்பிட
ரலைப்பப் பூண்டோர்
பழிதகை யாதவேடப் பாவையாய்ப்
படிவங் கொள்ள''

என்று இயம்புகிருர்.

சிவன் பொன்னுலான பூணூல் அணிந்திருந் தமையை ''கிளர் பொன்னின் வாய்மை பெறு நூல் வலந்திகழ'' எனக் குறிப்பிடுகிருர் நம்பி யாண்டார் நம்பிகள்.

''அணிவயிரக் கண்டிகை பொன்னுண்-பணிபெரிய
ஆரம் அவைபூண் டணிதிக மூஞ் சன்ன
வீரம் திருமார்பில் வில்லிலக''

என வருவதாகக் காண்கிருர் சேரமான் பெரு மாள் நாயனுர்.

கழுத்தில் உருத்திராக்க மணிமாலையைச் சிவன் தன் கண்ணீர்த் துளி நினைவாகச் சிவனடி யார் தரித்தலுண்டு. அஃது அணிவதால் தீய சக்திகள் விரட்டப்படுவதாகக் கூறுகின்றனர்.

மார்பில் கவசம் அணிகின்ற சிறப்பும் உண்டு. கவசமும் குண்டலமுமணிந்த சூரிய னுக்குப்பிறந்த கர்ணனும் கவசகுண்டலத்துடன் பிறந்து வளர்ந்து வாழ்ந்த கதை பாரதத்தில் குறிப்பிடப்படுதல் காண்க.

தோளணிகளும்; கையணிகளும்

ஆடவர் தோளணிகளை வெற்றி குறித் திடும் அடையாளமாக அணிந்தனர்; பிறகு, அழகு நிமித்தமும் அணியத் தொடங்கினர். மகளிர் தம் வனப்பினை மிகுவித்தற்காகவே தோளணிகளை அணிந்து மகிழ்ந்தனர். தோள் அணி வலயம், புய வலயம், வாகுவலயம், தோள் வளை, கேயூரம் முதலியவை தோளணி களாம். இவையல்லாமல் மாலைகளையும் தோள் அணியாக அணிந்திருக்கின்றனர்.

''தொடியும் உந்தியும் தோளணி வலயமும்''
(பரிபாடல்)

''முழு வயிரப் புய வலயமும்''
(முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்)

''மேகலை காஞ்சி வாகு வலயமும்
எல்லாம் கவரும் இயல்பிற்ருய்'' (பரிபாடல்)

''தோள்வளை ஆழி சுற்றுவார்'' (பரிபாடல்)

''எண்டோட்கும் கேயூரம் பெய்து'''(திருக்கைலாய ஞானவுலா)

''மாமாலை முத்து வடமாலை பொன்மாலை
பூமாலை மாலைப் புயத்தணிந்து'' (கடம்பர் கோயில் உலா)

பக்தி இலக்கியங்களில் வளைகளைப் பற்றிக் கூறுமிடமெல்லாம் சிந்தனைக்குரியவை. மங்கல அணியாக வளையல் கருதப்பட்டது. இறைவனே வளையல் வணிகனுக வந்து வளையல் விற்றதைத் திருவிளையாடல் புராணம் நயம்படஉணர்த்தும். திருமணக் காலத்தும் கருவுற்றபோதும் மங்கல வளை அணிவது தமிழர் தம் வழக்கம். நாயக நாயகி பாவமாகப் பரமான்மாவைக் கூடுதல் குறித்துச் சீவான்மா வளை சோர நிற்பதனை அடியார்கள் பலரும் நைந்துருகி இயம்புகின் றனர்.

திருஞானசம்பந்தர் தம் தேவார முதற் பதிகத்திலே ''இறை கலந்த இனவெள்வளை சோரவென்னுள்ளங் கவர்கள்வன்'' எனக் கூறு கிருர். ''வீதியில் சங்கம் (சங்குவளை) தோற் ருள்'' என்கிறது திருக்குற்ருலக் குறவஞ்சி.

''எண்டிசையு மெழுசுடரும் இருநிலனும் பெரு
விசும்பும்
உண்டுமிழ்ந்த பெருமானுக் கிழந்தேன்என்
ஒளிவளையே''

என்று பக்திப் பரவசத்தோடு பாடுகிருர் திரு மங்கையாழ்வார். கையணியாகிய வளை, முத லில் சங்கினுல் ஆனமை பற்றி வளை (சங்கு) எனப்பட்டது. பிறகு, மணிகளாலும், பொன் னுலும் ஆன அவ்வகையணியும் வளையெனப் பட்டது. சூடகம், தொடி, கடகம், கங்கணம், வண்டு, கிறி (கையிலணியும் பவளவளை), முகாரி (முன் கைவளை) முதலியவையும் கையணி களாகும்.

''சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணியோம்''

என்பது திருப்பாவை. சூடகமென்பதைச் சங்கு வளை எனக் கொண்டு ''சூடகக்கை''யுடன் அபி ராமியம்மையைக் காண்கிருர் அபிராமிபட்டர். திருக்குற்ருலக் குறவஞ்சியில்,

''கையாரச் சூடகம் இட்டு மின்னுரை வெல்லக்
கண்ணிலொரு நாடகமிட்டு
ஒய்யார மாக நடந்து வசந்தவல்லி
ஒவியம் போலவே வந்தாள்''

என்றும், ''சூடக முன்கையில் வால்வளை கண் டிரு தோள்வளை நின்ருட'' என்றும் ''கல்லுப் பதித்த தங்கச் செல்லக் கடகம் இட்ட செங் கையாள்'' என்றும் வருதலைக் காண்க. இந் நூலில், வளையைக் குறிப்பிடும் 'வண்டு' என்ப தும், பச்சை வளையைக் குறிப்பிடும் 'பைந் தொடி' என்பதும் குறிப்பிடப்படுகின்றன. 'பவள வளை'யைக் குறிப்பிடுகிறது பரிபாடல். முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழில் 'முன் கை முதாரியும் ஒளிகால' என வருதல் காண்க.

'கிண்கிணி கட்டிக் கிறி எட்டிக் கையினில் கங்கணமிட்டு' என்பது பெரியாழ்வார் வாக்கு. எப்பேர்ப்பட்ட விலைமதிப்பரிய அணிகளை

அணிந்திருப்பினும் வளையலணியா விட்டால் மகளிர்க்கு வனப்பில்லை என்ற குறிப்பிலே பரஞ்சோதி முனிவர்,

''இரங்குமே கலைசிலம் பன்றி யேனைய
விரும்பிய குழைதொழ மின்செய் கண்டிகை
மருங்குறச் சுமப்பினும் வளைகைக் கில்லெனின்
அரும்பிய முலையினர்க் கழகுண் டாகுமோ''

என்று கூறுகிறார்.

விரலணிகள்

ஆழி, விரற்செறி, மோதிரம் முதலிய பெயர்களில் கைவிரல்களில் அணியும் அணிகளை நினைவு அடையாளங்களாகவும் மக்கள் அணிந்தனர். இராமாயணத்தில் இராமன் கணையாழியைக் கண்ட சீதை 'வீங்கினள், மெலிந்தனள், குளிர்ந்தனள், வெதுப்போடேங்கினள்' எனக் குறிப்பிடப்படுதலால், ஆழி எத்தகைய நினைவடையாளமென்பது புரியலாம்.

'மணியாரம் பூண்டாழி மெல்விரலிற் சேர்த்தி' என்பது திருக்கைலாய ஞான உலா. 'குருப்பொறி விரற்செறி செறித்து' என்பது அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ்.

இடையணிகள்

சிவன் தன் வயிற்றின் மீது 'உதரபந்தம்' அணிந்திருந்தமையைக் குறிப்பிடுகிறது திருக்கைலாய ஞான உலா. பிரபு லிங்க லீலையில் மாயையின் இடுப்பிலே 'பொன்னரை ஞாண்' நடு விற்பூட்டிக் காட்டுகிறார் சிவப்பிரகாசர். 'அங்கைச் சரிவளையும் நாணும் அரைத் தொடரும்' என்பர் பெரியாழ்வார். அரைத் தொடர் என்பது இடுப்புச் சங்கிலியைக் குறிக்கும். குழந்தைகள் இடுப்பிலே ஒளியிடும் கிண்கிணி அணிதலுண்டு. 'திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளைத் திருவரையிற் கிண்கிணி யோசை பதினுலுலகமுங் கேட்டதுவே' என்பது கந்தர் அலங்காரம்.

மகளிர் தம் இடையில் அல்குலை மறைத்த நிலையிலும், ஆடையைத் தாங்கும் நிலையிலும் மணி வடம் பூட்டிய இடையணிகளை அணிந்து மகிழ்ந்தனர். திவாகரர் கருத்துப்படி மேகலைக்கு ஏழும், காஞ்சிக்கு எட்டும், கலாபத்திற்குப் பதினாறும், பருமத்திற்குப் பதினெட்டும், விரிசிகைக்கு முப்பத்திரண்டுமான கோவை மணிகள் உண்டென அறியலாம். ஆனால், திருவிளையாடற் புராணத்தில் பருமத்தினை 'ஈரேழ் பருமம்' எனக் குறிப்பிடுகிறது; அஃதாவது பதினான்கு கோவை மணிகள் பொருந்திய இடையணியாகத் தெரிகிறது.

'பல்காசு நிரைத்த சில்காழ் அல்குல்' என்ற திருமுருகாற்றுப்படைப் பகுதிக்கு, 'பல மணிகள் கோத்த ஏழு வடமாகிய மேகலையை அணிந்த அல்குலையும்' என உரையெழுதிய நச்சினார்க்கினியர், 'பருமம் தாங்கிய பணிந்தேந்தல்குல்' என்பதற்கு 'பதினெண் கோவையாகிய மேகலையணிந்து தாழவேண்டியவிடம் தாழ்ந்து உயர வேண்டிய இடம் உயர்ந்த அல்குல்' எனப்பொருள் கொள்கிறார். இதனால், மேகலையணியைக் குறிப்பது காணலாம்; கோவை எண்ணிக்கையிலும் மாறுபாடு தெரிகிறது. சிலர் கருத்துப்படி, மேகலைக்கு எட்டும், காஞ்சிக்கு இரண்டும், கலாபத்திற்கு இருபத்தொன்றும், பருமத்திற்குப் பதினைன்கும், விரிசிகைக்கு முப்பத்திரண்டுமாகக் கோவைகள் உண்டெனத் தெரியலாம்.

''கொழிக்குங் காஞ்சி அல்குலுமே'' என்பது அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ்; அது ''மணிதுற்ற தவிசெனப் பருமணிப் பருமம்'' எனவும் குறிப்பிடுகிறது. ''பருமணிக் கலாபத்தார் பல்லாண்டிசை பரவப்போனாள்'' எனக் கூறுகிறது இராமாயணம். நம்பியாண்டார் நம்பி ஆளுடைய பிள்ளையார் திருத்தொகையில் ''சித்திரப் பொற்காஞ்சி செறிந்த பேரல்குலுக்கும்'' எனக் குறிப்பிடுகின்றார். ஒளிபரப்பும் மேகலை ஒலியிடவும் செய்யுமென்ற குறிப்பைப் பல இலக்கியங்களில் காணலாம்.

''துன்னு மணிமேகலை மிழற்றத் தூய வணிகக் குலமகளிரின்'' என்று உரைக்கிறது திருவிளையாடற் புராணம்.

வில்லிபுத்தூரார் பாரதத்திலே இந்திரப் பிரத்த நகரினை அழகிய பெண்ணாகவும், சங்கு சொரிமுத்துக்கள் நிறைந்த அகழியினை மேகலையாகவும் கற்பனை நயம்பட உருவகித்து மகிழ்கின்றார்.

''புரிவளை தரளஞ்சொரி புனலகழிப் புரிசை சூழ்
புரங்குடி புகுந்தார்'' என்பதாலும்,

''கதிர்மணி யகழி மாமே கலையுடை நகர மாதின்''

என்பதாலும் அழகிற் சிறந்த வளநகருக்கு அகழி தேவைப்படுவதுபோல, அழகு நங்கைக்கு மானப்பாதுகாப்பணியாக மேகலை தேவைப்படுதலை யுணரலாம்.

மக்கள் துடைகளிலும் அணிகள் அணிந்திருந்தனர்; அவை குறங்கணிகள் எனப்பட்டன. கோயிலில் காணப்படும் சிலைகளில் குறங்கணிகள் எவ்வடிவின என்பதை இன்றும் காணலாம்.

காலணிகள்

குழந்தை முதல் பெரியோர் வரையில் காலணிகள் கொண்டிருந்தனர். தண்டை, சதங்கை முதலிய அணிகள் குழந்தைகளுக்காகவும், சிலம்பு, சரி முதலிய அணிகள் மகளிருக்காகவும், கழல் எனும் அணி ஆடவருக்காகவுமே சிறப்பாக அமைந்தவை.

''வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவுஞ் சிலம்பே''

என்பது குறுந்தொகை. என்றாலும், தெய்வங்களுக்கு அணியும்போது சில அணி விதிகள் தளர்த்தப்பட்டன.

போர்க்களத்தில் மாண்டு கிடக்கும் மேகநாதனைப் பார்த்து மண்டோதரி புலம்புகையில் அவன்தன் குழந்தைப் பருவம் நினைவிற்கு வருகிறது. 'தாளரிச் சதங்கை ஆர்ப்பத்தவழ்கின்ற பருவந் தன்னில்' எனக் கூறி விம்மியழுகிறாள்.

'அழகுடைக் கிண்கிணி அடிமிசை அரற்ற'

என்பது திருவாரூர் மும்மணிக்கோவை. 'கிண்கிணி சேர்ந்த திருவடியாள்' என்று கூறும் திருக்கைலாய ஞான உலா.

''தண்டையணி வெண்டையங் கிண்கிணி
சதங்கையுந்
தண்கழல் சிலம்புடன் கொஞ்சவே''

எனப் பாடுகிறது திருப்புகழ்.

''அணிமணித் தண்டை யார்க்கும்
செழுமல ரடியுங் கண்டான்
அவன்தவஞ் செப்பற் பாற்றே''

என்று கூறுகிறது கந்தபுராணம்.

வீரத்திற்கும் வெற்றிக்கும் அடையாளமாக அணியும் வீரக் கழல் பூவேலைப்பாட்டுடன் அணி நலம் பெறச் செய்யப் பெற்றது. கழலிலும் சிலம்பிலும் ஓசை நிமித்தம் முத்து, மாணிக்கம் போன்றவற்றை அரியென உள்ளீடாக அமைத்து அவற்றை அணிந்தனர்.

''கழல் ஒலி ஓசைச் சிலம்பொலிப்பக்
காலுயர் வட்டணை இட்டு நட்டம்''

புரியும் இறைவனைக் காட்டுகிறது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம். காலில் நெகிழ்ந்தவாறு அணியப் பெறும் சிலம்பு 'நெகிழம்' எனவும் சொல்லப்பட்டது.

'சுடுபொன் ஞெகிழத்து முத்தரி சென்றார்ப்ப' என்று நடன நங்கை ஆடியகுறிப்பினைப் பரிபாடல் கூறும். சிலம்பினைப் பரிபுரம், நூபுரம், குடைச்சூல் போன்ற பெயர்களாலும் அழைத்தனர்.

'பரிபுரம் ஆர்க்கில பவளச்சீறடி' எனத் தெரிவையரைக் குறித்துக் கூறுகிறார் கம்பர். இறைவன் கழலினையும் சிலம்பினையும் சேர்த்து அணிந்த குறிப்புக்களாகப் பக்தி இலக்கியங்களில் பலவுள.

''முன்றாேத் திடுகழல் நூபுரம் வெள்ளை செம்பட்டு
மின்ன
லொன்றாேத் திடவுடை யாளொடொன் றாம்புலி
யூரனென்றே'

என்று திருக்கோவையாரும்,

''பட்டிகையுஞ் சேர்த்தருண பாதார விந்தமிசைக்
கட்டிசையுஞ் செம்பொற் கழல் புனைந்து-சிட்டர்
செவியி னமுதாச் சிலம்புஞ் சிலம்பும்
கவினத் தரித்து''

என்று கடம்பர் கோயில் உலாவும் குறிப்பிடுதல் காண்க.

கையிலணியும் கடகம் போலவே காலில் அணிகின்ற பாத கடகத்தைப் 'பாடகம்' என்று அழைத்தனர் தமிழர்.

'பாடக முஞ்சிறு பரதமும் அங்கொரு பாவனை கொண்டாட...' என்று இயம்புகின்றது திருக்குற்றாலக் குறவஞ்சி.

திருமாலின் திருவடிகளிலுள்ள பத்து விரல்களிலும் மணி பதித்த காலாழிகள் ஒளிவிடுகின்றன. அவற்றைக் காணப் பெரியாழ்வார் அழைப்பதைக் காண்க.

''முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல்எங்கும்
பத்து விரலும் மணிவண்ணன் .பாதங்கள்
ஒத்திட் டிருந்தவா காணீரே ஒண்ணுத லீர்வந்து
காணீரே',

அணியணிதலின் நுட்பம்

எல்லாம் வல்ல அழகுத் தெய்வங்களுக்கும் ஆபரணங்கள் தேவையா எனக் கேட்கலாம். அழகே தெய்வமெனினும், அழகுக்கும் அழகு செய்வது சில வேளைகளில் தேவைப்படுகிறது. மக்கள் பக்தியின் ஈடுபாட்டாலே,தெய்வத்தைக் கண்கொள்ளாக் காட்சியுடன் காண விரும்பிய எண்ணமே தெய்வத்திற்கு அணி பூட்டி மகிழ்ந்ததன் நுட்பமாகும். 'அழகு இவளைத் தவம் செய்து பெற்றது காண்' என்று சதானந்தரால் வியந்து பாராட்டப்படும் சீதையும் பல அணிகளை அணிந்திருந்தாள் : அத்தகைய அவளைக் காண இராமனுக்கே ஆயிரங்கண்கள் வேண்டுமென்று சொன்னால், நமக்கெல்லாம் காணக் கண்கோடி வேண்டும். அணிகளைச் சீதை யணிந்திருந்ததால்தான் இராவணன் தன்னைக் கடத்திச் செல்கையில் கழற்றிப் போடவும், அவற்றை எடுத்துச் சுக்ரீவன் காட்டவும், இராமன் பிரிவாற்றாமை சிறிது தணியவும் வாய்ப்பேற்பட்டது. இராமாயணத்தில் கம்பர் காட்டும் 'கலன்காண் படலம்' திளைத்து மகிழ வேண்டிய இன்பச் சுனையாகும்.

மகளிரைப் பொறுத்த வரையில் கணவனிருக்கும் போதுதான் அணிகள் தேவைப்பட்டன. கணவனைப் பிரிந்த நிலையில் அணிகளைக் கழற்றிப் 'புனையா ஓவியம்' போல நிற்றலும், இழந்த நிலையில் அணிகளையே துறந்துவிடுதலும் மகளிர் வழக்கம்.

கணவன் பரம தத்தனுக்காகத் தாங்கிய உடல் வனப்பினை, அவன் விரும்ப வாய்ப்பில்லையென அறிந்ததும் காரைக்காலம்மையார்

துறந்துவிடுகிருர் ; தசைத் தொகுதி கழித்துப் பேய் வடிவம் வேண்டிப்பெறுகிருர். என்ருலும், தாம் அணி நலம் கொண்டு வாழ விரும்பா விட்டாலும் அனைத்துலக நாயகன் அணி நலத் துடன் திகழ அவாவுகிருர். மூத்த திருப்பதிகத் தில் 'பொன் கண்டாற் பூணுதே கோள்நாகம் பூண்டானே, என்கண்டாய் நெஞ்சே இனி' என்று அங்கலாய்த்துவிட்டு அற்புதத் திருவந் தாதியில்,

''அரவமொன் ருகத்து நீநயந்து பூணேல்

பரவித் தொழுதிரந்தோம் பன்னாள்-முரண்அழிய

ஒன்ருதார் மூஎயிலும் ஓரம்பால் எய்தானே

பொன்ஞரம் மற்ருென்று பூண்''

என வேண்டி நிற்கிருர்.

அணிகள் காட்டும் மெய்ப்பொருளுண்மை

தெய்வங்கள் பூண்டுள்ள அணிகளுக்கெல் லாம் காரணங்களுண்டு ; தத்துவங் காண முற் பட்டுப் பன்னியுரைத்தால் பாரதமாம். சுருங்கிய அளவில் சில கருத்துக்களைக் காண்போம்.

நாகத்தை யணிந்தவன் சிவன் ; நாகம் எதனைக் குறிக்கிறது? ''சர்ப்பம் என்பது பிராண வாயு; சர்ப்பம் போல் சீறி ஓடுகின்ற வாயுவை அதன் போக்கின்படி விடாமல் அடக்குதலைக் குறிக்கின்றது அராப் புனைந்த வரலாறு'' என் பர் திருமுருக. கிருபானந்த வாரியார். நாகத் தைக் கட்செவி (கண் செவி) எனக் கூறுவர். ஒளி (விந்து) காணத் துணை நிற்பது கண் ; ஒலி (நாதம்) காணக் கருவியாவது செவி. இவ் விரண்டினையும் இணைத்தமைத்து விந்து நாத தத்துவத்தின்அடையாளமாகவும்கட்செவியைக் கருதலாம். இந்தக் கருத்திற்கு வழி கோலும் வகையில் பதஞ்சலியாகிய பாம்பினைக் 'கட் செவி' எனக் குறிப்பிடுகிருர் குமரகுருபரர். ஒளியின் துணை கொண்டு ஒலி நாட்டம் கொள்ள வேண்டுமென்ற கருத்திலே அருளாளர்கள் பல குறிப்புக்களைத் தந்துள்ளார்கள்.

''மங்கையர் வதனசீத மதியிரு மருங்குமோடிச்

செங்கயல் குழைகள் நாடும் திருமுனைப் பாடிநாடு''

எனச் சுந்தரர் அவதரித்த நாட்டின் சிறப்பினைச் சுட்டும் சேக்கிழார் வாக்கின் நுட்பம் ஓர்க. மங்கையர்களின் முகமாகிய குளிர் நிலாவின் இருபுறத்தும் செங்கயல் போன்ற விழிகள் காதளாவிய குழைகளை நாடுகின்ற சிறப்பினை யுடைய நாடு எனக் கூறுவாராய்—விந்து நாதத் தத்துவத்தினையே உட்கிடையாய் அமைத்துவிடு கிருர். இதே கருத்து அமுதாம்பிகை பிள்ளைத் தமிழில்,

''திங்களொளி காட்டுமுக மீதுலவு நாட்டச்
செழுங்கயல் உதைந்தூக்கலாற்

செம்பொனின் இழைத்தமக ரக்குழைக ளுஞ்செவிச்

செங்கனக ஊசலாட''

என்று கூறுகிருர்; அஃதாவது அழகிய கண்கள் அசைக்கக் குழைகள் செவியாகிய ஊசலில் ஆட வைக்கிருர் சிவஞான முனிவர்.

'சூடகமே தோள்வளையே . . .' எனத் தொடங்கும் ஆண்டாள் வாக்கிற்கு விளக்கம் காணும் அறிஞர்கள் கூறுவதைக் காண்போம். ''சூடகம் என்பது கைகளுக்கு ஆபரணமான கைங்கர்யம். தோள்வளை என்பது ஸதாசார் யனுடைய க்ருபையால் வரும் ஞானத்தின் மேன்மை. அல்லது, சூடகம், தோள்வளை இரண்டும் கை ஆபரணங்களானபடியால், சிறந்த ஞானமளிக்கக் கூடிய திருமந்திரத்தை ஆவர்த்திப்பாம். தோடு செவிப்பூ என்ற கர்ண போக்யமானத்வயம். பாடகம் என்பது சரம சுலோகம். மூலமந்த்ரத்வய மந்த்ரங்களின் உபாயம், பலன் இவைகள் இரண்டும் தெரிகிற படியால், அவைகளை இரண்டு சப்தங்களால் வேண்டினர். சரம ச்லோகத்தில், உபாயம், மாத்திரம் காண்கிறபடியால் அதை ஒரே ஆபரணமாகக் குறித்தனர்'' என விளக்கம் தருகிறது சித்திரத் திருப்பாவை.

அருளாளர்கள், சிவன் காலிலும் அம்பிகை காலிலும் அணியப் பெற்ற சிலம்புகளையும் கிண் கிணிகளையும் மறைகளாகவே காணுகின்றனர்.

'வேத கிண்கிணி சிலம்பு சூழ்ந் தடிகளின் மிழற்ற' என்பர் பரஞ்சோதி முனிவர்.

''அழகுக்கொருவரு மொவ்வாத வல்லி அருமறைகள்

பழகிச் சிவந்த பதாம் புயத் தாள் பனிமாமதியின்

குழவித்திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க''

என்பர் அபிராமி பட்டர்.

இறைவன் சூடிய பிறைமதி இறைவன்தன் அளவிலா ஞானத்தை அறிவிப்பது என்று காமி காகமம் கூறுகிறது. பட்டினத்தடிகளுடைய கற்பனைத் திறன்,

''தூமதி சடைமிசைச் சூடுதல் தூ நெறி

யாமதி யான்என அமைத்தவாறே''

என்று சொல்கிறது என்பதை,'ஆடல் வல்லான்' எனும் நூலில் காண்க. ஆக, இப்படியாகப் பல உண்மைகளை ஆராய்வதே நம் ஆன்மா பூணும் அழியா அணிகலனாகும். வாழிய ஆன்மீக நெறி!

600 008

சைவசித்தாந்த சாத்திரங்கள்

[திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ.,எல்.டி.]

திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

(முற்றொடர்ச்சி...)

திருக்களிற்றுப்படியார் :

இது திருவுந்தியாரின் பொருளை விரித்து விளக்கஞ் செய்யும் வழி நூல் ஆகும். நூறு திருவெண்பாக்களால் ஆயது. இந்நூல் திருவிசலூர் ஆளுடைய தேவ நாயனரின் மாணுக்கர் திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனுரால் தம் மாணுக்கர் ஒருவருக்குக் கி.பி. 1177-ல் அருளிச் செய்து உபதேசிக்கப் பெற்றது.

இந்நூல் இதன் ஆசிரியரால் தில்லைத்திருச் சிற்றம்பலத்தில் கூத்தப்பிரான் திரு முன்பு பஞ்சாக்கரப்படி எனப்படும் திருக்களிற்றுப் படியின் மேல் வைக்கப் பெற்றபோது, கூத்தப் பெருமான் திருவருளால், கல்லால் இயன்ற களிற்றுக்கை நிமிர்ந்து இதனை வாங்கி அம்பல வாணரது எடுத்த பாத நிழலில் வைத்தது. இக் காரணம் பற்றி இது திருக்களிற்றுப்படி யார் எனப் பெயர் பெறுவதாயிற்று.

இது தான் கூறும் சிவானுபவ நுட்பங் களுக்குத் திருக்குறள், திருமுறைகள், திருத் தொண்டர் புராணத்து வரும் நாயன்மார் வரலாறுகள் என்பவற்றிலிருந்து மேற்கோள் மூலங் கள் காட்டுகின்றது. இறைவன் அடி கூடு வதற்குச் செய்யத் தகும் சாதனங்களைச் சிவ தன்மம், சிவயோகம், சிவஞானம் என மூன்றில் அடக்கிக் கூறுகின்றது. இங்ஙனம் கூறுதல் திருஞான சம்பந்தப் பெருமான் அருளிச் செய் துள்ள சிவபுரத் திருப்பதிகத்துட் கூறியவற் ரோடு ஒத்து உள்ளது. உண்மை நாயன்மார் செயல்களை மெல்வினை, வல்வினை எனப் பகுத்து உணரவேண்டும் என்னும் விளக்கம் இந்நூலாற் பெறப்படுகின்றது. இஃது எந்நிலை நிற்பினும், 'நான் அழிய அன்பு செயின் அரன் வெளிப்படு வன்' என்கிறது.

''சார்புணர்ந்து சார்பு கெட வொழுகின்'' ''வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை'' என் னுந் திருக்குறட் பாக்கள் எடுத்துக் காட்டப் பெற்றுப் பொருள் விளக்கம் செய்யப்படு கின்றன.

முதல்வனுக்கும் உலகிற்கும் உள்ள சம்பந் தத்தை, இறைவன் ''உலகெலாமாகி வேருய் உடனுமாய்'' நிற்கும் அத்துவித சம்பந்தத்தை, ''அது நான் ஆனேன்'' என்பது முதலிய மகா வாக்கியப் பொருள்களோடு இயைத்து, திரு ஞானசம்பந்தர் திருவாக்காகிய ''ஈருய்முதல் ஒன்ருய்....எட்டுத் திசைதாணுய் வேருய் உடன் ஆனன் இடம் வீழிம் மிழலையே'' என்னும் பாடலைக் காட்டி முடிவு கூறுகின்றது. இன்னும் இதன்கண்,

''நங்கையினுல் நாமனைத்தும்
செய்தாற்போல் நாடனைத்தும்
நங்கையினுல் செய்தளிக்கும்
நாயகனும்''.

''கடல்அலைத்தே ஆடுதற்குக் கைவந்து நின்றும்
கடல்அளக்க வாராதாற் போலப்-படியில்
அருத்திசெய்த அன்பரைவந் தாண்டதுவும் எல்லாம்
கருத்துக்குச் சேயனுய்க் காண்''

என்ருற் போலவரும் பாட்டுக்கள் எல்லாம் மிக உயர்ந்த அறிவதற்கரிய முடிநிலை உண்மைகளை எண்பொருளாகச் செலச் சொல்லுவன.

இவ்விரண்டு நூல்களும் எழுந்த காலத்தில் தமிழகத்தே உண்மை அநுபவம் ஒன்றே மதிக் கப்பெற்றது; வீண் தருக்க வாதங்களிலும் போலி ஆரவாரங்களிலும் மக்கள் மனஞ் செலுத்தவில்லை என்பது தெளிவு. உபநிடதங் கள், பிரமசூத்திரம், பகவத் கீதை என்னும் மூன்றுமே பிரமாணம் என்னும் கொள்கை இக் காலத்தில் தமிழ் மக்களிடையே பெரிதும் பரவவில்லை எனத் தெரிகிறது.

சிவஞானபோதம் :

இது முன்னும் பின்னும் எழுந்த எல்லா ஞான நூல்களுக்கும் தலையாய நூலாக அமைந் துள்ளது. இதனை அருளிச் செய்தவர் திருவெண் ணெய்நல்லூர் மெய்கண்ட தேவ நாயனுர் ஆவர். அவர் தமிழ்நாடு செய்த தவத்தானே மெய்யுணர்வின் முற்றுப் பேறுடையவராகத்

திருவவதாரம் செய்தவர். இவர் காலம் பதின் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி ஆகும்.

இந்நூல் பன்னிரண்டு சூத்திரங்களாலாயது. முதற்கண் கடவுள் வாழ்த்து, அவையடக்கம் என்னும் இரண்டு செய்யுட்களை நூலின் அகத்துறுப்பாகிய பாயிரமாக உடையது. அளவில் சிறியதாயினும் அறிவு நூல்களின் முடிவெல்லாம் அகப்படுத்துத் தெரிவிப்பது. சித்தாந்த சைவத்தின் அடிப்படை உண்மைகளையும் முடிநிலைத் துணிவுகளையும் 39 தெரிவுகளில் முறைப்பட அடங்கக் கொண்டு தெளிய உணர்த்துவது. வேதாகமங்களின் முடிந்த முடிபை இந்நூல் ஒன்றாலேயே உணர்தல் கூடும். இது முப்பொருள்களின் உண்மையினையும், இயல்பையும், மெய்யுணர்வின் இயல்பையும், அதன் பயனையும் அளவை முறையின் வைத்துக் கோவை செய்து விளக்குவது. இதனால் ஒருவர் உண்மையின் இணைப்பு நிலையை எளிதில் உணர்ந்து இன்புறு நிலையைப் பெறலாம். இதனது சிறப்பியல்பு கற்போர் உள்ளத்தைச் சொற்கள் பற்றிய வீண் விவாதங்களிலிருந்து பொருட் பெற்றியின் உண்மை நிலையில் கொண்டு உய்ப்பதில் உள்ளது. பிரம்மசூத்திரம், உபநிடதங்களில் வரும் சொற்றொடர்களின் ஆராய்ச்சியில் கற்போர் உள்ளத்தை உய்ப்பதாக அமைய, இஃது அவற்றில் உள்ள பொருள் நிலை பற்றிய ஆராய்ச்சியை எஞ்சாது மேற்கொள்கின்றது. அதனால் இதன்கண் வியப்பூட்டும் சுருக்கமும் தெளிவும் அமைந்துள்ளன. இதன் பொருள்நிலை பின்வருமாறு உள்ளது :

காப்புச் செய்யுள் :

பல நூல்களையும் கற்பதனால் வரும் குழப்ப உணர்வு நீங்கித் தெளிவுணர்வு பெறுவதற்குக் கல்லால் நிழலில் எழுந்தருளியிருந்து அருள் புரியும் சிவபெருமான் திருவருள் வேண்டும். விநாயகப் பெருமானை வழிபடுவார்க்கு அத்திருவருள் எளிதிற் கைகூடும்.

முதற் பொருளைத் தலைப்பட்டு உணரும் உணர்வே மெய்யுணர்வு எனப்படும். அவ்வுணர்வு உயிரின் இயல்பை முதற்கண் தெளிய உணர்ந்தார்க்கே வரக்கூடியது. உயிராகிய தம்மியல்பை முன்னுணர்ந்து, பின் தலைவனை உணர்ந்தோர், சிவத்துவம் விளங்கப் பெற்றுச் சிவனை ஒப்பர். அத்தகைய உண்மை அநுபவம் பெற்றவர், எம்மாற் செய்யப்படும் இச் சிவஞானபோத நூலை இகழாது நல்லதெனக் கண்டு கைக்கொள்வர்.

இனி, தம்மியல்பையே உணரமாட்டாத பிறர் எல்லோரும், தலைவன் இயல்பை உணரமாட்டார். அன்னோர் உண்மையின் ஒவ்வொரு கூறுபற்றிய ஒரு புடை உணர்வைக் கொண்டு ஒருவரோடொருவர் முரண்பட்டுப் பலவற்றைக் கூறுவர். அத்தகையோர் எம்மையோ எமது நூலையோ இகழ்ந்து கூறின் அவ்விகழ்ச்சியை யாம் பொருட்படுத்தோம். உயர் ஞானம் பெற்றோர் வாய்மொழிகளே பிரமாணியம் ஆகும் என்பது கருத்து.

நூல் :

முதல் சூத்திரம் : உலகம் அவன் அவள் அது எனச் சுட்டி அறியப்படுவது. அதனால் அது தோன்றி நின்று மறைந்து மீளத் தோன்றுவதாய் உள்ளது என்பது விளங்கும். இங்ஙனம் மாற்றமடையும் இவ்வுலகை நியமித்து ஒழுங்குபட நடத்தி வரும் முதல்வன் ஒருவன் இருத்தல் வேண்டும். அவன் சுட்டி அறியப்படாதவனாய், எவ்வகையான மாறுதலும் இல்லாத செம்பொருளாய், எல்லா உலகையும் ஒருங்கே ஒடுக்கி ஒருங்கே தோற்ற வல்லவனாய் இருத்தல் வேண்டும். உயிர்கள் அறியாமையாகிய தம்மியற்கைக் குற்றம் நீங்கி அறிவு வளர்ச்சி பெற்று மேம்படுதற் பொருட்டே உலகப் படைப்பை முதல்வன் மேற்கொள்ளுகின்றான். இக்காரணங்களால் முதல்வனை உலகின் பரம ஆதார நிமித்தகாரணன் என்று உணர்தல் வேண்டும். அவன் எல்லா முதன்மையும் தனதேயாக ஏகனாகி நிற்பவன்.

இரண்டாம் சூத்திரம் : முதல்வன் இவ்வுலகைப் படைக்கும்போது உயிர்களோடு கலந்து ஒன்றாய், பொருட்டன்மையால் வேறாய், உயிர்க்குயிராம் தன்மையால் உடனாய் நின்று செலுத்திப் படைப்பன். அங்ஙனம் படைக்கும் போது அவ்வுயிர்கள் முற்செய் வினைக்கேற்ப உடம்பு முதலியவற்றைப் பெற்றுப் பிறந்தும் இறந்தும் வரும்படி அவற்றைத் தான் செய்யும் ஐந்தொழிலில் அகப்படுத்தி நடத்துவன். அவன், தானும் தன் சத்தியுமென, தன்னுள் இரு வகைப்பட நின்று உலகினை நடத்துவன்.

மூன்றாம் சூத்திரம் : உடம்புதோறும் காணப்படும் ஒழுங்குபட்ட அறிவு செயல்களுக்கு மூலமாய், யான் என்னும் உணர்வு வடிவில் விளங்குவதே ஆன்மா எனப்படும்உயிர். அதனை யாது என ஆராய்ந்த பலர் பலவகைப் படக் கூறுவர்.

அஃது இன்னது என அறியவாராமையின், அதனைச் சூனியம் என்றனர் புத்தர். உடம்பையே யான் என வழங்கி வருதலின், உடம்பே ஆன்மா என்றனர் உலகர். ஐம்பொறிகளே அறியக் காண்டலின் அவையே ஆன்மா என்றனர் ஒரு சாரார். உயிர்ப்பு இல்லையாயின் உயிர் இல்லை. ஆதலால் உயிர்ப்பாகிய பிராண வாயுவே ஆன்மா என்றனர் மற்றொரு சாரார். நாம் பொருள்களால் அறிந்தவற்றை மனத்தால் பற்றி, ஒருப்பட்டு எழுந்து புத்தியால் நிச்சயித்துச் சித்தத்தால் சிந்தித்து இன்ப துன்ப வேதனைப்படுதலால், இவ்வாறு பற்றுதலும் நிச்சயித்தலும் ஒருப்படுதலும் சிந்தித்தலுமாகிய தொழில்களைச் செய்யும் மனம் புத்தி அகங்காரம் சித்தம் என்பவையே ஆன்மா என்றனர் அந்தக் கரண ஆன்மவாதிகள். கனவின்கண், நனவிற்போலக் கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று, அறிந்து வருதல் உண்மையின், அவற்றைச் செய்யும் நுண்ணுடம்பே ஆன்மா என்றனர் சூக்கும தேக ஆன்மவாதிகள். 'பிரஞ்ஞானம் பிரம்மம்' என உபநிடதம் கூறலின் பிரம்மமே ஆன்மா என்றனர் சங்கரர் முதலாயினோர். உடற் கூறுகளும், உள்ளத்தின்

கூறுகளும் ஒருங்கியைந்து நடைபெறும்போது உணர்வு உள்ளது; அல்லாத போது உணர்வில்லை; ஆதலால் அக்கூறுகளாகிய அகப் புறக் கருவிகள் அனைத்தின் கூட்டமே ஆன்மா என்றனர் புத்தரில் ஒரு சாரார். இந்த எண்மர் மதங்களில் எழுவர் மதம் மூன்றும் சூத்திரத்தால் மறுக்கப்படுகின்றன. நான்காம் சூத்திரத்தால் அந்தக்கரண ஆன்ம வாதம் மறுக்கப்படுகின்றது. ஆன்மா மாயைக்கும் மாயா காரியங்களுக்கும் பிரம்மத்திற்கு வேறாய் மாயையால் அறிவு விளக்கம் பெறுவதாய் உள்ளது என முடிக்கின்றது இச்சூத்திரம்.

நான்காம் சூத்திரம்: ஆன்மா, மனம், புத்தி அகங்கார சித்தங்களில் ஒன்றன்று ஆயினும், அது சகச மலத்தால் தடுக்கப்பட்டுத் தன் உணர்வாற்றலை இழந்து நிற்றலால், அவற்றோடு கூடி நின்று, நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் என்னும் ஐந்து உணர்வு நிலைகளில் இறங்கியும் ஏறியும் வரும். ஆன்மாவிற்கு உளதாகும் அறியாமை ஆணவச் சார்பால் வந்த செயற்கை என்பது இதன் முக்கியக் கருத்து.

ஐந்தாம் சூத்திரம்: மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளும் தமக்குரிய ஊறு சுவை உரு நாற்றம் ஓசை என்பவற்றை அறியும்போது உயிரால் செலுத்தப்பட்டே அறியும்; ஆயினும் அவை தம்மை நோக்கியும் அறிவதில்லை; தம்மைச் செலுத்தும் உயிரையும் அறிவதில்லை. அதுபோல, உயிர் ஒரு பொருளை அறியும்போதும், ஒரு செயலைச் செய்யும்போதும், முதல்வன் அருளால் அறிவிக்கப்பெற்றும் செலுத்தப் பெற்றுந்தான் அறிகிறது, செய்கிறது. ஆயினும் அது பொருள் நோக்கு உடையதாகவே இருத்தலின், தன்னை நோக்கியும் அறிவதில்லை; தன்னுணர்வின் முதலாகிய திருவருளையும் அறிவதில்லை. முதல்வன் எல்லா ஆன்மாக்களையும் அறிவித்தும் தொழிற்படுத்தியும் வருவது, காந்தம் தான் இசைவின்றி இருந்து இரும்புத் துண்டுகளைத் தன் ஆற்றலில் அடங்கக் கொண்டு இயக்குதல் போலும்; அச் செயல்களால் அவன் சிறிதும் மாற்றம் அடைவதில்லை. மாயையின் சார்பால் ஏகதேச அறிவு விளங்கப்பெறும் உணர்விற்கு முதல்வனது உபகாரம் உணர்த்துகிறது இச் சூத்திரம்.

ஆறும் சூத்திரம்: 'முதல்வன் நம் அறிவால் அறியப்படுபவனா, அல்லனா?' என்பது வினா. அறியப்படுபவன் என்றால், அறியப்படும் பொருளெல்லாம் சடமாயும் அழிபொருளாயும் இருத்தல் நியதி ஆதலால், இறைவனும் அழி பொருள் என்பதாய் முடியும். இனி, அவன் எவ்வாற்றானும் அறியப்படாதவனே எனின், நம் உணர்வில் தட்டாத பொருளால் நமக்கு எந்தப் பயனும் உண்டாகாது. ஆதலால்அவனை இல்பொருள் எனக் கொண்டதாகவே முடியும்: ஆதலால் முதல்வனை நம் சுட்டறிவுக்கு அப்பாற்பட்டவன் எனவும், பாசங்களின் நீங்கி, சுட்டுதலின்றி ஒன்றித்து நின்று உணரும் மெய்யுணர்வுக்கு விளங்குபவன் எனவும் மெய்யுணர்ந்தோர் கொள்ளுவர். அவன் சுட்டறிவுக்கு அப்பாற்படுதலின் சித்துப் பொருள் எனவும், மெய்யுணர்வுக்கு விளங்குதலின் உள்பொருள் எனவும் துணிந்து, அவனைச் சிவசத்து என மெய்யுணர்ந்தோர் கூறுகின்றனர். சிவம்—சித்து. சிவசத்து சித்துச்சத்து, அறிவு வடிவாய் உள்ள செம்பொருள்.

ஐந்தாம் சூத்திரம்: உயிர்க்கு அறிவு செயல்கள் மாயையால் விளங்குவன எனினும், அவ்விளக்கம் முதல்வன் திருவருளை இன்றியமையாதவை என நமக்கு உணர்வு விளங்கும் முறையை விளக்குகின்றது.

ஆறும் சூத்திரம்: உயிர்களெல்லாம் அறியாமையில் அழுந்தியுள்ள கேவல நிலையிலும், மாயையின் உதவியால் அறிவு விளக்கம் பெறும் சகல நிலையிலும் அறியப்படாதவன் எனினும், இருளும் மருளும் நீங்கி முதல்வன் திருவருளைத் தலைப்பட்டு அதனைச் சார்ந்து ஒற்றித்து நின்று உணரும் மாசறு காட்சியில் அறிவின்பமாய் விளங்கும் செம்பொருளாய் உளன் முதல்வன் எனத் தெரிவிக்கின்றது. இந்நிலை சுத்த நிலை எனக் கூறப்படும். ''தூஉய்மை என்பது அவாவின்மை'' என்னும் திருவள்ளுவர் சொல்லாட்சியைக் கருதுக.

ஏழாஞ் சூத்திரம்: சத்தாகிய (அழிவில் பொருளாகிய) சிவத்தின் முன், அசத்தாகிய (அழிபொருள் ஆகிய) உலகம் முனைந்து நிற்க மாட்டாமையால், சிவம் உலகத்தை நுகராது; உலகமும் அறிவிலது ஆதலால், சிவத்தை அறியாது. இரண்டையும் அறிந்து அழுந்துவது இரண்டும் அல்லாத, சதசத்து எனப்படும் ஆன்மாவே ஆம். அவற்றை அறிந்து அழுந்தும் போது, ஆன்மா அசத்தாகிய குணவடிவில் உள்ள பொருள்களை அசத்தாகிய தனு கரணம் என்பவற்றால் அறிந்து, அசத்தாகிய குணமயமாய் நின்று தன் வேதனைப்படும். இது பிறப்பு நிலை. இங்ஙனமே, வீட்டு நிலையில் அது சத்தாகிய சிவத்தைச் சத்தாகிய அதன் திருவருளைச் சார்பாகக் கொண்டு உணர்ந்து, சத்தாகிய சிவத்தின்கண் உள்ளதாய் அவன்றன் எண் குணங்களும் தன்பால் மேம்பட்டு நிற்கச் சிவமாய் நிற்கும். இங்ஙனம் சத்து அசத்தெனப்படும் இரு திறனையும், இரு திறனுலும் அறிந்து, இரு திறனின் கண்ணும் உளதாதலே ஆன்மாவின் சிறப்பியல்பாம். இவ்வியல்பு பற்றிப் பிறப்பு நிலையில் பருவுடல், நுண்உடல், குணவுடல், கஞ்சுகவுடல், காரணவுடல் என்பவற்றைப் பொருந்தி அவையவை வேறாய் உபாதிப்பட்டு வந்த ஆன்மா, வீட்டு நிலையில். சிவத்தைச் சார்ந்து சிவமேயாக நிற்கும். இவ்வாறு நிற்றல்பற்றி, ஆன்மாவே முதற் பொருள் என, முன்னொடு பின் முரணிக் கூறுதல் தகாது. ''இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா'' என்பது பொருட் செறிவுள்ளது.

''தம்மையுள் நோக்கிக்கண்டு
தகவெனும் வேலியிட்டுச்
செம்மையுள் நிற்பராகில்
சிவகதி விளையும் அன்றே''

என்னும் அப்பர் அருண்மொழி புடைபட வைத்துக் கருதற்பாலது.

எட்டாம் சூத்திரம்: முன் முன் பிறவிகளில் பயன் கருதாது செய்து வந்த சரியை கிரியா யோகத் தவ முதிர்ச்சியினால், உயிர்க்குயிராய் மறைந்து நின்று உணர்த்திவரும் முதல்வன் அருளாசிரியனாய்த் தோன்றி நின்று மெய்யுணர்வை விளக்கியருளுவன். மன்னவன் மகன் அறியாமை காரணமாக வேடரிடத்தே தங்கி விதிவிலக்கு அறியாது தன் உரிமையை மறந்து வாழ்ந்து வருதல்போல, சிவத்தைச் சார்ந்து சிவானந்தப் பெருஞ் செல்வத்தைப் பெற்று நிலையாக வாழ்வதற்கு உரிய சிவ குமாரன் ஆகிய உயிர், ஐம்பொறிகள் முதலிய தத்துவக் கூட்டத்தைச் சார்ந்து, தன் இயல்பையும் தனக்கும் முதல்வனுக்கும் உள்ள சம்பந்தத்தையும் அறிந்து கொள்ளாமல், பிறப்பிறப்புட்பட்டு உழன்று துன்புறும். இதனை ஆசிரியன் உணர்த்தத் தவ முதிர்ச்சியுள்ள உயிர் உணரும். உணர்ந்தவுடன், தத்துவக் கூட்டங்களின் நீங்கி முதல்வன் திருவடியில் பிரிப்பின்றி ஒன்றி இன்புறு நிலையைத் தலைப்படும்.

''கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி''

என்னும் திருக்குறள் இச்சூத்திரத்தோடு ஒப்பு நோக்கற்பாலது.

ஒன்பதாம் சூத்திரம்: அசத்தாகிய தத்துவங்களோடு கூடுவதால் உயிர்க்கு உண்டாகும் சுட்டுணர்வு பாச ஞானம் எனப்படும். மூன்றாம் சூத்திரத்துக் கூறப்பட்டவாறு உயிர், ''நான் யார்'' எனத் தன் உண்மையை உள்நோக்கி ஆய்ந்து உணரின், அது மாயா காரியமாகிய தத்துவக் கூட்டங்களின் நீங்கித் தன் இயற்கையாகிய வியாபக உணர்வு நிலையைப் பெறும். அந்நிலையில் தத்துவங்களாகிய பாசம் நீங்கினும் முன்னைய பயிற்சி காரணமாக அவ்வுயிர் தன்னை ''நான் பரம்பொருள்'' எனச் சடிதியில் உணரும். இவ்வுணர்வு நான் என்னும் செருக்குப் பற்றி எழுவது ஆதலால், பசு ஞானம் எனப்படும். பகற்பொழுதில் ஆகாயத்தின் அளப்பரிய விளக்கம் அதன்கண் கலந்து விளங்கும் ஞாயிற்றின் பேரொளியால் உளதாதல்போல, பாச நீக்கத்தில் உயிரின்கண் விளங்கும் வியாபக உணர்வு திருவருட்சார்பால் வரும் எனத் தெளிதல் வேண்டும். தெளிந்து அத்திருவருள் ஒளியில் யான் எனது எனும் செருக்கு அற அடங்கி நிற்பின், அவ்வருளுக்கு முதலாக உள்ள சிவம் பேரின்ப வடிவாய் விளங்கி, ஆன்மாவைத் தன்வயப்படுத்தி இன்பூட்டும். இவ்வாறு திருவருளைச் சார்ந்து அருளே கண்ணாகக் காணும் காட்சியே மாசறு காட்சி, அல்லது மெய்யுணர்வு, அல்லது சிவஞானம் எனப்படும். தத்துவ புவனங்களாகிய பாசம் அனைத்தும் கானல் நீர்போல் தோன்றி மறைவன எனக் கருதி அவற்றில் பற்றுச் செய்யாது நிற்பின், அவ்வாறு நிற்கும் உயிரின் உணர்வின்கண் திருவருள் ஞானம் பிறவி வெப்பத்திற்குத் தண்ணிய நிழல்போல் வெளிப்படும்.

பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பற்ற முடியாத பேரின்ப முதல்வனைத் திருவருள் ஞானமாகிய சிவஞானத்தால் ஒருவன் தன் அறிவின்கண் நாடுதல் வேண்டும். இங்ஙனம் நாடிக் காணும் காட்சி சலியாது இருத்தற்பொருட்டு முத்தி பஞ்சாக்கரம் சுத்த மானதமாக எண்ணப்படும்.

இச்சூத்திரப் பொருள்,

''ஓர்த்துள்ளம் உள்ள(து) உணரின் ஒருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு''

என்னும் குறட்பாவின் விரிவுரையாக அமைதல் காண்க.

பத்தாம் சூத்திரம்: பிறப்பு நிலையில் முதல்வன் உயிரின் பின்னாக அதன் அறிவில் மறைந்து உடனாகி நின்று அதனை அறிவித்தும், செய்வித்தும் வருகின்றான். ஆயினும் உயிர் அவ்வுண்மையை அறியாது யான் எனது என்னும் செருக்கோடு முயலுதலினால், முதல்வன் தன்னிருப்பை அவ்வுயிர்க்குக் காட்டாது அதன் வழியிலே அது செல்லுமாறு ஏவி, அது செய்யும் வினைகளுக்குரிய பயனை ஊட்டுகின்றான். அதுபோல அவன் இருப்பை உணர்ந்த வீட்டு நிலையில், ஆன்மா தான் என ஒரு முதல் காணப் பெறாதபடி முதல்வன் வியாபகத்தில் அடங்கி ஒன்றாகி நின்று அவன் அருளால் அல்லது ஒன்றையும் அறிதலும் செய்தலுமின்றி அருள்வழி நிற்றல் வேண்டும். இங்ஙனம் முதல்வனோடு ஒன்றித்து நிற்றலால் இயற்கை மலமாகிய ஆணவத்தின் வாதனை பற்றறக் கழியும்; அவன் அருள்வழி நிற்றலால் அருளே காட்சிப்பட்டு உலகம் காட்சிப்படாது. அதனால் மாயையின் செயல் பற்றறக் கழிந்து, இருவினைகளும் ஆன்மாவைப் பற்றமாட்டா; எல்லாம் முதல்வன் செயலாய் முடியும்.

இச்சூத்திரத்தால் குறிக்கப்படும் உணர்வு நிலை இராப்பகலற்ற நிலை எனவும், அருள் நிலை எனவும், துரிய நிலை எனவும் நூல்களால் கூறப்படும். இந்நிலையை அரவிந்தர் *Dynamic identity with the inner presence* எனக் குறிப்பர்.

இச்சூத்திரப் பொருள்,

'சார்புணர்ந்து சார்புகெட வொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்'

என்னும் அருமைத் திருக்குறளின் அனுபவ விரிவுரையாக அமைதல் கண்டு இன்புறத் தக்கது. இச்சூத்திரம் மெய்யுணர்வின் பயன் இரண்டனுள் பாச நீக்கம் கூறுகின்றது.

பதினொன்றாம் சூத்திரம்: காணும் இயல்புள்ள கண் உயிரின் உதவியைக் கொண்டே பொருள்களைக் காணும்; அதுபோல, உயிர் முதல்வனது திருவருள் உடனின்று பொருள்களைக் காட்டித் தானும் கண்டாலன்றி, அவற்றை அறிந்து அழுந்துவதில்லை. காட்டிக்காணும் இம்முதல்வன் உபகாரங்கள் எல்லாவுயிர்களுக்கும் பிறப்பு, வீடு என்னும் இருநிலைகளிலும் நிகழ்கின்றன. பிறப்பு நிலையில் உயிர்கள் அசத்தாகிய உலகப் பொருள்களைத் தம் அறிவிச்சை செயல்களால் பற்றி விடயித்து இன்பத் துன்ப மயக்கமுறும்; வீட்டு நிலையில் முதல்

வனேயே தம் அறிவு இச்சை செயல்களுக்கு விடயமாகப் பற்றி அழுந்திப் பேரின்பம் துய்க்கும். இவ்வாறு முதல்வன் செய்யும் உபகாரத்தை உணர்ந்து நிற்பதன் பயனுக முத்தான்மாக்களுக்கு முதல்வனிடத்து இடையருப் பேரன்பு கரைகடந்து மீதூரும். அவ்வன்பே இன்பமாய்ச் சிவம் வெளிப்பட, அதனைச் சார்ந்து அழுந்தி, அன்பே சிவமாய் அவ்வான்மாக்கள் அமர்ந்திருக்கும்.

இதுவே பரமுத்தி நிலையில் ஆன்மாச் சிவமாகும் தன்மைப் பேரா இயற்கை பெற்று வாழும் நிலை. இஃது இன்புறுநிலை எனவும், துரியாதீத நிலை எனவும் கூறப்படும். இதனை *Static identity with the inner presence* என்பர். இதுவே மெய்யுணர்வின் முடிந்த பயன்.

பன்னிரண்டாம் சூத்திரம் : இன்புறு நிலையாகிய பரமுத்தி நிலையைத் தலைப்பட்ட முத்தான்மாக்கள், திருவருளால் உந்தப்பட்டு, அல்லது பிராரத்தவாதனை காரணமாக சில சமயங்களில் அதீதமாகிய நிட்டை நிலையினின்றும் நீங்கி உலகமுகப்படுவர். அப்பொழுது மலவாதனை காரணமாக யான் எனது என்னும் செருக்குத் தம் உணர்வில் தோன்றுதபடி அவ்வாதனையாகிய மாசினை ஞான நீரால் கழுவுவர். அந்த ஞானம் நிலைபெறுதற் பொருட்டுத் தம்மை ஒத்த மெய்யன்பரோடு கூடி அன்புடையராய் ஒழுகுவர். அவ்வுடனுறைவு, நிலைபெறுதற் பொருட்டுத் திருக்கோயிலில் உள்ள திருவுருவங்களையும், திருவேடத்தையும் சிவன் எனவே தெளியக் கண்டு தொழுவர்.

இச்சூத்திரம் அணைந்தோர் எனப்படும் சீவன்முத்தர் இயல்பு கூறிற்று. இவ்வியல்புகளைத் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் முதலிய பெருமக்கள் வாழ்க்கை வரலாறுகளில் காணலாம்.

இப்பன்னிரண்டு சூத்திரங்களில் விவாத அம்சங்களாக உள்ள கருத்துக்களை ஆராய்ந்து உணரும்படி மெய்கண்ட தேவர் சூத்திரந்தோறும் கருத்துரையும், மேற்கோள், ஏது அல்லது பொழிப்புரை, உதாரணச் செய்யுள் என்னும் இவற்றுல் வார்த்திகமும் அருளிச் செய்துள்ளனர். வார்த்திகத்திலிருந்து முக்கிய முடிபுகள்தோறும் தன்னுற் கூறப்படும் பொருளும், அதன்கண் ஐயமும், அதற்குப் பிறர்கூறும் பக்கமும் (பூருவ பக்கம்), அதனை மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிபும், இயைபும் என்பவை வார்த்திகத்தால் விளங்கும். இங்ஙனம் 39 தெரிவுகளில் கலைஞானப் பரப்பை அடக்கிக் காட்டுகின்றுர் மெய்கண்ட தேவர்.

சிவம் எனும் சிறப்புப் பெயர்

''வேதாகம உபநிஷத ஷட்தரிசன புராணேதிகாசமாகிய எல்லாம் சிவ என்னும் இரண்டெழுத்திலே அடங்குகின்றன. யாங்ஙனமெனின், இருக்கு எசுர் சாமம் அதர்வணம் என்னும் வேதம் நான்கில் அதர்வணம் என்பது, முதல் மூன்றின் மந்திரத் தொகுப்பே யாதலால், அஃதவற்றில் அடங்கப் பெறும். ஆகலினற்றுன் அமரநிகண்டுடையார், அம்மூன்றனையும் சுட்டி, வேதங்கள் 'த்ரயீ' என வழங்கப்படும் என்றுர். அம்மூன்று வேதங்களுள் நடுநின்ற எசுர் ''தஸ்ய யஜுரேவசிர'' என்றமையால், ஏனை இரண்டிற்கும் முகம்போல நிற்கும் சிறப்பு வாய்ந்ததாம்.

இது மாந்திரம் எனவும், பிராமணம் எனவும், இரு வேறு பகுதியினதாய் விளங்கா நிற்கின்றது. இவற்றுள் மாந்திரப் பகுதி, மறித்தும் ஏழு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுச், சம்மிதா காண்டம் என்னும் பெயருடைத்தாய்ச் சிறந்து விளங்குவதாம். இனிச் சம்மிதா காண்டம் ஏழினுள்ளும், நடுக்காண்டமே பெரிதும் சிறப்புடைத்து. இனி இந்நடுக் காண்டமும் ஏழு சங்கிதைகளாக வகுக்கப்பட்டுள்ளது.

இவற்றுள்ளும் நடு நின்ற சங்கிதையுள் திருவுருத்திரத்தின் கண்ணே சதருத்ரீயம் விளங்கா நிற்ப, அச் சதருத்ரீயத்தின் இடையிலே விளங்கும் 'நமசிவாய' என்னும் ஐந்தெழுத்துக்களின் நடுவில் ஒளிர்ந்து கொண்டிருக்கும் 'சிவ' என்னும் மொழியால், வேதமும் வேதத்தைச் சார்ந்த கலைகளும் ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன. ஆகையால், இச் சிவ என்னும் மொழி, பிரமம் என்னும் மொழியாற் குறிக்கப்படும் பெரும் பொருட்குச் சிறப்புப் பெயராம் என்பது தெளியப் படும்.''

—மறைமலையடிகள்

‘போரேறு’ நுண்பொருள்கள்

‘மகாவித்வான்’, ‘பத்மவிபூஷண்’

ஸ்ரீமத். பி. ப. அண்ணங்கராசார்ய சுவாமிகள்

எம்பெருமானை ஆழ்வார்கள் பலவிடங்களிலும் ‘ஆயரேறு’ என்றும், ‘ஆயர்கள் போரேறு’ என்றும் விருஷபமாகப் பேசுகிறார்கள். விருஷபத்திற்கும் எம்பெருமானுக்குமுள்ள சில பொருத்தங்களை ஈண்டுக் காண்போம்.

(1) விருஷபத்திற்குச் சரணங்கள் நான்கு; எம்பெருமானுக்கும் சரணங்கள் நான்கு. சரணம் என்பதற்குக் கால் என்றும் பொருள், செய்கை என்றும் பொருள். விருஷபத்திற்குக் கால்கள் நான்கு என்பது உலகப் பிரசித்தம். எம்பெருமானுக்குச் செய்கைகள் நான்கு என்பது வேதாந்தப்பிரசித்தம். நான்கு செய்கைகளாவன: சிருஷ்டி, சம்ரட்சணம், சங்காரம், மோட்சப்ரதாநம் என்பனவாம். மோட்சப்ரதாநம் என்பதைத் தனிப்பட்ட செயலாகவே கூறவேணும் என்பது நம் ஆழ்வாராசாரியர்களின் திருவுள்ளம். ‘‘வீடாந் தெளிதரு நிலைமையது ஒழிவிலன்’’ என்றார் நம்மாழ்வார்.

(2) விருஷ சப்தவாச்யத்வம் விருஷபத்திற்கும் உண்டு; எம்பெருமானுக்கும் உண்டு. ‘‘விருஷோ விருஷப தர்மயோ:’’ என்பது நிகண்டு. விருஷம் என்றால் விருஷபத்திற்கும் பெயர். தருமத்திற்கும் பெயர். சாத்திரங்களில் எம்பெருமான் தருமமாகச் சொல்லப்பட்டனன். ‘தர்மஸம்ஸ்தாபநம் பண்ணப் பிறந்தவன் தானே ஸர்வதர்மங்களையும் விட்டு என்னைப் பற்று என்கையாலே ஸாக்ஷாத் தர்மம் தானே யென்கிறது’’ என்று முமுட்சுப்படியில் பிள்ளைலோகாசாரியருடைய திவ்யசூக்தியும் இங்கு அநுசந்தேயம். ஆக, விருஷசப்த வாச்யத்வம் விருஷபத்திற்கும் எம்பெருமானுக்கும் இணங்கியதாயிற்று.

(3) உணவு விஷயத்தில் பிறர் கை பார்த்திருக்குந் தன்மை, விருஷபத்திற்கும் எம்பெருமானுக்கும் ஒக்கும். எம்பெருமான் அர்ச்சாவதாரத்தில் உணவுக்குப் பிறர்கை பார்த்திருக்கின்றான். விபவாவதாரத்திலும், ‘‘வேர்த்துப் பசித்து வயிறசைந்து வேண்டடிசிலுண்ணும் போது ஈதென்று பார்த்திருந்து நெடுநோக்குக் கொள்ளும் பத்தவிலோசனம்’’ என்ற நாச்சியார் திருமொழியின்படியே.

(4) விருஷபத்திற்கு மாடு என்று பெயர். உலகில் அறிவிலிகளை மாடே! என்று வசை கூறுதல் வழக்கம். எம்பெருமானும் அறிவிலி யென்றே கூறப்படுகிறான்; சகஸ்ரநாமத்தில் அவிஜ்ஞாதா என்று ஒரு திருநாமம். அறியாதவன் என்றே இதற்குப் பொருள்: சர்வஞ்ஞனை எம்பெருமானை அவிஜ்ஞாதா என்னலாமோ என்று கேள்வி பிறக்கும். அவ்விடத்தில் பட்டருடைய பாஷ்யத்தில் வெகு அழகாகப் பொருள் நிர்வகிக்கப்பட்டுள்ளது. ‘‘அவிஜ்ஞாதா ஹி பக்தாநாம் ஆகஸ்ஸு கமலேக்ஷண:’ என்பது நிர்வசநம். பக்தர்களின் அபராதங்களில் அறிவு இல்லாதவன் எம்பெருமான். எம்பெருமான் பக்தர்களின் குற்றங்களை அறியாதவனாகவே இருந்திட்டால், அவற்றைப் போக்யமாகக் கொள்ளுகிறான் என்பதற்கு அவகாசமேது? என்கிற சங்கையும் இங்கு உதிக்கும்; இதற்கு சுருதப்ரகாசிகையில் பரிகாரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. எம்பெருமான்பக்தர்களின் குற்றங்களில் கண் செலுத்தமாட்டான்; ஒருகால் கண்செலுத்தினாலும் அவற்றை நற்றமாகவே கொள்வன் என்று தெரிவிக்கப்படுகிறது.

(5) விருஷபம், பழகிக்கொண்டே இருக்கிறவர்களிடத்திலும் கறுவுதல் உண்டானால் முட்டித்தள்ளும்; எம்பெருமான்படியும் இப்படியே; ‘‘சீமாலிகன் அவனோடு தோழமைக் கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீ யெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்’’ என்ற பெரியாழ்வார் திருமொழி இங்குக் கருதுதற்குரியது. மாலிகன் என்பானொருவன் கண்ணபிரானுக்கு உயிர்த்தோழனாய் அப்பிரானிடத்தே பலவகை ஆயுதங்களையும் பயின்று ஒருவர்க்கும் அஞ்சாமல் அகங்காரியாய் சாது ஜனங்களை இம்சித்துக் கொண்டிருக்க, கண்ணபிரான் ‘நண்பனாகிய இவனை நாம் கொல்வது தகாதே! என்ன செய்யலாம்?’ என்று வியாகுலப்பட்டு, ஒருநாள் அவனைநோக்கி, ‘நீ இப்படிச் செய்வது தகாது’ என்ன, ஆசுரப்ரக்ருதியான அந்த மாலிகன், தன் வாயில் வந்தபடி பிதற்றி, ‘நீ எல்லா ஆயுதங்களையும் எனக்குக் கற்பித்தும் சக்கராயுதப் பயிற்சிமாத்திரம் செய்யவில்லையே என்று கண்ணன்மேற் குறைகூற, ‘எனக்கு முடியாததும் ஒன்றுண்டோ! நீ அவசியம் அதைக் கற்பிக்கவேணும்’ என்ன, கண்ணன் இதுதான் தக்கசமயம் என்று திருவுள்ளத்திற்கொண்டு, சக்ராயுதத்தையெடுத்துத் தன் ஒற்றை விரலால் சுழற்றி மேலெறிந்து கையிலேற்று, ‘இது உனக்கு அரிதே’ என்று கண்ணன் சொல்லவும், அதை அவன் கேளாமல் சக்ராயுதத்தை வாங்கிச் சுழற்றி எறிந்து பிடிப்பதாக நினைத்துத் தன் கைவிரலைக் கழுத்துக்கு அடுத்ததாக

வைத்து நிற்க, அச்சக்கரம் சுழன்று வருவதற்கு இடம்போதாமையாலே, அதன்வீச்சு இவன் கையிற் பிடிபடாமல் இவன் தலையை அரிந்து விட்டதென்பது இங்குக் குறித்த வரலாறு.

(6) விருஷபம், காசு கொடுத்து வாங்கி விட்டால் நம் வீட்டையே நாடிவரும்; ''பக்திக் ரீதோ ஜநார்த்தந'' என்கிறபடியே, பக்தி யாகிய வலையினுல் எம்பெருமானைப் பெற்று விட்டால், அவனும் நம்மையே நாடி நிற்பன். ''எங்கும் பக்கநோக்கறியான் என் பைந்தாம ரைக் கண்ணனே'' என்கிறபடியே வேறொரிடம் புரிந்து பாரான். ''கனிவார் வீட்டின்பமா யிருப்பன்.''

(7) விருஷபம் பிறர்க்கு உழைப்பதையே இயற்கையாக உடையது. எம்பெருமான்படி யும் இதுவேயாம்; தூது செல்வதும் தேரில் பாக ஞய் நிற்பதும், மனிசர்க்காய் நாட்டில் பிறந்து படாதனபடுவதும் காண்க. எம்பெருமானு டைய சகலமும் பிறர்க்கேயாக இருக்கும்.

(8) விருஷபம் பாரத்தை வகிப்பதற் கென்றே பிறக்கும். எம்பெருமானும் பக்தர் களின் யோக க்ஷேமபாரங்களை வகிப்பதிலேயே குதூகலமுடையவன். ''யோக க்ஷேமம் வஹாமி அஹம்'' என்றே கீதையில் அருளிச் செய்கிருன்.

இவ்விடத்தில் ஒரு கதை; சாஸ்திர விச் வாஸமுடைய ஒரு சுவாமி, ''யோக க்ஷேமம் வஹாம்யஹம்'' என்கிற பகவத் சூக்தியில், அசைவில்லாத நம்பிக்கையுடையவராய்த் தேக யாத்திரைக்காகத் தாம் ஒரு முயற்சியும் செய் யாதவராய் இருந்து வந்தார். எம்பெருமானும் அவருடைய நம்பிக்கைக்குப் போரவுகந்தருளிப் பலவகைகளாலே, அவருடைய யோகக்ஷேம பாரங்களைத் தானே நிர்வகித்து வந்தான். இப்படி வருகையில் அவருடைய அத்யவஸா யத்தை இன்னமும் சிறப்பிக்கத் திருவுள்ளம் பற்றிய எம்பெருமான், சில நாள் அவர்பால் புறக்கணிப்பாக இருந்தான். அவரும் பட்டினி கிடக்க நேர்ந்தது. ஆனுலும் பிறரிடம் சென்று யாசிக்க விரும்பவில்லை. பகவத்கீதை ஓலை நூலை எடுத்து, ''யோக க்ஷேமம் வஹாம்யஹம்'' என்றவிடத்துக் கரிபூசினுர். மறுநாள் காலையில் அவர் அனுட்டானத்திற்காகத் தடாகம் சென்றி ருக்கையில், மாதவன் ஒரு சிறுகுமாரனுய் உதட் டில் கரிபூசிக்கொண்டு பல கூடைகளிலே பலபல ஸம்பாரங்களை வைத்துத் தானே தலையில் சுமந்து கொண்டு வந்து, அவருடைய திரு மாளிகையில் முற்றம் நிறைய ஸம்பாரமய மாகவே நிரப்பிக் கொண்டிருந்தான். அவர் அனுட்டானத்தை முடித்துக் கொண்டு திரு மாளிகையில் நுழைகையில் முற்றம் முழுவதும் அமுதுபடியும் பலவகை ஸம்பாரங்களுமாய் நிறைந்திருக்கிறபடியைக் கண்டு, தேவிகளை நோக்கி 'இவையெல்லாம் ஏது?' என்று கேட்க, அவளும் யாரோவொரு பையன் கொணர்ந்து கொணர்ந்து வைத்துப் போகின்றுன்; நீங்கள் அனுப்பினதாகவன்றே நான் நினைத்திருக்கின் றேன் என்றுள். அதுகேட்ட அவர் 'எனக்கு ஒன்றும் தெரியாதே; நான் குளத்திற்கன்றே சென்று வருகிறேன்; அந்தப் பையன் யாவன்? எப்படியிருப்பன்? என்று கேட்டனர். 'இடைப் பிள்ளைபோல் தென்பட்டான். உதடெல்லாம் கரிபூசினபடியாய்க் கிடந்தது' என்றுள். கரி யென்கிற பேச்சுக் காதில் விழுந்தவுடனே, தாம் பகவத்கீதை யேட்டில் கரிபூசினவிடத்தை எடுத்துப்பார்த்தார். அங்குச் சிறிதும் கரி யில்லை. 'மாதவனுடைய மாயமே இது' என அறுதியிட்டார். அந்தோ! பாவியேனுக்குச் சேவைதந்தருளல் ஆகாதாவென்று, ஆகா சத்தை நோக்கி அழுவதும் தொழுவதுமாய்த் துடித்தார்; உடனே சங்கும் சக்கரமும் சிரித்த முகமும் தொங்கும் பதக்கங்களோடும் எங்கும் கண்டறியாத தோற்றமுடனே, நங்கள் பிரான் தோன்றினன். ''யோக க்ஷேமம் வஹாம்யஹம்'' என்றவனன்றே நான் என்று, சோதி வாய் திறந்து பணித்தனனும். ஆகவே, மாதவனே நம்முடைய பாரங்களைத் தாங்குகின்றவன்.

(9) விருஷபம் எத்தனை அடிபட்டாலும் லட்சியம் பண்ணுது; எம்பெருமான் அடிபட்ட தும் மகாபாரதமிறே. ''ஆங்கொருநாள்ஆய்ப் பாடி, சீரார் கலையல்குல் சீரடிச் செந்துவர் வாய், வாரார்வனமுலையாள் மத்தாரப் பற்றிக் கொண்டு, ஏராரிடை நோவ எத்தனையோர் போதுமாய், சீரார் தயிர்கடைந்து வெண் ணெய் திரண்டதனை, வேரார்நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு, நாராருறியேற்றி நன் கமைய வைத்ததனைப், போரார்வேற் கண்மட வாள் போந்தனையும் பொய்யுறக்கம், ஓராத வன்போல் உறங்கி யறிவுற்றுத், தாரார் தடந் தோள்கள் உள்ளளவுங் கை நீட்டி, ஆராத வெண்ணெய் விழுங்கி, அருகிருந்த மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே, ஓராதவன் போல் கிடந்தானைக் கண்டவளும், வாராத் தான் வைத்தது காணுள், வயிறடித்திங்காரார் புகுதுவார் ஐயரிவரல்லால், நீராமிது செய்தீ ரென்றுர் நெடுங்கயிற்றுல், ஊரார்களெல்லா ருங் காணவுரலோடே, தீராவெகுளியளாய்ச் சிக்கன ஆர்த்து அடிப்ப, ஆராவயிற்றினே டாற்றுதான்'' எனவரும் சிறிய திருமடல் காண்க.

(10) நிலத்தை உழுவதற்கு விருஷபம் முதல் சாதநம்; எம்பெருமான் ''பத்தியுழவன்' என்று திருமழிசைப்பிரான் பணித்தபடியே, பக்தி யுழவுக்கு முதற்சாதனமாக விளங்குபவன் பக்தியாகிற பயிர்க்கு நெஞ்சு விளைநிலம்; ''பேரமர் காதல் கடல்புரைய விளைவித்த கார மர் மேனி நங்கண்ணன்'' என்கிறபடியே, அதற்குக்கிருஷிபணுகிறவன் மாதவன். ஆசார்ய இருதயத்தில் ''பெரும்பாழில் க்ஷேத்ரஜ்ஞன் பெருஞ்செய்'' இத்யாதி சூர்ணிகையினுல், இவ் விஷயம் விசததமமாக அறியத் தக்கது.

(11) விருஷபம் நல்லவழிகளில் நன்றுக வோடும்; சேற்றுநிலம் கண்டால் தளரும். எம்பெருமானும் நன்னெறி நின்றவர்கள் பக்க லில், விரைந்து காரியம் செய்வன். ''மாய வன் சேற்றள்ளலில் படிந்தவர்களிடத்தில் தளர்ச்சி தோற்ற இருப்பன்''. இங்ஙனமே மற்றும் பலவகைப் பொருத்தங்களும் உய்த் துணரத்தக்கன.

**

உயிர் என வியத்தல்

ந. ரா. முருகவேள், M.A., M.O.L.,

நேயத்த தாய் நென்னல் என்னைப்,
புணர்ந்து, நெஞ்சம் நெகப்போய்,
ஆயத்த தாய், அமிழ்தாய் அணங்காய்,
அரன் அம்பலம்போல்
தேயத்த தாய், என்றன் சிந்தையதாய்த்,
தெரியிற்பெரிதும்
மாயத்த தாகி, இதோவந்து
நின்றது, என் மன்னுயிரே!

(இதன் பொருள்) நேற்று என்பால் உள்ளம் நெகிழ்ச்சியுடையதாய் என்னைக் கூடி, பின்னர் அவ்வுள்ள நெகிழ்ச்சி இல்லதுபோல என் நெஞ்சு கலங்கும்படி என்னை விட்டுப் பிரிந்து சென்று, அன்புடையோர் கூட்டத்தின்கண் கலந்து இயைவதாய், புணர்ந்து இன்பத்தைச் செய்தலின் அமிழ்தம் ஆகவும், பிரிந்து துன்பத்தைச் செய்தலின் அணங்கு ஆகவும் திகழ்வதாய், புலப்பட்டுத் தோன்றும் திறனில் கூத்தப் பெருமானின் பொன்னம்பலம் போன்று ஒளியையுடையதாய், என் மனத்தின் கண்ணே வந்து நிலை பெறுவதாய், ஆராயுங்காற் பெரிதும் மாயச் செய்கைகளை யுடையதாய் விளங்குகின்ற என்னுடைய உயிரானது, இதோ இங்குவந்து என் முன்னே நிற்கின்றது!

திருக்கோவையார் :

இப்பாடல் திருக்கோவையார் என்னும் நூலின்கண் வரும் சிறந்தசெய்யுட்களுள் ஒன்று. திருக்கோவையார் என்பது திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும் வழங்கும். இதனைப் பாடியருளியவர் மாணிக்க வாசகர். திருவாசகம் என்னும் செந்தமிழ்த் தெய்வப் பனுவலை அருளிச் செய்தவர் மாணிக்கவாசகர் என்று பொதுவாகப் பலரும் அறிவர். ஆனால் அவரே திருக்கோவையார் என்னும் மற்றொரு நூலையும் பாடியுள்ளார் என்பது, பெரும்பாலான பொது மக்களுக்குத் தெரியாது. சைவத் திருமுறைகள் பன்னிரண்டு. அவற்றுள் எட்டாம் திருமுறையாகத் திருவாசகம், திருக்கோவையார் என்னும் இரு பெரு நூல்களும் விளங்குகின்றன.

திருவாசகம் :

''திருவாசகமானது அழகிய இனிய பாடல்களினால், அறியாமை பேரவா முதலியஅடிமைத் தளைகளினின்று விடுபட்டு, அன்பு அறிவு என்பனவற்றின் உரிமை பெற்று முறை முறையே வளர்ந்து செல்லும் உயிரின் முன்னேற்றப் படிநிலைகளை, நன்கினிது விளங்கக் காட்டுகின்றது.

ஆன்மாக்கள் முதன் முதலாக அருளுணர்வுக்கண்கள் திறக்கப் பெறுதல், அதனாற் பிறக்கும் உவகை—பெருமிதம்—பலவகை மனநிலை அலைவுகள், செய்வகை யறியாத் திகைப்பு, உலகியலில் உழன்று தடுமாறும் போராட்டம், அமைதியற்ற தன்மை, இறுதியில் இறைவனை அடைந்து எய்தும் இன்பம், இறைவனோடு இரண்டறக் கலந்து நிற்கும் பெருமகிழ்ச்சியுணர்வு ஆகிய பலதிற உணர்ச்சிகளும், திருவாசகத்தின்கண் பளிங்கென விளங்கித் திகழ்கின்றன.'' *(1)*

திருக்கோவையார் சிறப்பு :

திருக்கோவையாரோ, திருவாசகத்தின் பொருளையே வேறொரு வகையில், சிறப்புற விளக்குவது. ஒரு வகையில் திருவாசகம் அன்புப் பெருநூல்; திருக்கோவையார் அறிவுப் பெருநூல் எனலாம். திருவாசகம் சைவ இயல் நூல்; திருக்கோவையார் தமிழியல் நூல். மாணிக்கவாசகர் தாம் ஈடேற இறைவனைப் பாடிய நூல் திருவாசகம்! உலகம் வாழ்தற் பொருட்டு மாணிக்கவாசகராற் பாடப்பெற்ற நூல் திருக்கோவையார்! திருவாசகம் பேரின்ப அநுபவ நூல்; திருக்கோவையார் பேரின்ப அநுபவத்தை நமக்குத் தெரிந்த சிற்றின்ப அநுபவ நிலையில் வைத்து விளக்கும் நூல்.

திருக்கோவையாரின்கண், மாணிக்கவாசகர் தாம் பெற்ற ஐம்பொறியளவின் மேம்பட்ட தூய கடவுளருளனுபவப் பேரின்ப உணர்ச்சிகளை, நம்மனோர் எளிய இனிய முறையில் உணர்தற் பொருட்டு, நமக்குக் கைவந்த ''கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும்'' காதலின்ப அநுபவ உணர்ச்சி நிலையின்கண் வைத்து விளக்கி யருளியுள்ளார். இங்ஙனம் கடவுளின்ப நலத்தின் பெற்றியினைக் காதலின்ப நலத்தினோடு ஏற்ற பெற்றி இயைத்து விளக்கும் திறனே, திருக்கோவையாரின் தலைசிறந்த சிறப்பியற் பண்பாகும். திருக்கோவையார் ஒன்றின்கண்தான், முதன் முதலாக இத்தகைய அழகிய புதியதொரு சிறந்த விளக்கத்தினை, நாம் காணப் பெறுகின்றோம். மாணிக்கவாசகர்க்கு முன்னரும் பின்னரும் எத்துணையோ பல புலவர்களும் சான்றோர்களும் காதலின்ப நலத்தையும், கடவுளின்ப நலத்தையும் குறித்துப் பாடியுள்ளனராயினும் அவர்களெல்லாம் நம் அருமை மாணிக்கவாசகப்பெருமானைப் போல, ''பேதையைக் காதல் காட்டிக் கை விடுக்க'' என்னும் நுட்பம் அறிந்து, ''கடுத்

(1) "Thiruvasagam depicts in beautiful hymns the progress of the soul from the bondage of ignorance and passion into the liberty of light and love, its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and the joy of union." —DR. S. RADHA KRISHNAN.

தின்னாதானைக் கட்டிபூசிக் கடுத் தீற்றும் நெறி'' (குளஜிஹ்வா நியாயம்) தழீஇக், காதலின்ப நலத்தையும் கடவுளின்ப நலத்தையும் ஒன்று சேர்த்து, ஒருங்கியைத்துப் பாடி, நமக்கு உய்யு நெறி காட்டி உணர்வு கொளுத்தக் காண்கின்றிலம். மாணிக்கவாசகரின் ''தேனூறு செஞ்சொல் திருக்கோவையார்'' ஒன்றுதான், நம்மனோர் உய்யும் நலங்கருதி, இத்தகைய வித்தகச் செயலை முதன் முதற் புதிது புரிந்து வழிகாட்டியுள்ளது! இங்ஙனம், திருக்கோவையாரானது காமச் சுவையையும் ஞானப் பொருளையும் ஒருங்கியைத்து விளக்கும் திறத்தினை, என்னென்பேம்!

அகப்பொருளில் அருட்பொருள் :

திருச்சிற்றம்பலக் கோவையாருக்குப் பல வகைச் சிறப்புகள் உண்டு. அவைகளுள் மிகவும் தலையாயது, சங்க காலப் புலவர்கள் பாடிய அகப்பொருள் ஆகிய உடலில், இறையியல் இன்பக் கருத்துக்கள் ஆகிய உயிரியல் அருட்பொருளும் பிரிவற விரவி, அழியா இன்ப அருங்கலைக் கவிதைப் படைப்பாகக் கவின் மிக்குத் திகழ்தலே யாகும். இங்ஙனம் திருக்கோவையார் அகப்பொருளில் அருட்பொருளையும் இயைத்திணைத்து விளக்கும் சிறப்பினை, ஒப்புயர்வற்ற தெய்வப் பெற்றிமை மிக்க அருட்பெருங் கவிஞர் ஆகிய குமரகுருபர அடிகளார்,

''கடங்கலுழ் கலுழிக் களிநல் யானை
மடங்கலந் துப்பின் மானவேல் வழுதிக்கு
இருநிலம் அதழ்ந்தும் எண்ணில்பல் காலம்
ஒருவன் காணாது ஒளித்திருந் தோயை,
வனசப் புத்தேள் மணிநாப் பந்திக்
கவனவாம் புரவியிற் காட்டிக் கொடுத்துப்
பைந்தமிழ் நவின்ற செந்நாப் புலவன்
ஐந்திணை யுறுப்பின் நாற்பொருள் பயக்கும்
காமம் சான்ற ஞானப் பனுவற்குப்
பொருள் எனச் சுட்டிய ஒரு பெருஞ் செல்வ''
-சிதம்பர மும்மணிக்கோவை.

என வியந்து மொழிந்து புகழ்ந்திருத்தல் காணலாம். தம்முள் ஒன்றினொன்று சாலவும் முரண்பட்ட அகப்பொருளும் அருட்பொருளும்,(காமச் சுவையும், ஞானச் செய்தியும்) ஆகிய இரண்டையும் இணைத்தியைத்து, முதன் முதலாக வியத்தகு முறையிற் பாடிக் காட்டிய சிறப்புடைமை குறித்தே, இதனைக் ''காமஞ் சான்ற ஞானப் பனுவல்'' எனக் குமரகுருபர சுவாமிகள் போற்றிப் புகழ்வராயினர்.

உலக நூல் வழக்கும், அறிவன் நூற் பொருளும் :

அதற்கு ஏற்ப, இன்று தமிழில் எத்துணையோ பலப்பல கோவை நூல்கள் பாடப் பெற்றுள்ளன எனினும், அவைகளுள் எல்லாவற்றுள்ளும் முதன்மையும் பெருமையும் மிக்குத் திகழ்வது மாணிக்கவாசகர் அருளிச் செய்த திருக்கோவையார் ஒன்றேயாகும். இதன்கண், உலக நூல் வழக்கும் அறிவன்நூற் பொருளும் ஒருங்கே சிறப்புற இயைந்து திகழ்கின்றன.

குறிஞ்சி—சாக்கிரம்; பாலை—சொப்பனம்; முல்லை—சுழுத்தி; மருதம்—துரியம்; நெய்தல்—துரியாதீதம்; தலைவன்—கடவுள்; தலைவி—ஆன்மா; தோழி—திருவருள்; தோழன்—ஆன்ம போதம்; செவிலி—திரோதானசத்தி; நற்றாய்—பராசத்தி என அகப் பொருட் செய்திகள், அருட்பொருட் குறிப்புகள் அமையும் வகையில் பாடப் பெற்றிருத்தலை, ஊன்றிக் கற்பவர் யாவரும் உணரலாம்.

கோவை நூல்கள் எல்லாவற்றிலும் மிகவும் பழமையும் முதன்மையும் வாய்ந்து சிறந்தொளிர்வதும், பிற்காலத்தில் தோன்றிய கோவை நூல்களுக்கெல்லாம் மேல்வரிச் சட்டமாக அமைந்து வழிவகுத்துக் கொடுத்ததும் ஆவது திருக்கோவையார்! ''பெற்றின்ப சிற்றின்பமே பேரின்பமாய் அங்கே முற்றவரும் பரிசு'' தோன்றுமாறு, தம்முள் ஒன்றினொன்று சாலவும் முரண்பட்ட, காமச் சுவையும் ஞானப் பொருளும் ஆகிய இரண்டையும் இணைத்தியைத்து,

''திருவாத வூர்மகிழ் செழுமறை முனிவர்
ஐம்பொறி கைஇகந்து அறிவாய் அறியாச்
செம்புலச் செல்வர் ஆயினர், ஆதலின்
அறிவன்நூற் பொருளும் உலக நூல் வழக்கும் என்று
இருவகைப் பொருளும் நுதலிப் போந்தனர்.''

என அறிஞர்கள் பாராட்டும் வகையில், அகப்பொருளில் அருட்பொருளும் அமையும்வண்ணம் மாணிக்கவாசகரால், அஃது அருளிச் செய்யப் பெற்றிருக்கும் அருமைப்பாட்டினைத் 'தாலி புலாக நியாயம்' பற்றி, இச்செய்யுளால் ஒரு சிறிது உணர முயல்வோமாக!

உயிர் என வியத்தல் :

அகப்பொருள் நூல்களில் ''உயிர் என வியத்தல்'' என்பது ஒரு துறை. தலைவன் ஒரு பொழிலின்கண் தலைவியைக் கண்டுகூடி, இன்பச் சிறப்பும் பிரியலாகாமையும் கருதி, அவளைத் தன் உயிர் எனப் பாராட்டி மகிழ்வதாகப் பாடப்பெறுவது, அவ் வகத் துறைக்குரிய பொருள் ஆகும்.

''காணா மரபிற்று உயிர்என மொழிவோர்
நாணிலர் மன்ற பொய்ம்மொழிந் தனரே!

யாஅம் காண்டும்எம் அரும்பெறல் உயிரே!
சொல்லும் ஆடும்! மென்மெல இயலும்!
கணைக்கால் நுணுகிய நுசுப்பின்
மழைக்கண் மாதர் பணைப்பெருந் தோட்டே''
—தொல், களவியல்

என்பது, இவ்வகப் பொருள் துறைக் கருத்து அமைந்த சிறந்ததொரு பழைய செய்யுள் ஆகும். இதனைத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் மேற்கோளாக எடுத்தாண்டுள்ளனர்.

''உயிரானது கண்ணாற் காணமுடியாததென்று சிலர் வெட்கம் இல்லாமல் பொய் கூறுகின்றார்கள். யான் என்னுடைய பெறுதற்கரிய உயிரை என் கண்களால் நேரே காண்கின்றேன். இது நன்றாகப் பேசுகின்றது. மென்மையுற நடக்கின்றது. கணைக் காலையும், சிறிய இடையினையும், குளிர்ந்த கண்ணை

யும், அழகிய மூங்கில் போன்ற பெரிய தோள்களை யும் உடையதாக இருக்கின்றது''

என்று தலைவன், தன்னுடைய தலைவியினைத் தனக்கு இனிய உயிர் என்று குறிப்பிட்டுப் புகழ்ந்து பாராட்டி மகிழ்கின்றான். இப்பாட லின் கருத்தை ஒட்டியே, மேலே குறித்த திருக் கோவையார் செய்யுள் அமைந்திருக்கின்றது.

''அன்புடன் நேற்று என்னைக்கூடி, பின்னர் என் மனம் வருந்தும்படி பிரிந்து சென்று, தோழியர் கூட்டத்தைச் சேர்ந்து, எனக்கு இன்பமும் துன்ப மும் ஒருங்கே விளைவித்து, என் நெஞ்சில் நிலைபெற்று விட்ட என் உயிர், இதோ வந்துவிட்டது''.

எனத் தலைவியின் வருகைக்காகக் காத்துக் கொண்டிருந்த தலைவன், அவளைத் தன் உயி ரினும் மேலானவளாகப் புகழ்ந்து மகிழ்ந்து சொல்லுகின்றான்.

நேயத்த தாய், நென்னல் என்னைப்
புணர்ந்து நெஞ்சம் நெகப்போய்
ஆயத்த தாய், அமிழ் தாய், அணங்காய்,
அரன் அம்பலம்போல்
தேயத்த தாய், என்றன் சிந்தைய தாய்த்,
தெரியிற் பெரிதும்
மாயத்த தாகி, இதோ வந்து நின்றது
என் மன்னுயிரே.

—திருக்கோவையார்.

எனத் தலைவன் கூற்றாகவரும் இச்செய்யுளில், மாணிக்கவாசகர் தமக்கு உயிர்க்குயிராய் விளங்கும் சிவபெருமானின் திருவருட் செயல் களைப் பற்றிய குறிப்பும், அமையப் பாடியருள் கின்றார்.

''என்பால் அருள்மிகுந்து, முன்னர் என்னைத் திருப் பெருந்துறையில் ஆட்கொண்டு, பின்னர் என் நெஞ்சம் கலங்கி வருந்தும்படி, 'நீ தில்லைக்கு வருக' எனக் கூறி அடியவர் திரளுடன் பிரிந்து சென்று, நினைக்குந்தோறும் அமிழ்தம்போல இன்பம் செய்து, கட்புலனாகாது மறைந்து நிற்றலின் துன்பம் செய்து, பொன்னம்பலம்போல ஒளிமிகுந்து, என் சிந்தை யிற் பிரிவற நிலைபெற்று, இங்ஙனமெல்லாம் திரு விளையாடல்கள் நிகழ்த்துதலால் மாயத் தன்மை வாய்ந்து, என்னை இயக்கி ஆட்டிவைக்கும் என் உயிர்க்குயிர் (சிவம்), இதோ வந்து தோன்றா நிற் கின்றது''.

என வேறொரு சிறந்த பொருளும், இச்செய்யுட் கண் அமைந்து விளங்குதல் காணலாம்.

முடிவுரை :

இங்ஙனம் உலகியற் பொருளும், தத்துவ அருளியற் பொருளும் ஒருசேர அமைந்து விளங் கும் சிறப்பு வாய்ந்த திருக்கோவையார் நூலின் அருமை பெருமைகளை, நாம் அனைவரும் உணர்ந்து நன்கினிது போற்றிப் பயின்று உய்ய முயலுவோமாக!

(வெண்பா)

அகப்பொருளில் தூய அருட்பொருளும் தோற்றி
மிகப்பொலிந்து நன்றே விளங்கித்-தகப்பெரிதும்
செந்தமிழ்ச்சீர் சான்ற திருக்கோவை யார்சிறப்பை
எந்தவகை யிற்புகழ்கேம் யாம்! (1)

காதல் உணர்வைக் கடவுள் உணர்ச்சியொடு
தீதறச்சேர்த் துக்கோவை செய்தளித்து,—ஓதுலக
மக்களெலாம் உய்யவைத்த மாணிக்க வாசகர்தாள்
எக்காலும் போற்றியுய்வாம் யாம். (2)

—ந. ரா. முருகவேள்.

கவிதை இன்பம்

அரியநல் இயற்கை அழகினை ஆராய்ந்து
அகங்களித்து இன்புறு வோர்க்கும்,

மருவும்இவ் வாழ்க்கை மறைபொருள் பலவும்
மதித்துணர் அறிஞர்கள் தமக்கும்,

விரிவுறு சமய மெய்யுணர் வொளியில்
விரும்பிமேன் மேற்படர் பவர்க்கும்,

திருவருள் ஒழுக்கம் செறிந்தது ஊயவர்க்கும்,
சிறந்தநற் கவிதையே இன்பாம்! ✱

—தமிழாக்கம், **ந. ரா. முருகவேள்**

✱ "To a mind brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an intellect diving deep into the mysteries that lie in the innermost corners of life, to a soul soaring high into the ethereal regions of religion and philosophy, to a spirit seeking moral sanctity and divine grace nothing appears so permanently beautiful and so certainly impressive, as the study of a fine piece of poetry".

—**Maraimalai Adigal**

ஆசியுரை

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக பரமாசாரிய சுவாமிகள்,,

தருமையாதீனத் தலைவர்,

''ஞாலம் நின்புகழே மிகவேண்டும் தென்
ஆலவாயில் உறையும்எம் ஆதியே''

—திருஞானசம்பந்தர்.

இறைவன் திருவருளைப் பெறுதற்குப் பெரியோர் வகுத்த நெறிகள் சமயங்கள் எனப்படும். சமயங்கள் அனைத்தும் உலகில் மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கும் முடிவில் பேரின்பப் பெருநிலையைப் பெறுதற்கும் துணை புரிகின்றன.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே''

என்பது தொல்காப்பியத்தில் ஒரு நூற்பா. 'சொற்கள் அனைத்தும் பொருள் உணர்த்துவனவே ; பொருளுணர்த்தாத சொற்கள் சொற்கள் எனப்பெறு' என்பது இந்நூற்பாவின் கருத்து. அதுபோல எல்லாச் சமயங்களும் மக்களுக்கு நல்லனவற்றைத் தெரிவிக்கவே அமைந்துள்ளன. ஆறுகள் அனைத்தும் முடிவில் கடலைச் சென்றடைதல் போல, அனைத்துச் சமய நெறிகளும் கடவுளை அடைதலையே முடிவாகக் கூறுகின்றன.

உலக அரங்கில் நம் நாடு ஆன்மீகத் துறை வளர்ச்சியில் சிறந்து விளங்குகிறது. இந்திய சமயங்களில் புத்தம், சமணம், மீமாஞ்சை, சாங்கியம், அத்வைதம், வைணவம், சைவம் ஆகியன சிறந்தனவாம். இவற்றுட் சில மதங்கள் உலக நாடுகள் பலவற்றிலும் பரவி வளர்ந்துள்ளன. சில மதங்கள் வழக்காறற்றன. சில மதங்கள் இந்திய நாட்டில் மட்டும் வேரூன்றித் திகழ்கின்றன. உயிர்கள் மறு பிறப்பு அடைகின்றன என்பதும், ஊழ்வினையால் இன்பத்துன்பங்களைப் பெறுகின்றன என்பதும், பிறப்பு இறப்புக்களினின்று நீங்கி வீடுபெறுகின்றன என்பதும், இந்திய சமயங்களிடையே காணப்படும் பொதுவான ஒற்றுமைக் கருத்தாகும்.

வழிபாட்டு முறைகளிலும் கோட்பாட்டு முறைகளிலும் —ஒன்றோடொன்று வேறுபட்டாலும் சமயங்களனைத்தும் படிநிலைகளாக மக்களின் பல்வேறு இயல்புகளுக்கும் சூழ்நிலைகட்கும் ஏற்றவாறு வேண்டப்படுவனவேயாம். கல்வித் துறையில் குழந்தைப் பள்ளி முதல் பல்கலைக்கழக ஆய்வுக்கூடம் வரை உள்ள கல்வி நிலையங்கள், மக்களின் அறிவு வளர்ச்சிக்குத் தக்கவாறு வேண்டப்படுதல் போல ஆன்மீக வளர்ச்சித் துறையிலும் எளிய முறையில் அறவுரை கூறும் சமயம் முதல் அரிய நிலையில் தத்துவம் போதிக்கும் சமயம் வரை அனைத்துச் சமயங்களும் உயிர்களின் ஈடேற்றத்துக்குப் படி முறையில் உதவி புரிவனவேயாம்.

சிவபிரான் ஒருவரே முழுமுதற் கடவுளாவார் என்பதும், அவர் உலகங்களைப் படைத்துக் காத்து அழிப்பது உயிர்களிடத்துள்ள ஆணவ மலத்தைப் போக்கி அவைகளுக்குப் பேரின்பத்தைக் கொடுத்தற் பொருட்டேயாகும் என்பதும், சைவ சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளாகும்.

எளிய நிலையில் அறங் கூறுவது முதல், அரிய நிலையில் தத்துவ விளக்கம் கூறுவது வரை அனைத்துச் சமயக் கருத்துக்களையும் தன்னகத்தே கொண்டு திகழ்வது சைவம் என்பதை வேத ஆகம புராண இதிகாசத் திருமுறைகள் தெளிவிக்கின்றன.

இவ்வாறு ஒவ்வொரு சமயமும் மக்கள் மனம் பண்படவும் உயிர்கள் ஈடேற்றம் பெறவும் ஒரு சில உண்மைகளைத் தெரிவிக்கின்றன.

இன்றைய நிலையில் சமயச் சான்றோர்கள் தங்கள் தங்கள் சமயங்களைச் சிறப்பு நிலையிலும் ஏனைய சமயங்களைப் பொது நிலையிலும் வளர்க்கக் கடமைப்பட்டவராவர்.

சமய நெறிகள் சமுதாய வளர்ச்சிக்கு மிகவும் வேண்டப்படுவன. சட்டத்தால் சாதிக்க முடியாத கட்டுப்பாடுகளையும், ஒழுக்க நெறிகளையும், ஒற்றுமை உணர்வினையும் சமயம் உருவாக்குகிறது ; கலை, நாகரிகம், பண்பாடுகளை வளர்க்கிறது. உடலுக்கு உயிர்போல உலகிற்குச் சமயம் இன்றியமையாததாக விளங்குகிறது. மக்களை மக்களாக வாழ்விப்பதோடு தெய்வநிலைக்கும் உயர்த்துவது சமயம் ஆகும்.

இவ்வாறு உலகம் முழுதும் பரவி வளரும் சமயங்களிடையேயுள்ள பொதுமை நெறிகளை மக்கள் உணரும் வகையில் உலக சமய கலாசார தத்துவ மாநாடு, பழம்பெருமையும் புதுப் பொலிவும் உடைய மதுரை மாநகரில் நிகழ்வது பாராட்டுதற்குரியது.

காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி அவர்கள் முன்னிலையில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் தலைமையில் மேதகு நேபாள மன்னர் அவர்களால் தொடங்கி வைக்கப்பெறும் இம் மாநாடு சிறந்த பயன்களை விளைவிப்பதாக.

மாநாட்டில், மதுரையாதீன மகாசந்நிதானம் அவர்களும், குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீன மகாசந்நிதானம் அவர்களும், திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடத்து அதிபரும் மற்றும் உலகப் பேரறிஞர் பலரும் கலந்து கொள்வது மகிழ்ச்சிக்குரியது.

மாநாடு சிறப்புற நிகழவும், சமய நெறி தழைத்து வளரவும், உலக மக்கள் அனைவரும் சமய ஒருமைப்பாட்டுணர்வுடன் உயர் நலம் பலவும் பெற்று இனிது வாழவும் ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றோம்.

வாழ்க அந்தணர், வானவர், ஆனினம்;
வீழ்க தண்புனல்; வேந்தனும் ஓங்குக;
ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே
சூழ்க; வையகமும் துயர் தீர்வே.

—திருஞானசம்பந்தர். (திருச்சிற்றம்பலம்)

* மதுரை மாநகரில் (30-3-77 முதல் 5-4-77 முடிய) நடைபெற்ற, உலக சமய கலாசார தத்துவ மாநாட்டிற்கு அனுப்பிய அருளிய ஆசியுரை, இங்கு வெளியிடப் பெறுகின்றது. —ஆசிரியர்.

காஞ்சி காமகோடி பீடம் ஸ்ரீ ஆசாரிய சுவாமிகளின் அருளுரைகள்



1) மனிதன் மனிதனுக வாழ வேண்டும் :

''இந்த லோகம் எத்தனையோ கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. அந்த நாளிலிருந்து மனிதனும் தோன்றியிருக்கிருன். மனிதன் தோன்றியது முதல் அவனுக்குத் தலைவலி, வயிற்றுவலி உண்டு. அப்படிச் சங்கட முண்டாகும்போது கைகொடுக்கச் சமயம் உண்டானது. கஷ்டங்கள் தோன்றும்போது அதைத் தோற்கடிக்க, காலம் காலமாக மதம் தான் உதவியுள்ளது. அவனுக்கு ஏற்படும் சங்கடங்களைத் தீர்த்து வைக்க மதங்கள் உதவிய மாதிரி, வேறு எதுவும் அவனுக்கு உதவியதில்லை. உலகில் உள்ள மனிதர் யாவரும் ஏதாவது ஒரு மதத்தைச் சேர்ந்தவராயிருப்பர். இந்த மாதிரி வாழ்ந்தால் குறைந்த அளவு துக்கத்துடனும், நிறைந்த அளவு சந்தோஷத்துடனும் இருக்கலாமென்ற வழியை, மதங்கள் போதிக்கின்றன.

சிலர், வயிற்றுப்பாட்டிற்கே கஷ்டப்படும் போது மதம் எதற்கு? என்று கூறலாம். இந்தியா பூராவும் நானும் சுற்றி வந்திருக்கிறேன். ஏராளமான மக்களைப் பார்த்திருக்கிறேன். குடிசையில் வாழும் மக்களிடம் உள்ள மதப்பற்ருே, சமயப் பற்ருே வேறு எங்கும் காணமுடியாது. நாகரிகமாயுள்ள மக்களுக்குத்தான் மதபோதனை தேவைப்படுகிறது. கிராம மக்களிடையே மதப் பற்று நன்ருக உள்ளது. சந்தர்ப்ப வசத்தால், சூழ்நிலை காரணமாக, மத நம்பிக்கை ஓரளவு குறையலாம். சூழ்நிலை நன்ருயிருந்தால் எல்லோரிடமும் மத நம்பிக்கை மிகுந்து காணப்படும். இது உலகைப் பார்ப்பவர்களின் உள்ளப் பாங்கைப் பொறுத்தது. கெடுதலிலும் நல்லதைத் தருமர் கண்டார். நல்லதிலும் கெடுதலைத் துரியோதனன் கண்டது அவனது மன நிலையைப் பொறுத்ததாகும்.

மாமிச வியாபாரம் செய்து ஜீவனம் செய்யும் ஒருவனை, அவர்கள் இருவரும் பார்த்தனர். பிராணி இம்சை செய்கிருனே என்று ஒரு நொடி தருமர் நினைக்கிருர். அந்த வியாபாரி முதலில் ஓரளவு இறைச்சியை எடுத்துத் தெருவிலும், கூரையிலும் போட்டுப் பட்சிகளுக்கும், பிராணிகளுக்கும் உணவளித்து விட்டு, வியாபாரத்தைத் தொடங்குவதைப் பார்த்ததும், அவன் செய்யும் தொழில், கெடுதலாகத் தருமர் கண்ணிற்குப் படவில்லை. அப்படி ஒரு நொடி அதர்மச் செயல் என்று எண்ண நேர்ந்தது கூட, துரியோதனன் பக்கத்தில் இருந்தது காரணமாக இருக்கலாம்.

எனவே மனித வாழ்வில் சூழ்நிலை நல்லதாக இருக்க வேண்டுமென்பது அவசியமாகும். கெடுதல் குறைவாகவும் நல்லது அதிகமாகவும் உள்ளவற்றை வைத்துக் கொள்ள வேண்டும். கடவுள் பக்தியுடன் இருப்பது தவிர, வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய வழிகளைச் சொல்லும் மதநூல்களில் நம்பிக்கை கொண்டு, அவற்றைப் பின்பற்ற வேண்டும். அதற்கு விரோதமாகப் போகக் கூடாது. எந்த அளவு அவற்றிலிருந்து விலகிச் செல்லலாமென்பதையும் அந்நூல்கள் கூறுகின்றன. அந்த அளவிற்குள் வாழ்ந்தால் போதும். மனிதன் தேவனுக வேண்டுமென்பதில்லை. ஆனல் மனிதன் மனிதனுக வாழ்ந்தால் கூடப் போதும். அதிலேயே எல்லாவித இன்பங்களையும் பெற முடியும். மனிதப் பிறவி கடைசிப் பிறவி. மனிதராய்ப் பிறப்பதரிது என்று பெரியோர் கூறுவர். இப்பிறப்பிலேயே கடவுள் அருளை அடைய வேண்டும்.

2) கீதை போதிக்கும் தர்மம் :

எல்லா மதத்திற்கும் ஒரு நூல் உண்டு. இந்து மதத்திற்கு நூல் எதுவென்ருல் பதில் சொல்ல முடியாமல் திகைக்கின்றனர். இந்து மதத்திற்கு அதைச் சேர்ந்தவர்கள் எத்தனை

---

* மதுரை மாநகரில் 30—3—77 முதல் 5—4—77 முடிய நடைபெற்ற ''உலக சமய மாநாட்டில்'', நாள்தோறும் காஞ்சி காமகோடி பீடாதிபதி **ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்** அவர்கள், ஆற்றிய அருளுரைகள், இங்குச் சுருக்கமாகத் தொகுத்து வெளியிடப் பெறுகின்றன. —**ஆசிரியர்.**

ரங்கள் கணக்கில்லை. ஆனால் கீதையில் அர்ஜு னனைச் சாக்காக வைத்துக் கண்ணன் மனிதன் கடைப்பிடிக்க வேண்டிய தர்மங்களைக் கூறு கிறார்.

என்னிடத்தில் மனதைச் செலுத்து என் கிறார். மனம் என்ன லேசில் கட்டுப்படக் கூடியதா? அலை பாய்கிறது. மனதை அடக்கு வது சிரமமான காரியமாயுள்ளவர்கள் கோவி லுக்குப் போகலாமென்றால், அங்கும் உலக விசாரணையில் ஈடுபட நேரிடுகிறது. ஆகவே எளிதாக ஒரு வழியைச் சொல்கிறார். சாஷ் டாங்கமாக உடல் முழுதும் தரையில்படும்படி, நமஸ்காரம் செய்தால் போதுமென்கிறார். ஆதி சங்கரர் எல்லா அங்கங்களும் தூங்கும்போது தரையில் படுமாதலால், அதையே தனது சாஷ் டாங்க நமஸ்காரமாக எடுத்துக் கொள்ளும்படி, இறைவனை வேண்டுகிறார். தண்டம் என்றால் குச்சி. அது தரையில் விழும்போது எல்லாப் பாகங்களும் தரையைத் தொடும். அதனாலேயே தண்டம் சமர்ப்பித்தல் என்கின்றனர். எவ்வ ளவோ காரியம் செய்யும் இந்த உடல் தண்டம் போன்றது தான். அதனால் அதை இறைவ னுக்குச் சமர்ப்பித்துச் சரணமடைந்து, மன தால் ஒரு வினாடி கடவுளை நினைக்கச் சொல் கிறார். இதிலும் ஆத்ம பூஜைக்கு முக்கியத்து வம் கொடுத்தார்.

மத அடிப்படையில் வெளிப்படையாகச் செய்யும் காரியங்கள் எல்லாம், ஆத்மசுத்திக்கு ஒருவனை அழைத்துச் செல்வதாகும். வாழ்க் கையில் மனிதன் உயர் மட்டத்தை அடைய மதங்கள் வழி கூறுகின்றன. எங்கும் ஒரே பரமாத்மாவைக் காணும் நிலை கடைசியில் ஏற் படும்.

3) முரண்பாடில்லை :

எல்லா மதங்களும் மனிதனை உயர்த்தும் படிக்கட்டுக்கள் போன்றவை. அவை ஒன்றுக் கொன்று உபகாரமாக இருக்குமே தவிர, சண்டைபோட ஏற்பட்டதில்லை. மத நூல்கள் அடிப்படையில் வேறுபாடு எதுவுமில்லை. அவற் றை வியாக்கியானம் செய்வதில்தான் முரண் பாடு ஏற்படுகிறது. நெற்றியில் விபூதி, திரு மண், திலகம் இடுபவர்கள் எல்லாம் பந்துக் கள் என்று ஆதிசங்கரர் கூறுகிறார். மூன்று உலக மும் நமது நாடு என்கிறார். அத்தகைய பரந்த உள்ளமும், மத அடிப்படையில் ஒருமைப்பாடும், சமயப்பற்றும், எல்லோரிடமும் ஏற்படவே இந்த மாநாடு நடத்தப்படுகிறது.

பகவான் அனுக்கிரகத்தை அடைய மனிதப் பிறவி கிடைத்துள்ளது. அவர் தொடர்பில்லா மல் எந்தக் காரியமும் நடப்பதில்லை. மின்சாரம் எப்படி மைக், விளக்கு போன்ற எல்லாவற்றி லும், ஒரே சமயத்தில் ஊடுருவி இருக்கிறதோ, அதுபோல் பகவான் எல்லாவற்றிலும் ஊடுருவி யுள்ளார். பகவானைச் சரணடையும்போது மனோ, வாக்கு, காயம் மூன்றிலும் சரணடை வதே சிறந்தது. அத்தகைய நிலை ஏற்படுகை யில் பரிபூர்ணமான சாந்தி கிடைக்கும். நல்லது நடக்கையில் அதற்குத் தான்தான் காரண மென்று நினைப்பது சகஜம். அப்படியில்லாமல், இரண்டும் பகவானால்தான் நடத்தப்படுகிற தென்று உணர்வு, ஏற்படவேண்டும். அதற்கு வழி ஏற்படுத்துவதே மதம். அசைக்க முடி யாத நம்பிக்கையுடன் கடவுளிடம் பக்தி செலுத்த வேண்டும். நாம் அனைவரும் பகவா னின் குழந்தைகள் என்பதை உணர்ந்து, அன்பு டனும் மதப்பற்றுடனும் வாழ்ந்தால், மன அமைதி கிடைக்கும். அனாதி காலமாகக் காத்து வரும் மதம், நம்மைக் கைவிட்டு விடாது. சமயப் பற்றுடன் சேர்ந்த கடவுள் பக்தியை, எல்லோரும் வளர்த்துக் கொள்ள வேண்டியது அவசியம். நமது கலாசாரம் என்ன என்பது கூட, நமக்குத் தெரியாத நிலை உள்ளது. பிராணிகளாவது ஒரு நிமிடம் நின்று சாப்பிடும். நமக்கு அதற்குக் கூட நேரமில்லை. இந்த நிலை மாறி நமது கலாசாரப் பழக்க வழக்கங்களைப் பின்பற்றினால், நமது தேசம் நன்றாயிருக்கும். இதை அரசு செய்ய முடியாது. அரசியல் வாதிகளோ, அரசாங்கமோ, இது ஏற்பட உதவி யாயிருக்கலாம். ஆனால் தனி மனிதன் ஒவ்வொ ருவரும் மாறுவதன் மூலமே, சமுதாயம் முழு தும் மாறுபடும். மதத்தை விட்டுக் கலாசாரம் தனியாயிருக்க முடியாது. கலாசாரமில்லாத மதமில்லை. தத்துவமில்லை. சமயப்பற்றினால் கலாசார வழியினால், தான் ஒன்றாயிருக்க வேண்டும். அப்போது பிரச்னைகள் குறையும். தேசம் சுபிட்சமாயிருக்கும்.

4) இந்துமதத்தின் விசேடத் தன்மை :

நேபாளத்திற்குச் சென்றிருந்தபோது, 15 நாள் தங்கியிருந்தோம். கதைகளில் படித்த ராஜாராணி, நேபாள நாடு ஒன்றிலேயே இன்னும் இருப்பதைக் காணலாம். சந்நியாசி ஆசைப்படக் கூடாது. ஆனால், எனக்கு ஒரு ஆசை ஏற்பட்டது. இன்றும் அரசாளும் பரம் பரை ராஜாவைக் கொண்டு, இந்த மகாநாட் டைத் துவக்கி வைக்க வேண்டுமென்று நினைத் தேன். அவரும் வந்துள்ளார். நேபாளம் தான், உலகிலேயே நமது சகோதர நாடாக விளங்குகிறது. எந்த நிமிஷமும் நமக்குக் கைகொடுப்பவர்களாயிருக்கிறார்கள். அங்கு தெய்வ பக்தி, தேச பக்தி, சத்திய வாழ்க்கை நிலவுகிறது. அந்த நாட்டு அரசரைக் கொண்டு சமய வளர்ச்சி மகாநாட்டை நடத்தினால், நமது நாடும் வளரும் என்ற எண்ணம்! இன்னும் அவரது நாட்டின் கொடியில் சூரிய, சந்திரர் கள்தான் சின்னமாக உள்ளது. கோவில்களில் சாசனம் எழுதும்போது, ''சூரிய, சந்திரர் உள்ளவரை'' என்று எழுதுவார்கள். உலகிற் கெல்லாம் ஆத்ம சாந்தி அளிக்கக் கூடியதென்று கூறப்படும் நம் நாட்டிற்குக் கூட, இல்லாத பெருமையுடைய கொடி அங்கு இருக்கிறது. அங்கு சனிக்கிழமைதோறும் மக்கள் அனைவரும் கோயில்களுக்குச் சென்று வணங்குகின்றனர். ஆனால், நாம் வாரம் ஒரு முறை சினிமாவிற்குத் தான் போகிறோம். தவறாமல் நாம் அனைவரும் கோயிலுக்குச் செல்லும் பழக்கத்தை ஏற்படுத் திக்கொள்ள வேண்டும். உலகம் வாழ வேண்டு மென்றும், எல்லா மக்களும் க்ஷேமமாயிருக்க வேண்டுமென்றும் வாழ்த்துவதே, இந்து மதத் தின் முதல் பிரார்த்தனையாக உள்ளது. நாம் என்ற சொல்லில், நானும் அடங்கிவிடுமென்

படுதே இதன் பொருள். யார் யார் எந்த மதத்தைச்சேர்ந்தவராயிருந்தபோதிலும், எந்த நாட்டிலிருந்தாலும் அவர்கள் சௌக்கியமா யிருக்க வேண்டுமென்று பிரார்த்திப்பதே இந்து மதத்தின் முதல் பிரார்த்தனையாக உள்ளது. இதுவே இந்து மதத்தின் விசேடத் தன்மையாகும்.

5) கடவுள் பக்தி :

இங்குப் பல சொற்பொழிவுகள் ஆங்கிலத் தில் நடைபெறுகிறது. சிலருக்குப் புரியும். பலருக்குப் புரியாமலிருக்கலாம். அவரவர்கள் சன்மார்க்கத்தில்போகும் வழி பற்றி ஆராய்ச்சி செய்து, தாங்கள் கண்டுள்ள முடிவுகளைக் கூறி னர். ஐந்து பேர் பேசினால் ஐந்து வித அபிப்பி ராயம் இருக்கும். அவை பாமரர் மனதில் சற்றுக் குழப்பத்தை ஏற்படுத்தலாம். ஆனால் ஒன்றே பரம்பொருள்என்பதில் அவர்களிடையே வித்தியாசம் கிடையாது. இந்து சமயத்தில் எத்தனை விஷயங்கள் உள்ளனவோ, அத்தனைக் கும் நூல்கள் உள்ளன. பிரதானமான நூல் பெரிதாயிருக்கும். அதில் ஒன்றைப் படித்துக் கிரகித்துக் கொள்ள ஆயுள் போதாது. அப்படி எல்லா விஷயங்களுக்கும் நூல்கள் உள்ளன. ஆகவே நாம் கற்றது கைம்மண் அளவுதான். கல்லாதது மலையளவு இருக்கும். வாழ்க்கையில் தெரிந்துகொள்ள வேண்டியது நிறைய உள்ளது. எந்தச் சமயத்திற்கும் பரம்பொருள், பரமாத் மா உண்டு. அதை அடைவதற்கான வழிகள், வெவ்வேறு போல் இருந்தாலும் வழி தப்பான தில்லை.

போவோர் வழியைச் சரியாகத் தெரிந்து எடுத்து ஜாக்கிரதையாகப் போக வேண்டும். ஓரத்தில் போய்த் தவறி விழுந்துவிட்டு வழி மீது தப்புச் சொல்லக் கூடாது. ஓரத்தில் போனால் சங்கட முண்டாகும்.

ஆண்டு தோறும் மதுரையில் சித்திரைத் திருவிழா நடைபெறுகிறது. லட்சக் கணக்கா னவர் வருகின்றனர். அவர்களில் 10,000 பேரோ, 15,000 பேரோ படித்து விஷயம் தெரிந்தவராயிருக்கலாம். வருபவர்களிற் பெரும் பகுதியினருக்குத் திருவிழா நோக்கம் ஒன்றுமே தெரியாது. இருந்தாலும், அவர்கள் தீவிரமான கடவுள் பக்தியுடன், அவருக்குச் சேவை செய்யத் தண்ணீர் தெளித்தல் போன்ற வற்றைச் செய்கின்றனர். இதுவும் ஒரு வகைப் பக்தியே யாகும்.

இறைவனை நினைத்துச் செய்யும் எந்தக் காரியத்திற்கும் பயன் உண்டு. அறியாமல் செய்தால்கூட அதற்கும் பயன் உண்டு. இன்று நாம் பல காரியங்களைச் செய்கிறோம். அது எதற்கென்று நமக்குப் புரியாதிருக்கலாம். சில வற்றின் அடிப்படை புரிந்துமிருக்கலாம். புரியாத விஷயங்களைத் தெரிந்து கொள்ளச் செய்யும் முயற்சியே ஆராய்ச்சியாகும்.

நாகரீக ரீதியில் இன்று விஷயங்கள் தேவை யில்லாதது போல் தோன்றலாம். அவை உண் மையிலேயே தேவையற்றுமிருக்கலாம். ஆனால் அவற்றின் அவசியத்தை ஆழ்ந்து சிந்தித்து ஆராயாமல் ஒதுக்கக் கூடாது. சமுதாயத்தில் பழக்கத்தில் உள்ளதை வைத்துக் கொண்டு, மெதுவாகப் புரிய வைத்து மாற்ற வேண்டும். தற்காலத்திற்குத் தேவையானதும், எந்தக் காலத்திற்கும் பொருத்தமானதுமான வழியில் செல்ல வேண்டும். அது கடவுள் பக்தியொன்று தான். அரசியல் வாழ்வில் கூட காந்திஜி ராம நாமத்தைக் கூறச் சொல்லி ஆரம்பிப்பார். இது மாலை வேளை. காலை, மாலை இரண்டு வேளை களிலும் கடவுளைப் பூஜிக்க வேண்டும்.

இந்து மதத்தில் பல சாஸ்திரங்கள் உண்டு. ஒவ்வொரு சாஸ்திரத்திற்கும் பல பிரிவு உண்டு. தர்க்க சாஸ்திரம், சாங்கிய சாஸ்திரம் என்று சகல விஷயங்களைப் பற்றியும், சாஸ்திரங்கள் உள்ளன. இவை எல்லாவற்றிற்கும் மூலமானது வேதம். வேதம் இறைவனை அடைவதைப் பற்றி மட்டுமல்லாமல் வாழ்க்கையில் கடைப் பிடிக்க வேண்டிய வழிகளையும் கூறுகிறது. சாஸ்திரங்கள் அனைத்தும் வெவ்வேறாகத் தோன் றினாலும், ஒன்றுக்கொன்று தொடர்புள்ளன. அவைகள் ஆத்மதத்துவத்தை அடையச் சாதக மாக இருக்கும். எல்லாச் சாத்திரங்களும், தத்துவங்களும், கடவுள் பக்தியை மிகவும் வற்புறுத்துகின்றன.

6) சமய, கலாசார, தத்துவம் :

ஆத்மசொரூபத்தை அடைவது லட்சியம். அதற்கு அனேக வழிகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் மனிதன் ஆத்ம சொரூபத்தை அடைவதைத் துரிதப்படுத்துகின்றன. அதை உணர்ந்து நம்பிக்கையுடன் வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும். ஒருவர் சொல்வதை அவர் வாழ்க்கையில் கடைப்பிடிக்காவிட்டால், அவர் சொல் ஏற்றம் பெறாது. இதற்கு ஒரு கதையுண்டு. ஒரு காலத்தில் ஒரு பாகவதர் இருந்தார். அந்த ஊர் அரசரிடம் பாகவதம் சொல்ல வேண்டுமென்று அவருக்கு ஆசை. முதல் தரம் போனார். அரசர் அவரைப் பார்க்க வில்லை. அடுத்தடுத்து பலதரம் போன பிறகும், அவரிடம் பாகவதம் கேட்க அரசர் சம்மதிக்க வில்லை. அவருக்கே வெறுப்பு ஏற்பட்டுப் பாகவ தத்தைத் தன் வீட்டில் தானே சொல்லி, அதன் படி நடக்க ஆரம்பித்தார். சில நாளில் அவரது பிரபாவத்தைக் கேள்விப்பட்டு, அரசரே அவர் வீட்டிற்கு வந்து, பாகவதம் சொல்லுமாறு கேட்டார். அப்போது அவர் பாகவதத்தை அரசருக்குச் சொல்ல விருப்பப்படவில்லை. அதன் பிரபாவம் அவரை உயர்ந்த நிலைக்குக் கொண்டுபோய்விட்டது.

மனிதன் முதலில் தன்னைத் தனக்குத்தானே உபயோகப்படுத்தத் தெரிந்து கொள்ளவேண் டும். பழக்கத்தில் அந்த நிலை ஏற்பட்டுவிடும். இதற்கும் ஒரு கதையுண்டு. ஒரு திருடன் ஒரு கூரை வீட்டில் திருடப் போகும்போது, பூசணிக்காய் மீது விழுந்துகொண்டு போனான். அவன் உடம்பில் பூசணிக்காயின் சாம்பல் படிந்திருந்தது. வீட்டுக்கூரையிலிருந்து உள்ளே அவன் திடீரென்று விழ நேர்ந்தது. வீட்டிலிருந் தவர், சாம்பல் பூசிய மேனியுடன் திடீரென விழுந்த அவனை, ஒரு மகான் என்று நினைத்து வணங்கினர். பூசணிக்காய் சாம்பல் பட்ட தற்கே, இந்த மரியாதை கிடைத்தால், உண்

மைப் பக்தனாக மாறினால் எவ்வளவு கௌரவமாக இருக்குமென்பதை உணர்ந்து, திருடன் திருந்தினான் என்பர். வெளி வேஷம் போடுவதாக இருந்தாலும், நாளடைவில் அதுவே அவனைத் திருத்தக் கூடும். இறைவனை வழிபடும் முறைகளைத் தெரிந்து புரிந்து செய்தால் சீக்கிரம் பலன் கிடைக்கும். தெரியாமல் செய்தால், பலன் நிதானமாக வரும். எதற்கும் பலனில்லாமல் போகாது.

நாம் பார்த்திருப்போம். ஏதோ சினிமா ஞாபகமாகச் சைக்கிளில் சிகரெட்டை ஊதிக் கொண்டு செல்பவர் கூட, கோயிலையோ சுவாமியையோ பார்த்ததும், சிகரெட்டைக் கீழே போட்டு விட்டுக் கன்னத்தில் போட்டுக் கொண்டு, ஒரு நிமிஷம் இறைவனைப் பிரார்த்திப்பார்கள். அந்த ஒரு நிமிஷம் அந்த நபர் ஆத்ம சொரூபத்தைக் காண முயல்வது, ஓராண்டு பலன் தரும். அந்த ஒரு நொடியே நிரந்தரமானால், சீக்கிரம் பலன் கிடைக்கும். இப்போது நாம் தொடக்கத்தில்தான் இருக்கிறோம். இது வளர வேண்டும். வளர்ந்த நிலையிலேயே ஆத்ம சாந்தி, ஜீவன் முக்தி முதலியவற்றை அறிய முடியும். அது இறுதி நிலை. சிறு வயது முதலே அதற்குப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். பழக்கப்படுத்திக் கொள்ள உதவப் பல சடங்குகள் உண்டு. நமக்குப் புரியாததால் அவை அர்த்தமற்றவை என்று சொல்லக் கூடாது. அர்த்தமற்ற சடங்கு என்று எந்த மதத்திலும் கிடையாது. நமக்குப் புரியாமலிருக்குமே தவிர, அதற்குப் பொருள் இல்லாமலிருக்காது. நம்பிக்கை விசுவாசத்துடன் கடைப்பிடிக்க வேண்டும்.

மதம் என்பது பணக்காரருக்கு மட்டுமானதில்லை. சாமான்யர் முதல் பணக்காரர் வரை எல்லோருக்கும் உண்டு. கடவுளை அடைய மதம் ஆரம்பம். கலாசாரம் நடைமுறையில் கடைப்பிடிக்கக் கூடியது. தத்துவம் இறுதியாக அடைய வேண்டிய நிலை. அதனால்தான், இம் மூன்றையும் இம் மகாநாட்டில் குறிக்கோள்களாக எடுத்து வைத்தோம்.

பரம்பரை பரம்பரையாக ஒருவர், எந்த வழியைக் கடைப்பிடிக்கிறாரோ அதை விடக் கூடாது. புதியதை நாடக் கூடாது. புரியாத பழமையே, புரியாத புதுமையைவிட மேலானது ஆகும். பழமையைப் பற்றி நன்கு தெரியாததால் நம்பிக்கையில்லாமல், புதிய வழியைப் பற்றியும் நன்கு தெரிந்து கொள்ளாமல் நடப்பது தவறு. அர்த்தம் புரியவில்லை என்பதற்காகக் கண்டனம் செய்யாமல், நல்ல நூல்களைப் படித்து ஆத்ம சொரூபத்தை அடையச் செல்லும் வழியே, சாமான்ய மக்களுக்குத் தேவை.

தினப்படி காலை முதல் மாலை வரை செய்ய வேண்டிய வழிகளை அறிந்து நடப்பதுடன், புதுமை மீதுள்ள மோகத்தை முடிந்த அளவு குறைத்துக் கொண்டு நடப்பதே நல்லது. தினமும் காலை முதல் செய்யும் காரியங்களை டைரி போட்டுக் குறித்து வைத்துக்கொண்டு பார்த்தால், அவரவர் மனதிற்கே நல்லது செய்ய வேண்டுமென்று தோன்ற ஆரம்பித்து விடும். தினமும் சாப்பிடும் உணவு, தண்ணீர், காப்பி முதலிய பானங்கள், செய்த நல்ல காரியங்கள், கெட்ட காரியங்கள், எல்லாவற்றையும் எழுதி வைத்து மாதக் கடைசியில் பார்த்தால் எழுதியவருக்கே பிரமிப்பு ஏற்படும். எவ்வளவு கெடுதல்களைச் செய்திருக்கிறோம் என்று நினைத்து மனம் மாறுவர். நல்லதைப் பற்றிச் சிந்தித்துக் கவலைப்பட்டால் நல்லதே நடைபெறும்.

7) கடமைகளைச் செய்க :

ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய கடமைகளைத் தவறாமல் செய்ய வேண்டும். கடமையைச் செய்தால் அதிலேயே கடவுளைக் காணலாம். கடமைகளை மறந்து இறைவழிபாட்டுக்கு அவகாசம் இல்லை என்று யாரும் சொல்லக் கூடாது. கடமையின் ஒரு பகுதிதான் இறைவழிபாடு. வண்டிக்கு இரண்டு சக்கரங்கள் போல, கடமையும் இறைவழிபாடும் ஆகும். கடமையை மறந்து கடவுளை அணுகுவதால்தான், இன்று நாம் துன்பப்படுகிறோம். கடவுளை மட்டும் வழிபட்டால் அதற்குச் சிறிதுதான் பலன். கடமையுடன் செய்தால்தான் முழுப் பலன் கிட்டும். கடமையை உதறினால், கடவுள் நம்மைக் கைவிட்டு விடுவார். சமுதாயக் கடமை, தேசக் கடமை, எதையும் மறக்கக் கூடாது. தேசத்தையே தாய் என்று வழிபடுகிறோம். ''கோ மாதா'' என்று பசுவை வணங்குகிறோம். இவ்வாறு ஒவ்வொன்றிலும் கடவுளைக் காணும்படி கூறப்பட்டுள்ளது. கடமையே கடவுள் என்ற எண்ணத்துடன் இருந்தால், இன்பங்கள் கூடித் துன்பங்கள் குறையும். கடவுளையும் கடமையையும் சேர்ந்து வழிபடுவதே, இந்து சமயத்தின் சாரம். அவரவர் கடமையை அவரவர் செய்தால், இறைவன் அருள் பரிபூர்ணமாகக் கிட்டும்.

கடமையின் சிறப்பை வலியுறுத்த ஒரு கதை உண்டு. ஒரு சிறுவன் கல்வி கற்க வேண்டி, தாய் தந்தையரைப் பேணிப் பாதுகாக்க வேண்டிய காலத்தில், ஒரு சாமியாரை அணுகி மந்திரங்களைக் கற்றுச் சித்திகளை அடைந்தான். ஒரு கொக்கைப் பார்த்த மாத்திரத்தில் அது எரிந்து விழுந்தது. பின்னர் ஒரு வீட்டில் பிச்சை கேட்கையில், அந்த வீட்டிலுள்ள அம்மையார் தாமதமாக வரவே, பறவையைப் பார்த்தது போல, ஒரு பார்வை பார்த்தான். உடனே அந்த அம்மையார் ''கொக்கென்று நினைத்தாயோ? கொங்கணவா'' என்று கேட்டார். தான் கொக்கை எரித்தது அவளுக்கு எப்படித் தெரிந்தது என்று கேட்டான். கேட்டவுடன், அவள் அதை அறிய ஒரு கசாப்புக் கடைக்காரனிடம் அனுப்பினாள். அந்தக் கடைக்காரர் சிறுவனைப் பார்த்த மாத்திரத்தில், அம்மையார் அனுப்பினாரா? என்று கேட்டார். இது எப்படி அவருக்குத் தெரிந்தது என்பது, சிறுவனுக்கு இன்னும் ஆச்சரியத்தை ஊட்டியது. பின்னர் அது பற்றிக் கேட்டபொழுது தாய் தந்தையரைத் தான் பேணிப் பாதுகாப்பதால், அந்தச் சக்தியை அடைந்ததாகவும், கணவனுக்குக் கடமையைச் செய்ததால் அம்மையாருக்கு அந்தச் சக்தி கிடைத்ததாகவும் கசாப்புக் கடைக்காரர் விளக்கினார். இவ்வாறு நமது புராணங்களில் கடமையின் சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. கடமையைச் செய்தால் கடவுள்

நேரில் வருவார். மந்திர தந்திரம் தேவையில்லை.

8) கர்மசித்தாந்தம் :

துன்பத்திற்குக் காரணம் முன்வினைப் பயன் என்பது, கர்ம சித்தாந்தம். இதுதான் இந்து மதத்தின் அடிப்படை. இதை விளக்க நல்ல உதாரணம், ரேஷன் கார்டு ஆகும். ஒரு குமாஸ்தா வந்து வீட்டில் எத்தனை நபர்கள் உள்ளனர்? வயது என்ன? என்பதைக் கார்டில் எழுதிக் கொடுத்து, எவ்வளவு கிலோ உணவு தான்யம் என்றும் எழுதிக் கொடுத்துப் போகிறார். ஆளுக்கு அரை கிலோ வீதம் ஐந்து பேருக்கு இரண்டரைக் கிலோ என்று கார்டில் கூறப்பட்டுள்ளது. கார்டு ஜடம்தான். அதில் ஒன்றுமில்லை. ஐந்து என்று கார்டில் கூறப்பட்டுள்ளது. கிலோ. இதுபோல நாம் செய்யும் நல்லது, கெட்டது போன்றவை குறிப்பெடுக்கப்படுகின்றன. அதுதான் கர்மாவாகும். கையில் பணம் உள்ளவர்கள் விரைவாகப் பயன்படுத்துகிறார்கள். அதுபோல வேகமும் விரைவும் இருந்தால் அதற்குத் தகச் செயல்படும். பத்து ரூபாய்ப் பொருளுக்குப் பதில், எட்டு ரூபாய் பொருள்கள் வாங்குகிறேன் என்றால், கடைக்காரர் சம்மதிப்பார். ஆனால் கூடுதலாகக் கேட்டால் கார்டில் எழுதியுள்ள அளவுக்கு மேல் கொடுக்க முடியாது என்பார். இறைவனும் அதுபோலக் கூடுதலாகக் கர்மா பலனைத் தர மாட்டான். இருப்பதைக் குறைக்கத்தான் முடியும். சில அதிகாரிகள் க்யூவில் நிற்காமல் ஐந்து கிலோ உணவு தான்யத்தைப் பெறுவர். நல்லதோ கெட்டதோ அதிக அளவு செய்தால், காத்திருக்க வேண்டியதில்லை என்பதற்கு இதைச் சொல்லலாம். கர்ம சித்தாந்தத்தை அனுசரித்துத்தான் கடவுள் நமக்குக் கொடுக்க முடியும். விதியை அழிக்க முடியாது. ஆனால் குறைக்க முடியும். இனிமேலாவது தவறு செய்யாமல் இருக்க வேண்டும் என்பதைக் கர்ம சித்தாந்தம் வலியுறுத்துகிறது. மகான்களும் கூட வியாதியால் பீடிக்கப்படுகின்றனர். ஆனால் அவற்றின் தன்மையை அவர்கள் உணர்வதால், அவர்களை அவை துன்பப்படுத்துவது இல்லை. நாம்தான் அதை நினைத்துக் கவலை கொள்கிறோம்.

சிறிது நல்ல காரியம் செய்தாலும் பலன் உண்டு என்று கீதை கூறுகிறது. நம்பிக்கையுடனும் உறுதியுடனும் அவற்றைச் செய்தால் நல்ல பலன் உண்டு. நல்லவர்களாக வாழ நாம் சிறிது முயற்சி செய்தாலும் போதும். அது பெருகிப் பெரிதாகும்.

9) கடவுளைக் காண :

கடவுளைக் காண இரு வகை முறைகள் உள்ளன. உருவ வழிபாடு , தியானம், பிரார்த்தனை, பஜனை இவைகளைச் செய்தால், கடவுளின் உருவம் நம்மில் நின்று, நம்மையும் அறியாமலே ஆனந்தக் கண்ணீர் அரும்பும். இது ஒரு வகை.

மற்றொன்று அனுபவ முறை. பல ஆண்டுகள் தியானம், யோகம் செய்வதால், அனுபவ நிலை கிட்டும். அப்பொழுது பாட்டு, பஜனை முதலியன தேவையில்லை. மின்சார சக்தியை 'மைக் வேலை செய்யும்போது தெரிந்து கொள்ளலாம். அது புரியாவிட்டால் 'ஒயரை' வெட்டித் தொட்டால் ஷாக் அடிக்கும். இதை இந்த முரட்டுத்தனமான முறை மூலம் தெரிந்து கொள்ளலாம். அதுபோலத்தான் உருவ வழிபாட்டின் மூலம் கடவுளை அடைவது எளிது. கடினமான முறையில் அறிய வேண்டுமானால், அனுபவத்தால் அறியலாம். ஆனால் இதிலும் பலன் உண்டு. ஜாக்கிரதை அவசியம். கல்கண்டில் தித்திப்பைக் காணமுடியாது. ருசியால் உணரத்தான் முடியும். கல்கண்டை வாயில் வைத்துப் பத்துப் பதினைந்து நிமிடம் கரைத்துச் சாப்பிடுவது, எளிய முறையில் கடவுளைக் காண்பதற்கு ஒப்பாகும். சீக்கிரமாகச் சாப்பிடுவதாக இருந்தால் கல்கண்டைக் கடித்துச் சாப்பிடலாம். இதைக் கடினமான முறைக்கு ஒப்பிடலாம். ஆனால் இரண்டிலும் தித்திப்பு ஒன்றுதான். பலவித உணவுப் பண்டங்களைச் சாப்பிடுகிறோம். செயல் முறை வேறு, விலை வேறு, உருவம் வேறு. ஆனால் அதன் மூலம் கிடைக்கும் திருப்தி ஒன்றுதான். அதுபோல, சிவன், விஷ்ணு, யாரைக் கும்பிட்டாலும் ஒரே பலன்தான். அறியாமை காரணமாக இறைவன் நமது வேண்டுகோளுக்குச் செவி சாய்க்கவில்லையே என்று வருந்துகிறோம். இறைவனைக் கும்பிட்டால் ஒருகாலும் துன்பம் வராது. நண்பரிடம் கவலைகளைச் சொன்னால், அவர் தம் கவலைகளை நம்மிடம் சொல்வார். இறைவன் அப்படி செய்வதில்லை. அவரிடம் நம் கவலைகளைச் சொன்னால், அவை கட்டாயம் குறையும். துன்பம் என்பது நாமாகவே வரவழைத்துக் கொள்வதாகும். கடவுள் கொடுப்பதில்லை. இன்பமும் துன்பமும் உலகில் உண்டு. மின்சாரம் நல்லதும் செய்யும் கெட்டதும் செய்யும். ஆனால் விஷயம் தெரிந்தவர்கள் கையுறை அணிந்து மின்சாரத்தை நெருங்கினால் ஷாக் அடிப்பதில்லை. அதுபோல இறைவன் நம்பிக்கை என்ற கிளவுஸ் போட்டால்,நமக்குத் துன்பம் வராது.

இன்று அரசாங்கத்தை விட ஆன்மீகத்தினால் வந்த கஷ்டங்களே அதிகமாக உள்ளன. ஒவ்வொரு சாமியாக, ஒவ்வொரு சாமியாராக அலைந்து திரிந்து கஷ்டப்படுகிறான் மனிதன். பல தெய்வங்கள் இருப்பது, ஒரு தெய்வத்தைத் தேர்ந்தெடுப்பதற்காகவே, குழப்புவதற்காக அல்ல. மூர்த்திகளில் ஏற்றத் தாழ்வு பார்க்காமல், எந்த ஒரு மூர்த்தியிலாவது அசையாத நம்பிக்கை கொள்ள வேண்டும். வேறு வேறு கடவுளைக் கும்பிடக் கூடாது என்று இதற்கு அர்த்தமல்ல. பொதுவாகக் குடும்பத்திற்கு ஒரு டாக்டர் உள்ளார். ஆனால் ஏதேனும் கடுமையான வியாதி வந்தால், அதற்கான ஒரு ஸ்பெஷலிஸ்டை அணுகுகிறோம். மடத்தில் கூட சிவ பூஜை பிரதானம். ஆனால் இராம நவமி, கோகுலாஷ்டமி, நவராத்திரி விழாக்களின் போது இராமன், கிருஷ்ணன், அம்பிகையை பூஜிப்பது உண்டு. தினசரி ஒரு வழிபாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும். எப்பொழுதாவது மற்ற மூர்த்திகளையும் வழிபடலாம் எப்பொழுதும் ஸ்பெஷலிஸ்டுகளிடம் போனால், உடம்பு என்ன ஆகும்?

—(தொடரும்)



இராமேச்சுரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் அம்பாள் சன்னதி
பிர்லாமண்டபம் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்ற சமயம்
கலந்துகொண்ட பெருமக்கள்.



...MISSIONER OF TAM... NADU
...VES AND HISTORICAL RESEA...
9 .. 197..
EGMORE, MADRAS...

இராமேச்சுரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் அம்பாள் சன்னதி
பிர்லாமண்டபம் அடிக்கல் நாட்டுவிழா நடைபெற்ற சமயம்
கலந்துகொண்ட பெருமக்கள்.



வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய் ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.